விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 057 வள்ளுவர் ஆண்டு 2047 தை 08, வெள்ளிக்கிழமை 22.01.2016

### காணிகள் கையளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22
வலி.வடக்கில் கடந்த மாதம் விடுவிக்கப்பட்ட காணிகளை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப் பக். 22

# அதியுச்ச சமஷ்டி தீர்வே வேண்டும்

## ஒற்றையாட்சிக் கோட்பாட்டை ஒருபோதும் ஏற்கமாட்டோம்; கூட்டமைப்பின் கிளிநொச்சிக் கூட்டத்தில் சம்பந்தன் சூளுரை

யாழ்ப்பாணம், ஜனவரி 22
ஒற்றையாட்சிக் கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. ஐக்கிய இலங்கைக்குள் பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் அதியுச்ச சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வு எட்டப்பட வேண்டும். எனவே இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து தீவிரமாக முயற்சிக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் பக். 22



"புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்."

### காணாமற்போனோர் தொடர்பில் ரணிலிடம் கேள்வி எழுப்புவேன்

உறவுகளிடம் கூறினார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 22
காணாமற்போனவர்கள் உயிரிழந்துள்ளார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய கருத்துத் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நான் கேள்வி பக். 22

## கொழும்பு வந்தது விக்கிரமாதித்யா



கொழும்பு, ஜன. 22
இந்தியக் கடற்படையின் மிகப்பெரிய விமானம் தாங்கிப் போர்க் கப்பலான 'ஐ.என்.எஸ். விக்கிரமாதித்யா' நல்லெண்ணப் பயணமாக நேற்றுக் காலை கொழும்புத் பக். 22

## இலங்கையின் புகழை உயர்த்த புதிய பொருளாதாரத் திட்டம்

சுவிஸில் தெரிவித்தார் பிரதமர் ரணில்

-டாவோஸிலிருந்து உதயன் பிரதிநிதி-



டாவோஸ், ஜன. 22
இலங்கை பல ஆயிரம் ஆண்டுகளாகவே ஆசியாவின் வர்த்தக மற்றும் பொருளாதார மையமாகப் புகழ் பெற்றிருந்தது. மீண்டும் அந்தக் கடந்த காலப் புகழை இலங்கைக்கு வென்றெடுப்ப பக். 22

## சம்பந்தன் ஊடாகவே அதிகாரப் பகிர்வுக்கு முயற்சிகள் வேண்டும்

வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22
எங்களுடைய சிறந்த தலைவர் இரா.சம்பந்தன். அவரின் ஊடாக அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், நாடாளுமன்ற மற்றும் பக். 22

முச்சந்தி முரளி



ஒற்றுமைக்காகத்தான் கிளிநொச்சியில் கூடினார்களோ...

## காணாமற்போனோரின் உறவுகளை கண்டு ஓடிய வடமாகாண முதல்வர்

யாழ்ப்பாணம், ஜன. 22
வடக்கு மாகாண முதலமைச்சரின் வாகனத்தைச் சுற்றி வளைத்த போது, முதலமைச்சர் அவர்களுக்கு எந்தப் பதிலையும் வழங்காது - வாகனத்திலிருந்து இறங்காது மாற்றுப் பாதையினூடாக வெளியேறினார். எங்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர், எங்களுக்குப் பதில் வழங்காமல் இவ்வாறு செல்வது தமக்கு ஏமாற்றமாக இருப்பதாகக் காணாமற்போனோரின் உறவுகள் தெரிவித்தனர்.
கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் முதலமைச்சர் பக். 25

## வானில் வந்த கும்பலால் பட்டப்பகலில் கடத்தப்பட்டார் பெண் கிராம அலுவலர்

முல்லைத்தீவில் வைத்து அவர் மீட்பு
கடத்தல்காரர்களில் மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 22
அலுவலகத்துக்குச் சகோதரனுடன் சென்றுகொண்டிருந்த கிராம அலுவலரான பெண், இடைவழியில் வைத்துத் தாக்கப்பட்டுக் கடத்தப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் வழங்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவில் பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தில் வைத்துக் குறித்த பெண் மீட்கப்பட்டதோடு அவரைக் கடத்திய குற்றச்சாட்டில் வாகனத்திலிருந்தவர்களில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் 3 பேர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.
தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் அங்கு பெரும் பக். 25

## வடக்கில் மீள்குடியேற்றம்; ஐ.நா. அதிகாரிகள் ஆராய்வு

முதலமைச்சருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன. 22
அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.
முதலமைச்சரின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பக். 22

## குழப்பமின்றி முடிந்தது கூட்டமைப்பின் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று சுமுகமாக இடம்பெற்று முடிந்துள்ளது. எந்தவொரு சர்ச்சை - குழப்பமும் கூட்டத்தில் இடம்பெறவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் கிளிநொச்சி பக். 22

### அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனா தளம் அமைக்க அனுமதியோம்

பிரதமர் ரணில் உறுதிபடத் தெரிவிப்பு

புதுடில்லி, ஜன.22
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் கடற்படைத் தளத்தை அமைக்க, சீனக் கடற்படைக்கு ஒருபோதும் இலங்கை இடமளிக்காது என்று அடித்துக் கூறியுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
அத்துடன், கடந்த அரசின் ஆட்சியின்போது பாதிக்கப்பட்ட இந்தியாவுடனான உறவை பக். 22

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 7 நாள்களில்
JITF 2016
7th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.கூ. அலுவலக முற்றுகைக்கு வவுனியா பிரஜைகள் குழு ஆதரவு

வவுனியா, ஜன.22

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் சங்கத்தால் கூட்டமைப்பின் அலுவலகங்களை முற்றுகையிடும் போராட்டங்களுக்கு தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவும் ஆதரவு வழங்கவுள்ளது என்று அதன் தலைவர் தெரிவித்தள்ளார்.

குறித்த முற்றுகைப் போராட்டமானது சுயமரியாதையுடனும், பகுத்தறிவுடனும் வாழத்துடிக்கும் ஒரு சமுகத்தின் அரசியல் அபிலாசையின் வெளிப்பாடானதே எனவும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் சங்கத்தின் முற்றுகைப் போராட்டங்களை அடுத்து, பிரஜைகள் குழுவால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

சுயமரியாதையுடனும் பகுத்தறிவுடனும் வாழத்துடிக்கும் ஒரு சமூகத்தின் அரசியல் அபிலாசையின் வெளிப்பாடாகவே குறித்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் சங்கத்தின் முற்றுகைப் போராட்டத்தை "வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு" நோக்கும்.

சமவேளையில், தமிழ் இனத்தின் இருப்பைத் தீர்மானிக்கப் போகும் அரசியல் சாசன திருத்தத்துடன் கூடிய அரசியல் தீர்வுக்கான காலத்தில், விடுதலை எனும் உன்னத இலட்சியத்துக்காக அளவிட முடியாத இழப்புகளையும் வலிகளையும் சந்தித்து, உச்சபட்சதியாகங்களைச் செய்துள்ள தமிழ்த் தேசிய இனத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடிமைச்சாசனம் எழுதத்துடிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை ஒலி எழுப்பும் சூழலில், எங்கே தமிழ் இனம் கூச்ச நாச்சமின்றி, சூடு சொரணை எதுவுமின்றி இருந்துவிடுமோ? என்று நம்மை பீடித்து உலுக்கிக் கொண்டிருந்த அச்சம் நீங்கி உளத்தூய்மையுடனும், நெஞ்சுரத்துடனும் "வவுனியா பிரஜைகள் குழு தனது முழுமையான ஆத ரவை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் சங்கத்தின் முற்றுகைப்போராட்டத்துக்கு வழங்குகின்றது என்றுள்ளது.

(ற-21-402)

## சுன்னாகம் பொலிஸ் பிரிவில் அதிகரிக்கின்றன திருட்டுக்கள்

*நான்கு நாள்களில் மூன்று கொள்ளைகள்*

யாழ்ப்பாணம்,ஜன.22

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த நான்கு நாள்களில் மூன்று கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் பகல் வீடு உடைத்து உள்ளே சென்ற திருடர்கள், 11 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். வீட்டில் இருந்த அனைவரும் திருமண வீடு ஒன்றுக்குச் சென்றிருந்த சமயம் முன் கதவை உடைத்து இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதே போன்று நேற்று முன்தினம் இரவு இணுவில் பப்பாம் தோட்டப்பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி 23 ஆயிரம் ரூபா பணம் மற்றும் காதில் அணிந்திருந்த தோடுகள் மற்றும் சங்கிலியை அபகரித்து சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதே போல் கடந்த 18 ஆம் திகதி உடுவில் மான்ஸ் பாடசாலை பகுதியில் உள்ள வயோதிப மாதுவை அச்சுறுத்தி நகை பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் வழக்கைப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், இதுவரை சந்தேக நபர்கள் எவரையும் கைது செய்யாதமை குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ஐ-107)

## கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.22

கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ். எம். ஹகந்தவெல தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று பொறுப் பேற்றுக் கொண்டார்.



கடந்த மூன்று வருடங்களாக கடமையாற்றியபிரதானபொலிஸ் பரிசோதகர் சிறிநிக சஞ்ஜீவ ஜெயக்கொடி, வென்னப்புவ பொலிஸ் நிலையத்துக்கு திடீர் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து, பொலிஸ் பரிசோதகர் ஹகந்தவெல கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸ் திணைக்களத்தால் புதிய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பொறுப்பதிகாரி,

பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றி பிரதேசத்தில் இடம் பெறும் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது. பொதுமக்கள் பொலிஸாருடன் நட்பாக பழகுவதன் மூலமே குற்றங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் எனத் தெரிவித்தார்.

(ற-ஐ-107)

## சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம்

சாவகச்சேரி, ஜன.22

சரசாலை வடக்கு சனசமூக நிலையக் கட்டடத்தைப் புனரமைத்துப் புதிய கட்டடம் அமைக்க சங்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கூடிய போது, சங்க அங்கத்தவர்களால் ஒருமித்த குரலில் புதிய கட்டடம் அமைக்க அதற்கு ஊர்மக்களிடமும் புலம்பெயர் நாடுகளில் உள்ள உறவுகளிடமிருந்தும் நிதி சேகரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சரசாலை பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சனசமூகக் கட்டடம் சுமார் 70 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருப்பதால், இதனைப் புதுப்பிக்க நிலைய அங்கத்தவர்களும் புலம்பெயர் நாடுகளில் உள்ள பிரதேச மக்களும் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் புதிய வடிவில் கட்டடம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-9)

## ரூ. 15 லட்சம் பெறுமதியான பொருள்கள் ஓடு பிரித்து கந்தர்மடத்தில் கொள்ளை

*சந்தேக நபர்கள் மூவர் கைது*

யாழ்ப்பாணம்,ஜன.22

வீட்டின் ஓட்டைப் பிரித்து உள் நுழைந்து சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் யாழ். கந்தர்மடம் கல்லூரி ஒழுங்கையில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் நடந்துள்ளது.

இதுகுறித்து வீட்டு உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

11 பவுண் தாலிக்கொடி, 8 ஆயிரம் கனேடியன் டொலர், 6 ஆயிரம் உட்பட 15 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுஓடுஉடைத்துகொள்ளையடித்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கந்தர்மடம் பகுதியில் தங்கி நின்று வேலை செய்யும் 3 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணையை மேற்கொண்ட பின்னர், யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஐ-106)

## ஆபாச காணொலி பார்த்தவர் கைது

கைபேசியில் ஆபாச காணொலி பார்த்த 45 வயது நபர் ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், யாழ். கலட்டிச் சந்தியில் நின்று கைபேசியில் ஆபாசப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்த வீதியால் சென்ற பொலிஸார் நபரின் நடத்தையில் சந்தேகம் கொண்டு கைபேசியை வாங்கிப் பார்த்தபோதே விடயம் அம் பலமாகியுள்ளது.

உடனடியாக பொலிஸார் நபரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஐ-106)

## உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண அங்குல நிலத்திலும் விவசாயம் தேவை

*வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.22

எமது மக்கள் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த வேண்டும். நாங்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும் என்பதிலும் நான் மிக உறுதியாக இருக்கின்றேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ். நூலக வடமாகாண சபைக் கருத்தரங்கு மண்டபத்தில் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம் (2016-2018) மாகாண மட்டத்திலான செயற்பாட்டுக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் பற்றி மக்கள் போதிய அக்கறை எடுக்க வேண்டும். இரசாயனப் பசளை, பீடைக்கொல்லிப் பாவனையை முற்றாகப் புறக்கணித்து, எவ்வாறு எமக்கு வேண்டிய மரக்கறிகளையும், பழங்களையும் நாமே உருவாக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

பாடசாலை மாணவர்களையும் இதில் பங்கு பற்றச்செய்ய வேண்டும். முன்னர் எல்லாம் வடகிழக்கு மாகாணங்கள் நாட்டின் உணவுற்பத்தியில் 60 விகிதத்தைத் தாமே பொறுப்பேற்று உற்பத்தி செய்தன. மீண்டும் அந்த நிலை உருவாக வேண்டும். அதற்கு முன் இரசாயனப் பசளைக்குப் பதில் இயற்கைப் பசளையைப்பாவிக்க வேண்டும். இன்று நீரில் நச்சுத்தன்மை, பயிர்களில் நச்சுத்தன்மை, சூழலில் நச்சுத்தன்மை என்று பல விதங்களில் நாங்கள் பாதிப்படைகின்றோம். இவ்வாறான சூழலை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும்.

பல இடங்களில், முக்கியமாக அனலைதீவு போன்ற இடங்களிலுள்ள காணிகளில் பயிர்கள் பயிரிடப்படாமல் இருக்கின்றன. சொந்தக் காரர்கள் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட காணிகளை எமது விவசாய அமைச்சு அல்லது அதன் அனுசரணை பெற்ற நிறுவனம் ஒன்று கையேற்று பயிர் செய்து பலனை எடுத்துக் கொண்டு வருமானத்தில் ஒரு சிறிய பகுதியை அவர்களுக்குவழங்கலாம். தனியார் துறையை இது தொடர்பாக எந்தளவுக்குப் பாவிக்கலாம் என்ற கேள்வியும் எழுகின்றது. ஏதாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு வழிகாட்டுச் செயற்றிட்டமாக இதனை எமது அனுசரணையுடன் கையேற்று நடத்தலாம். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் சமூக மறுமலர்ச்சி ஏற்படலாம். படித்த இளைஞர்கள் புதிய வேளாண்மை முறைகளையும் யுக்திகளையும் கையாள வழியுண்டு. ஊருக்கும், நிலத்துக்கும், நீரிருப்பதன் அளவுக்கு ஏற்ப பயிர்களை அடையாளங்கண்டு பயிரிடக் கொடுக்க விவசாயத் திணைக்களம் உதவி புரிய வேண்டும்.

விற்பனை நிலையங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனுடன் சேர்ந்தது தான் குளிர் வசதிகள் செய்து கொடுப்பது. கார்கில்ஸ் போன்ற நிறுவனங்கள் குளிரூட்டப்பட்ட சூழலில் மரக்கறி, பழங்கள் போன்றவற்றை சில நாள்களுக்குப் பாதுகாத்துவைத்து விற்கின்றன. இது பற்றியும் நாம் கவனம் எடுக்க வேண்டும். மாகாணக் குளிர் அறைகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவேண்டும்.

எமது மாகாணத்தில் வெள்ளைச்சோறுநெற்பயிர்ச்செய்கை கூடிக்கொண்டு போகின்றதா என்று கவனித்து சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து மக்கள் நலம் நாடும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்றார்.

(ற-ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆள் தேவை

பகல்நேர (7.30-1.00) பாதுகாப்பு
உத்தியோகத்தர் தேவை.
இடம் : - திருநெல்வேலி
077 386 7458

## வேலைவாய்ப்பு

புத்தக விநியோகஸ்தர் தேவை.
(ஆண்/பெண்)
தொடர்பு: 077 2174 741

## பணிப்பெண் தேவை

தொடர்பு: 021 226 0277

இரண்டு பேர் கொண்ட குடும்பம் ஒன்றில் வீட்டில் தங்கிநின்று பணியாற்றுவதற்கு 20 இற்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட பணிப் பெண் உடன் பணிக்கு தேவை. பணிக்கு வருகின்ற பெண் மட்டுமே தொடர்பு கொள்ளவும்

## PHYSICS-PAPER CLASS

ENGLISH MEDIUM
BY:- M.KARUNAHNITHI
Mon to Thu 3.00 pm
SCIENCE CORNER- JAFFNA
0776183064

## தவறிவிட்டது

NP-ws0005 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ், ரைக்ஸ் கைதடி சந்திக்கும் கட்டுடை சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். தொடர்பு:
077 984 8430, 0774897783

## ஆசிரியர் தேவை

தொடர்பு: 077 5040 714

- தரம் 5 பிள்ளைக்கு புலமைப் பரீட்சைக்கு கற்பிக்க ஆசிரியர் தேவை.
- A/L உயிரியல் பிரிவு 3 பாடமும் கற்பிக்கக் கூடியவர்கள் தேவை.

## யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் இசைவிழா

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்தி நிதிக்காக
பழைய மாணவர் சங்கத்தினால் 23.01.2016
**சனிக்கிழமை 4.00 மணிக்கு நடைபெற இருந்த**
**இசை விழா தவிர்க்க முடியாத காரணத்தால்**
பிற்போடப்பட்டுள்ளது என்பதனை
மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.
நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

செயலாளர் - **ப.மா.சங்கம்.**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
**பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து செல்வோருக்குமானது.**



- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRANCE EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- INTERNATIONAL DIPLOMA (DELF A1): இலங்கையில் AF மட்டுமே இப் பரீட்சையை நடாத்துகிறது. இதனைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை. கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/= கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எம்முடன் இணையலாம். மொழி பெயர்ப்புகள்



*மாணவர்களுக்கு 40% கழிவு*

- இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை.
- யாழ், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.



**ஆரம்பம் 31.01.2016 2 p.m உடன் தொலைபேசியில் பதியவும்.**
**021 222 8093** 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகைபிரதகடவை → AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

# பதவி வெற்றிடம்

கீழ்வரும் வெற்றிடங்களுக்கு
பெண் பணியாளர் தேவை.

1) மருந்தாளர் - முன்அனுபவம் அவசியம்
2) காசாளர்
3) கணக்குப் பதிவாளர் - கணினி அறிவு அவசியம்

சுயவிவரக் கோவை, தகுதிச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

**இடம்** : நியூ யாழ் வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
**காலம்** : சனிக்கிழமை (23.01.16)
**நேரம்** : முற்பகல் 10.00 மணி

## யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...

edexcel PEARSON

இம் முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு விசேட
**கட்டணக் கழிவு**



**உங்கள் எதிர்கால தொழில்**
**உத்தரவாத்தினை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான**

# ACCESS Programme

**English + IT**

UK சான்றிதழ்கள்

அனுபவம் வாய்ந்த சிரேஸ்ட கொழும்பு விரிவுரையாளர் குழாமினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி வகுப்புக்கள் நவீன கற்றல் சூழலில்...

### English

- Reading
- Listening
- Spoken
- Writing

### Information Technology (IT)

- Concepts of Information Technology
- Computer Maintenance and File Management
- Microsoft
- Information and Communication
- Website Development
- Computer Programming
- Hardware and Networking

### Soft skills and Personality development

- Memory training
- Interview guidelines
- CV preparation
- Personality development
- Interpersonal skills
- Communication skills
- Leadership training

www.bcas.lk

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131

16 YEARS

Design @ www.MacroAdz.com

Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar

## அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

### அறிவித்தல்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 13.02.2016 முதல் 22.02.2016 வரை நடைபெற விருக்கும் சண்டிஹோம நிகழ்வில் பங் கேற்கும் உபயகாரர்கள் தங்களுக்கு உரிய நாள் களைத் தயவு செய்து உறுதிப்படுத்திக் கொள் ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**நிர்வாகத்தினர்.**

(#28755)
(11.15.18)

## காசி யாத்திரை

**நாள்கள்19** **ஆரம்பம் 10.03.2016**

**செல்லுமிடங்கள்:**

டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், மதுரா, கிருஷ்ணர் பிறந்த இடம், அலகபாத், கங்கா, ஜமுனா சரஸ்வதி, திருவேணிசங்கமம்,காயா, புத்தகாயா,குருச்சேத்திரம், சீத்தாமடி, காசி,ஹரித்துவார், ரிஷிகேஸ், ஜெய்பூர், உஜைனி, இராமேஸ்வரம், தனுஸ்கோடி, உத்திரகோசமங்கை, திருப்புலானி, நவபாஷாணம், ராமர்பாதம், பஞ்சமுக ஆஞ்சினேயர், திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்கா, கானகஸ்திரி நேரமிருந்தால் வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம். பதிவு செய்த பின் பூரணவிவரம் தரப்படும்.

**பெற்றுக் கொள்ளும் ருபாவிற்கு எமது சேவை**

கொழும்பு -டெல்லி, வாரணாசி- டெல்லி, சென்னை- கொழும்பு, விமானம், பயணம் முழுவதும், A/C வாகனவசதி, மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு (பிராமண சமையல்), குடி தண்ணீர், காப்பி, ரீ, இராமேஸ்வரம் போகவர ரெயின் 2 ஆம் வகுப்பு, உறங்கலிருக்கை சுற்றிப்பார்க்க வாகனவசதி, சென்னையில் ஒரு நாள் சொப்பிங் இவை அனைத்தும். மேலும் குறூப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 30 ஊர்திரும்பிய பின் தபாலில் அனுப்பி வைக்கப்படும். தரமான 2 பேருக்கு ஒரு றூம் எடுத்து தங்கவைக்கப்படுவீர்கள். மேலும் விவரங்கள் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

**கலாநிதி : T. ஸ்ரீ ரெங்கநாதன்,மகன் ராஜன்**
**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு- 11**
**T.P: 077 768 0102, 077 736 2154**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை பொது அறிவித்தல் - 2016

01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2016

2016 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்வதற்கும், புதுப்பித்துக்கொள்வதற்கும் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2016

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2016 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தத்தமது பிரிவிற்குட்பட்ட உபஅலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு/ஒட்டுசுட்டான்/ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.03.2016 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெறுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

03.வீடமைப்பு நகரசீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்.

3.1 புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத் தருகின்றேன்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டிமுடித்தவர்கள் கட்டிமுடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத் தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) – 2016

மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/ நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சமபந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப்பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும் இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2016ஆம் ஆண்டு குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

05. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் நடவடிக்கைகளில் பொருத்தப்பட்டு/ காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 28.02.2016 ஆம் திகதிக்குமுன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும் விளம்பரங்களூடான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப்பலகைகளுக்குப் பிரதேச சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப்பலகைகள் 01.04.2016 இலிருந்து எவ்வித முன்னறிவித்தலுமின்றி பிரதேசசபையால் அகற்றப்படும்.

06. பொதுச்சந்தைகள்,இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1.5KM வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள் இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

07. பொது இடங்களில் கழிவுகள் போடல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல் கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

08. பொது இடங்களிலும் வர்த்தகநிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருள்களைச் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

09. பொது சுகாதாரம் பேணல்.

சபையின் எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுசுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டி வைத்தல்.

சபையின் எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகளை உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும்.

கு.மிதிலைநாதன்,
செயலாளர்,
பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.

**வீடு வாடகைக்குத்தேவை** தொடர்பு: 077 986 6444

புறொயிலர்க்கோழி வளர்ப்பதற்கு திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், இணுவில் ஆகிய பகுதிகளில் வீட்டுடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை. தகுந்த வாடகை வழங்கப்படும். (67896) (13,15,18)

**ஓம் நமசிவாய சோதிடம்** தொடர்பு: 075 024 1319

ஜாதகம் பார்த்து கணித்து பலன் சொல்ல இந்தியா சித்தர் வழிவந்த ரவிச்சந்திர சாத்திரியார் சில நாள்கள் வவுனியாவில் தங்கியுள்ளார். (66691) (14,15)

மதுமிதா லொட்ஜ், வவுனியா.

**தொழிலாளர்கள் தேவை** தொடர்பு: 075 902 2330

வவுனியாவிலுள்ள அரிசி ஆலை ஒன்றிற்கு தொழிலாளர்கள் உடன் தேவைப் படுகின்றார்கள். (66692) (14,15)

## யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை

(கந்தரோடை, சுன்னாகம்)

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும், புதிய கட்டடத் திறப்பு விழாவும்.**

காலம் : 22.01.2016 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பி.ப ஒரு மணி
இடம் : பாடசாலை மைதானம்

தலைவர்
திரு. வ.நந்தீஸ்வரன் (அதிபர்) அவர்கள்
(யா /ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை)

பிரதம விருந்தினர்
திரு. த.சித்தார்த்தன் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள்
(கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்)

சிறப்பு விருந்தினர்
திரு. செ.சந்திரராஜா அவர்கள்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்
திரு. ம.பிரிதிவிராஜா (ஸ்கந்தவரோதயன்) அவர்கள்
(லண்டன்)

துறைசார் விருந்தினர்
திரு. சி.மகாலிங்கம் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள்
(ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி)

நன்றியுரை
திரு. தே.தேவமோகன்
(விளையாட்டுத்துறை செயலாளர்) அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலைச்சமூகம்
கந்தரோடை, சுன்னாகம்.

## பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.22

கைதடி மாதாஜி லிங்கேஸ்வர ஆலயப் பொதுச்சபைக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைவராக சோ. நவநீதனும், உபதலைவராக ஆ.க. சின்னத்தம்பியும், செயலாளராக க.பார்த்தீபனும், உப செயலாளராக செந்திப்பிரியாவும், பொருளாளராக பொ. கந்தசாமியும், போசகராக இ.குழந்தை வடிவேலும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இந்தக் கூட்டத்தில் ஆலயத்தின் உள்வீதி, வெளிவீதி புனரமைப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

(த-ஐ)

## அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.22

சாவகச்சேரி வர்த்தக உரிமையாளர் கூட்டுறவுச்சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுகிழமை மாலை 4 மணியளவில் தென்மராட்சி கலை மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(த-ஐ-ரி4)

## பதவி வெற்றிடம்

- ரொட்டி தயாரிப்பாளர் (கொத்து)
- சிற்றுண்டி தயாரிப்பாளர் (றோல்ஸ், சமுசா மற்றும் ஏனையவை)
- உணவு தயாரிப்பாளர் Rice & Curry, Fried Rice
- இந்தியன் உணவு வகைகள் தயாரிப்பாளர் தோசை வகைகள், இட்லி, வடை
- காசாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு தயாரிப்பாளர்

தர்மினி ஹொட்டேல்
1037, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 9872 808, 0770 782375

## Faculty Of Management Studies And Commerce

ORIENTATION PROGRAMME FOR THE FRESHER'S

**Academic Year 2014 / 2015**

The Orientation Programme for the Fresher's from Faculty of Management Studies and Commerce will Commence of 25th of January at 09.00 am in the Faculty of Management Studies & Commerce.

The Programme will be held from 25th of January 2016 to 29th of January 2016.

Registrar,
University of Jaffna.
21.01.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 31
ஆவது பட்டமளிப்பு விழாவில்
**கல்வியியல் முதுமாணி**
(M.Ed.Hons) பட்டம் பெற்ற எமது
பாடசாலை ஆசிரியர்
**திரு. சிவானந்தன்
நவகாந்தன்**
அவர்களுக்கு உள்ளம் நிறைந்த
பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு
மேலும் பல பட்டங்கள், பதவிகள்
பெற்று உயர்வடைய
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்,
யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை**

# அகமகிழ்ந்து பாராட்டுகின்றோம்



*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
20.01.2016 புதன்கிழமை நடைபெற்ற
31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில்*
**பொருளியல் சிறப்பு
கலைமாணிப்**
*பட்டத்தைப் பெற்ற*
**செல்வி தாட்சாயினி
விக்கினேஸ்வரன்**
BA (Hons)
*அவர்களை மனம் நிறைந்து
பாராட்டுவதோடு மேலும் பல
பட்டங்களைப் பெற
வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துவோர்:
**பெரியம்மா குடும்பம்.
புஸ்பலதா ( லதா ) –சந்திரராஜன்**


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் கடமையாற்றி தற்போது
இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள ஆசிரியை
**திருமதி கலாராணி றஜீபன்**
அவர்க்ள் 20.01:2016 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி (தமிழ்) பட்டம் பெற்றமையைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம்
யா/இளவாலை இந்து வித்தியாலயம்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



Congratulations

தையிட்டி
காங்கேசன்துறையைச்
சேர்ந்த
திரு.திருமதி செல்வராஜா சசிகலா
தம்பதியரின் ஏக புதல்வி
**Dr. அபிநயா
செல்வராஜா**(BSMS)
அவர்கள் 19.01.2016 அன்று யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில்
சித்த வைத்திய சத்திரசிகிச்சை இளமாணிப்
பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.
அவரை மருத்துவத்துறையில் சாதனைகள் புரிந்திட
வாழ்த்தி நிற்கின்றோம்.

259/1, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
**குடும்பத்தினர்.**


உ

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
# தைப்பூசதின உலகப் பெருமஞ்சத்திருவிழா



## விசேட பொங்கல்
## 24.01.2016

- **காலை 5.30 மணிக்கு** பூஜை
- **காலை 7.00 மணிக்கு** 1008 சங்குகளாலும் 1008 பால் குடப் பவனியில் வரும் பால் குட அபிஷேகம் இடம்பெறும்.
- **காலை 7.30- 8.30** மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் இணுவில் சந்தியில் புதிதாக அமைக்கப் பெற்ற நுழைவாயில் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறும்.




- **முற்பகல் 10.00 மணிக்கு** மாபெரும் 1008 பானைப் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி **மாலை 4மணிக்கு** நிறைவு செய்தல்வேண்டும். மதியம் விசேட பூஜை, பஜனை இடம் பெறும்.
- **நண்பகல் 12 மணிக்கு** அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.
- **இரவு 7 மணிக்கு** உலகப்பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வரும் நிகழ்ச்சி இடம்பெறும்.
- தொலைவில் இருந்து வந்து பொங்கல் செய்ய விரும்பும் வசதிகருதி பொங்கலுக்குரிய அனைத்துப்பொருள்களையும் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஓம் TV யில் நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்.**

இலங்கையில் புகழ்பூத்த பல பாடகர்கள் சங்கமிக்கும் மாபெரும் இன்னிசை கானங்கள் இடம்பெறும்

ஆலய தர்மகர்த்தா சபை

## விளம்பர அனுசரணையாளர்கள்

**ஆச்சி மிக்சர்**
மங்கலகரமான வைபவங்களுக்கு நாவுக்குச்
சுவையான சிற்றுண்டி, மதிய உணவு வகைகள்
குறித்த நேரத்தில் ஓடர்களுக்கு செய்துதரப்படும்.
இணுவில் கந்தசுவாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.
தொ.பே. 077 601 0039

**ஆனந்தா கட்டடப் பொருள்
விற்பனை நிலையம்**
கல், மணல், ஓடு, செங்கல் அனைத்துவகையான
[illegible]
கே.கே.எஸ். வீதி,
இணுவில் ஆஸ்பத்திரியடி.

**Tele Soon Phone Shop**
சகல விதமான Phone
வகைகளையும் மலிவாகவும்,
நம்பகமாகவும் பெற்றுக்கொள்ள
வேண்டிய ஒரே இடம்
கைதடி வீதி, உரும்பிராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சந்திரா சிவகுருநாதன்

திதி : சதுர்த்தசி
**(22/01/2016)**



மண்ணில் 21.12.1948 விண்ணில் 19.01.2011

அம்மா அவனியில் நீ
அகன்று ஆண்டைந்து
ஆனதுவோ - ஆற்றுதல்
அளிக்க யாருமின்றி நாம்
ஆறுமோ எம்மிதயம்
அன்னையே நீயின்றி...

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

குருஸ்தான்
நுணாவில் மேற்கு
சாவகச்சேரி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீனிய ஒழிப்புக்கான அலுவலர்கள் நியமனம்

## பாதீனியம் காணப்படின் இனி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 22

பாதீனியம் காணப்படும் காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்குரிய உத்தியோகத்தர்களுக்கான நியமனம் நேற்று முன்தினம்புதன்கிழமைகொழும்பு அரசால் வழங்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த 101 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தநிகழ்வுதிருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங் கினார்.



வீட்டுக் காணிக்குள் அல்லது விவசாயக் காணியில் பாதீனியம் காணப்படின் அதனை அழிக்கத் தவறியமை குற்றமாகக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இதனை அழிக்கத் தவறுபவர்களுக்கு, இலங்கையின் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒரு மாதத்துக்குக் குறையாத ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையை வழங்க முடியும். அல்லது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப் பணத்தையும் அறவிடமுடியும். இரண்டு தண்டனைகளையுமே விதிக்க முடியும்.

பாதீனியத்தை அழிக்கத் தவறுபவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் அலுவலர்களுக்கு கொழும்பு அரசின் விவசாயத் திணைக்களத்தின் செயலாளர் நாயகத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டு, அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட் டுள்ளன.

விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கமநலசேவைத் திணைக்களம் ஆகிய திணைக்களங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள இந்த அலுவலர்கள் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் தமது நடவடிக்கைகளை ஆரம்பிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்குரிய நியமனங்களை வழங்கும் நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மத்திய விவசாயத் திணைக்களத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.யூ.பி.ஜெயசுந்தர, மல்லாகம் நீதிமன்ற சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட உதவியாளர் சி.கோகுலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஐ-5)

# கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும்

காரைநகர், ஜனவரி.22

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் தரம்-1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் க.நேத்திரானந்தன் தலைமையில் நடை பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச் செயலரும், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக ஆஸ்திரேலிய காரை கலாசார மன்றத் தலைவர் த.மகாதேவன், பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான அ.கமலாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-250)

# மாடு கடத்தியோர் கைது

யாழ்ப்பாணம், ஜன.22

பளை, புல்லாவெளிப் பகுதியில் இருந்து கொடிகாமம் பகுதிக்கு மூன்று மாடுகளைக் கடத்த முற்பட்ட இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கட்டைக்காடு பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கட்டைக்காடு பகுதிக்கு சிவில் உடையில் சென்ற பொலிஸார், மூன்று மாடுகளை வடி ரக வாகனத்துடன் கைபற்றினர். மேலும் சந்தேக நபர்களில் ஒருவர் தப்பியோடியுள்ள நிலையில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாடுகளையும், வாகனத்தையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-107)

# கொடிகாமம் பொதுச் சந்தையில் சிக்கின பழுதடைந்த மீன்கள்

## வியாபாரிகள் முன்னிலையில் சுகாதார பரிசோதகரால் அழிப்பு

சாவகச்சேரி,ஜன.22

கொடிகாமம் பொதுச் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட் டிருந்த 50 கிலோவுக்கு மேற் பட்ட பழுதடைந்த மீன்கள் பொதுச் சுகாதார பரிசோதகரால் பறிமுதல் செய்யப்பட்டு வியாபாரிகளின் முன்பாக அழிக்கப்பட்டன.



மீன் சந்தைக்குள் ஐஸ் கட்டிகள் இடப்பட்ட றெஜிபோம் பெட்டிகளில் எஞ்சும் மீன்களை வைத்து மறுநாள் வியாபாரத்தில் அவற்றை விற்பனை செய்கின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டையடுத்து கொடிகாமம் பிரிவுப் பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் நேற்று சாவகச்சேரி பிரதேச சபை அலுவலர்களுடன் சென்று பார்வையிட்டார்.

இதன் போது ஒரு வாரத்துக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு, தினமும் விற்பனை செய்யப்படாத மீன்கள் பெட்டிகளில் ஐஸ்கட்டிகளுக்குள் வைத்திருந்து விற்பனை செய்வது கண்டறியப்பட்டது.

சந்தையில் உள்ள ஐந்து வியாபாரிகளிடம் விற்பனைக்கு வைத்திருந்த சுமார் 50 கிலோவுக்கு மேற்பட்ட பழுதடைந்த மீன்களைக் கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர், அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் மேற்கொண்ட வேளையில் வியாபாரிகள் மன்னிப்புக் கோரி இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபட மாட்டோம் என உறுதியளித்ததையடுத்து அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மீன்கள் அவர்களின் சம்மதத்துடன் மருந்து ஊற்றி அழிக்கப்பட்டன.

இதே வேளை இனிமேல் சந்தையில் றெஜிபோம் பெட்டிகளில் ஐஸ்கட்டிகளை வைத்து குளிரூட்டப்பட்ட மீன்கள் விற்பனை செய்யக்கூடாது எனவும் இதனை மீறுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அனைத்து வியாபாரிகளும் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (ற-ஐ-9)

# நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்ற வழக்குகள் புதிய நீதிவானிடம்

யாழ்ப்பாணம், ஜன.22

நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்றின் ஜனவரி மாத அமர்வுகள் நேற்று புதிதாக நியமனம் பெற்றுள்ள ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஏ.எம். எம். றியாலால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட வழக்கு விசாரணைகளே இங்கு விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதன் நடவடிக்கையாக நெடுந்தீவு பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட 30 வழக்குகள் நீதிவானால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மாதத்தின் பிரதி 2 ஆவது வாரத்தில் நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்றில் வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானால் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானாகக் கடமையாற்றிய செல்வநாயகம் லெனின்குமார், வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவானாக இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து புதிய நீதிவான்னாக ஏ.எம். எம்.றியால் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-107)

# அதிக சளியுடன் நீர் அருந்திய சிறுவன் வாந்தி எடுத்துச் சாவு

யாழ்ப்பாணம், ஜன.22

இருமலுடன், கூடிய சளி காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறுவன் அதிகம் நீர் அருந்திய நிலையில் வாந்தி எடுத்து உயிழிந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது என்று யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில், இணுவில் பகுதியைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அதிக இருமலுடன் கூடிய சளியினால் அவதிப்பட்ட சிறுவண், தண்ணீர் தாகமாக இருப்பதாக கூறித் தாயிடம் அதிகளவு நீரை வாங்கி அருந்தியுள்ளான். அதன்பின்னர் சிறிது நேரத்தின் பின் தண்ணீராக வாந்தி எடுத்துள்ளார்.

வாந்தி கட்டுப்பாட்டுக்குள் வராததை அடுத்து உறவினர்கள் அருகில் உள்ள இணுவில் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். பின்னர் சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-107)

# யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தை சேவையின் நிமித்தம், கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதை அடுத்து நேற்று முன்தினம் பலாலி இராணுவத் தலைமையகம், மற்றும் காங்கேசன்துறை தலைமை விடுதியில் பிரியா விடை நிகழ்வுகள் இடம்பெற்றன.

போரின் பின்னரான காலப்பகுதியில் கிளிநொச்சி, முல்லைதீவு, வன்னி பாதுகாப்புக் கட்டளைத் தலமையகத்தின் தளபதியாகக் கடமையாற்றியதுடன், கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தற்போது வரையான காலப்பகுதி வரை யாழ்.மாவட்டக் கட்ட ளைத்தளபதியாக மேஜர் ஜென ரல் நந்தன உடவத்தை கடமையாற்றியிருந்தார்.

புதிய யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியாக இராணுவத் தலைமையக இராணுவ செயலாளராக கடமையாற்றும் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க இணைத்துக்கொள்ளப்படவுள்ளார்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-107)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவளத் திணைக்களம் வசம் மக்களின் விவசாயக் காணிகள்

## ஒப்படைக்க மறுக்கின்றனர் என குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.22

மாந்தை கிழக்கு பிரதேசத்தின் துவரங்குளம் பகுதியில் உள்ள மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளை வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த காணிகளை மக்களுக்குப் பெற்றுகொடுப்பதற்கு பல முறை முயற்சித்த போதும் வனவளத் திணைக்களத்தினர் அவற்றை ஒப்படைக்க மறுக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

துவரங்குளம் பகுதியில் விவசாயம் மேற்கொண்ட மக்கள் பயிர்ச் செய்கை மேற்கொண்ட காணிகளுக்குரிய ஆவணங்களை போர் காரணமாகத் தவறவிட்டுள்ளமையை அடுத்தே வன வளத் திணைக்களத்தினர் காணிகளை கையகப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மிகவும் தொன்மையான துவரங்குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொன்டு வந்த விவசாயக் காணிகள் சீர்செய்து வழங்கபடவில்லை. முல்லைத்தீவு மாந்தைகிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட துவரங்குளத்துக்கு கீழ் கடந்த காலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த வன்னிவிளாங்கும், அம்பாள்புரம் கிராம மக்கள் அவர்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகள் திருத்தம் செய்யப்பட்ட போதும் அவை தங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த காலப் போரால் வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம் கிராம மக்கள் பயிர்செய்கையை மேற்கொண்ட காணிகளுக்குரிய ஆவணங்களைத் தவறவிட்டுள்ளனர். அதனால் அந்தக் காணிகளை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்று தெரிவித்தனர்.

துவரங்குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொண்ட குறித்த மக்களது காணிகள் தற்போது வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றது. விவசாயிகள் காணிகளுக்கான ஆவணங்களை தொலைத்திருந்த போதும் குறித்த காணிகளை அடையாளப்படுத்தியுள்ளனர்.

வனவளத் திணைக்களத்தினரிடம் இருந்து குறித்த காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கு பல முறை முயற்சித்த போதும் எந்தப் பயனும் இதுவரை கிடைக்கப்படவில்லை.

இந்த நிலையில் விவசாயிகளுக்குக் காணி ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.- என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ற-ஜ-21,ரி7)

# கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ரூ. 1 லட். பெறுமதியான பந்தல்கள்

கிளிநொச்சி,ஜன.21

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பிரதேச செயலக பிரிவு களுக்குட்பட்ட ஐந்து கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தகரப் பந்தல்கள் அண்மையில்வழங்கப் பட்டுள்ளன.



வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையின் 2015 ஆம் ஆண்டுக்கான மக்கள் பிரதிநிதிகளின் அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மாவட்டத்தில் உள்ள ஐந்து கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தகரப் பந்தல்கள் வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருநகர் வடக்கு கி.அ.சங்கம், புதுமுறிப்பு கி.அ.சங்கம், பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை கி.அ.சங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வண்ணான்கேணி வடக்கு கி.அ.சங்கம், கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு கி.அ.சங்கம் ஆகியவற்றுக்கு இவை வழங்கப்பட்டன.

தகரப்பந்தல்கள் வழங்கும் நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப் பிள்ளை, வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன், கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் நா.பஞ்சலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-9)

# கரைதுறைபற்றுப் பிரிவில் பெற்றோரை இழந்த 91 சிறார்

முல்லைத்தீவு. ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் தாய் , தந்தை இருவரையும் இழந்த சிறுவர்கள் 91 பேர் உள்ளனர் என்று பிரதேச செயலக புள்ளிவிவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இவ்வாறான சிறார்களின் கல்வி , மற்றும் வாழ்வாதாரம் தொடர்பிலான விசேட திட்டத்துக்கான முன்மொழிவிலேயே விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் தனி அங்கத்தவரைக் கொண்ட குடும்பங்கள் எண்ணிக்கை ஆயிரத்து 159 என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-ஜ-101)



# வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலைக்கு ரூபா 8.7 மில்லியனில் புதிய கட்டடம்

மன்னார், ஜன.22

மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 8.7 மில்லியன் ரூபா செலவில் அமைக் கப்பட்ட கட்டடத் தொகுதியின் திறப்பு விழா குறித்த பாடசாலையில் பாடசாலை அதிபர் ஏ.தேவதாஸ் தலைமையில் நடை பெற்றது.

ஐந்து வகுப்பறைகளைக் கொண்ட குறித்த புதிய கட்டடத் தொகுதியை கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் உத்தியோக பூர்வமாகத் திறந்தார்.

நிகழ்வில் மும்மதங்களின் குருமுதல்வர்கள், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் டி.குயின்டஸ் மற்றும் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத் தலைவர், உறுப்பினர்கள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டடத் திறப்பு விழாவின் நிறைவில் பாடசாலை முன்றிலில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ற-ஜ-21)

# பன்றியுடன் விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் கோமா நிலையில்

## நெடுங்கேணி நயினாமடுவில் சம்பவம்

வவுனியா, ஜன.22

காட்டுப் பன்றியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் நினைவற்ற நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்து பயணித்த அவரது சகோதரியும் காயமடைந்த நிலையில் நெடுங்கேணி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வவுனியா நெடுங்கேணி நயினாமடு பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு நடந்துள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராசா சிவகுமார் (வயது-32) எனும் குடும்பஸ்தரே விபத்துக்குள்ளாகி கோமா நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரவு 7.30 மணியளவில் குறித்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது காட்டுப்பன்றி ஒன்று மோட்டார் சைக்கிளின் குறுக்கே பாய்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவிபத்துத்தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-21)

# மன்னார் மறை மாவட்ட ஆயரின் பணிகள் சர்வதேச ரீதியில் பாராட்டிப் பேசப்பட்டவை

## ஆயர் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு

மன்னார், ஜன.22

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகையின் 23 ஆண்டு கால தியாகம் நிறைந்த, அவரது உண்மைக்கான நீதிக்கான குரலும் , அவருடைய மனித நேயப் பணிகளும் இலங்கையில் மட்டுமல்ல மாறாக உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு, பாராட்டப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்- இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக பல அரும்பணிகள் செய்த ஆயருக்கு ஏற்பட்ட நோய் எம் எல்லோரையும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது. ஆயர் செய்த பணிகளும் அவருடைய உண்மைக்கான குரலும் தொடர வேண்டும் என்பதே எல்லோருடைய செபமாகும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

அவர் தற்பொழுது பல சிகிச்சைகளுக்குப் பின்பதாக ஓரளவு உடல் நலம் தேறி ஆயர் இல்லத்தில் ஓய்வு பெற்று வருகின்ற வேளையில் பல பிரமுகர்கள், அவரால் உருவாக்கப்பட்டவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பங்கு மக்கள் என்றும் பலர் ஆயரை சந்திப்பதுடன், மன்னார் மறைமாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அப்போஸ்தலிக்க பரிபாலகரான அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையைச் சந்தித்தும் ஆசீர் பெற்றும் செல்கின்றனர்.

ஆனால் கடந்த சில காலங்களாக அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகையின் உடல் நிலை குறித்தும் மற்றும் மறை மாவட்டம் குறித்தும் வெளிவருகின்ற தவறான மற்றும் திரிபு படுத்தப்பட்ட கருத்துக்கள் எங்களுக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் தருகின்றது.

எதிர்வரும் காலங்களில் ஆயரைச் சந்திக்கவரும் பிரமுகர்களோ, அரசியல்வாதிகளோ அல்லது அவர்களுடன் வருகை தரும் பத்திரிகையாளர்களோ இங்கு பேசப்படும் விடயங்களை மிகைப் படுத்தியோ அல்லது அவற்றை தங்களுக்குச் சாதகமாகவோ மாற்றி திரித்துக் கூறி மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் இனிவரும் காலங்களில் ஆயர் குறித்தோ மற்றும் ஆயர் இல்லத்தில் நிகழும் எந்த நிகழ்வாகினும் ஆயர் செயலகத்தின் அனுமதி இன்றி தன்னிச்சையாக செயற்பட்டு எந்தக் கருத்துக்களையும் சமூக வலைத்தளங்களிலோ அல்லது பத்திரிகைகளிலோ வெளியிட வேண்டாம் என கேட்டு நிற்கின்றோம். - என்றுள்ளது. (ற-ஜ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 20 நாள்களில் 24 பேருக்கு டெங்கு

## கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

அச்சுவேலி, ஜன.22
கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வருடம் 142 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இந்த மாதத்தின் கடந்த 20 தினங்களில் 24 பேர் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேசத்தில் நீர்வேலி, கோப்பாய், இருபாலைபகுதிகளில் டெங்குத் தொற்று அதிகமாகவுள்ளது என்று கூறப்படுகின்றது. கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்தவருடம் ஜனவரிதொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடியவுள்ள ஒரு வருட காலப் பகுதியில் 142 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர். அதேநேரம் புது வருடத்தில் இதுவரை முடிவடைந்த 20 தினங்களில் 24 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

> டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் பொது மக்கள் தங்களையும் தாங்கள் வாழும் சமூகச் சூழலையும் தன்னார்வ நிலையில் பாதுகாக்க வேண்டும்.

நீர்வேலி உள்ளிட்ட வாழைப்பயிர்ச் செய்கை நடைபெறும் தோட்டங்களில் வாழை மடலில் - குலை வெட்டிய வாழை முகப்பு தண்டுகளில் நீர் தேங்கி நிற்கக் கூடியதாக இருப்பது டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு வாய்ப்பாகவுள்ளது.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் பொதுமக்கள் தங்களையும் தாங்கள் வாழும் சமூகச் சூழலையும் தன்னார்வ நிலையில் பாதுகாக்க வேண்டும். நில மட்ட நீர்த்தொட்டிகளிலும், நீர்த்தாங்கிகளிலும் தொடர்ச்சியாக நீர் இருப்பதற்கு இடமளிக்காமல் தினசரி நீரை முழுமையாக வெளி யேற்றி நாளாந்தம் நீரை நிரப்பிப் பயன்படுத்துவதே சிறந்தது.

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2014 ஆம் ஆண்டு 220 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர். 2015 ஆண்டில் 142 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர். இது ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும் கடந்த 20 தினங்களில் 24 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பதும், மழை குறைவடைந்துள்ள தினங்களில் டெங்குத் தாக்க வீதம் அதிகரித்திருப்பதும் அச்சுறுத்துவதாக அமைந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. (ற-ஜ-11)

## வாய்க்கால், குளங்கள் புனரமைப்பு

வரணி, ஜன.22
சாவகச்சேரி கமநல சேவை நிலையம் ஊடாக பிரதேசத்தில் விவசாய சம்மேளனப் பிரிவுகள் ரீதியில் வாய்க்கால்கள் புனரமைப்பு, குளங்கள் புனரமைப்பு போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் குறித்த பிரிவு விவசாய சம்மேளனங்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம் குறித்த கமநல சேவைப் பிரிவினரால் மேட்டு நில பயிர் செய்கையாளர்களுக்கு உரம் வழங்கப்படவுள்ளது என்றும் அது தொடர்பில் உரிய விண்ணப்பப் படிவங்கள் விவ்சாய சம்மேளனங்கள் மூலம் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல் வழங்க விரும்பும் விவசாயிகள் தொடர்பான விவரங்களையும் மேற்படி கமநல சேவை நிலையம் சேகரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-122)

## புலோப்பளையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

பளை, ஜன.22
பளை பிரதேச சபையின் புலோப்பளை உப அலுவலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை டெங்குக் கட்டுப்பாட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பளை பிரதேச சபை, பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றின் அலுவலர்கள் இணைந்து டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

பிரதேச சபையால் டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக மாதாந்தம் உப அலுவலக ரீதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

## பஸ்ஸுக்கு கல் எறிந்தோர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன.22
கொழும்புத்துறை- யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்ட 190 வழித்தட இலக்க பஸ் மீது கடந்த செவ்வாய்க்கிழமை காலை கல்வீச்சுத்தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புத்துறை நோக்கிச் சென்ற பஸ்ஸை மூவர் பாசையூர் பகுதியில் வைத்து இடைமறித்துள்ளனர்.

சாரதி பஸ் நிறுத்தாமல் சென்றதனால் ஆத்திரமடைந்த இளைஞர்கள், கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் பஸ் கண்ணாடி சேதமடைந்துள்ளதுடன், பின் ஆசனத்தில் இருந்து பயணித்த இரு பெண்கள் காயங்களுக்கு உள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அதே பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைது செய்துள்ளனர். (ற-ஜ-107)

# 2 கிலோ கஞ்சாவுடன் யாழில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.22
2 கிலோ கஞ்சாவுடன் இருவரை யாழ். பொலிஸ் நிலைய சட்ட விரோத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 5 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மடத்தடி வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும், யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டோ சாரதியான குருநகர் நபரும், மற்றையவரும் பண்ணை தனியார் பஸ் தரிப்பிடத்துக்குச் சென்று அங்கிருந்து, ஓட்டோவில், யாழ். மடத்தடி பகுதிக்கு வந்து, அங்கிருந்து கொழும்பு பஸ்ஸில் பயணிப்பதற்காக ஓட்டோவில் நின்றுள்ளனர்.

யாழ். பண்ணை பஸ் நிலையத்தில் இருந்து இருவரையும் பின் தொடர்ந்த பொலிஸார் யாழ். மடத்தடி வீதியில் வைத்து, கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும், யாழ். பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபர்கள் தாம் கஞ்சாவை ஓட்டோவில் கொண்டுவந்து கடத்துவதாக வழங்கிய தகவலின் பிரகாரம் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-106,107)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 8 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நுழைவாயில் நேற்றுத் திறக்கப்பட்டது. இந்த நுழைவாயில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றிய நோர்வே கிளையால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி.ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதான நுழைவாயிலை வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் ஆகியோர் கூட்டாக நாடா வெட்டி திறந்தனர். (ற-ஜ-9)

# மூன்று பிள்ளைகளின் தாய் திடீர் வலிப்பால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.22
திடீரென ஏற்பட்ட வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட குடும்ப பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம், தொட்டியாலடி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணின் கணவன் அதிகாலையே வேலைக்கு சென்றுள்ளார். இதன் பின்னர் வீட்டில் நின்ற இரண்டு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பி வைத்து விட்டு, தனது வீட்டுக் கடமைகளை கவனித்த வண்ணம் இருந்துள்ளார்.

இந்த நிலையில் திடீர் வலிப்பு நோயால் இவர் நிலத்தில் வீழ்ந்து மயங்கியுள்ளார். தயாரின் நிலையை அவதானித்த நான்கு வயது குழந்தை அழுதுள்ளது. இதனை அவதானித்த அயலவர்கள் அங்கு வந்ததுடன், குறித்த பெண்ணை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். எனினும் அவர் சிகிச்சை பயன் இன்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஜ-107)

# அமிர்தலிங்கத்துக்கு வலி.மேற்கில் சிலை

வலி.மேற்கு, ஜன.22
வலி.மேற்கு பிரதேச சபை வளாகத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு விரைவில் வடமாகாண சபையால் சிலை நிறுவப்படவுள்ளது.

வடமாகாண பேரவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சிலை நிறுவுவது தொடர்பில் சபையின் அனுமதியைப் பெற்றதன் அடிப்படையிலேயே விரைவில் வலி.மேற்கு பிரதேச சபை வளாகத்துக்குள் சிலை நிறுவப்படவுள்ளது.

முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு சிலை நிறுவப்படும் இடத்தை தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா தலைமையில் வந்த குழு மையப்படுத்திச் சென்றுள்ளது.

விரைவில் வலி.மேற்கு பிரதேச சபையூடாக மேற்படி சிலை நிறுவும் விடயம் தொடர்பில் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளும்.

இதன் பிரகாரம் 2016 ஜனவரி இறுதிப்பகுதியில் இதற்கான முதற்கட்ட பணி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-50)

## புறா திருடிய சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.22
கடந்த நவம்பர் மாதம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கூட்டில் இருந்து 30 சோடிப் புறாக்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் மூவரை யாழ்ப்பாணம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்புத்துறைப் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் திருடப்பட்ட 30 சோடி புறாக்களில் 17 சோடி புறாக்கள் மன்னாரமப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

கைதான மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், விசாரணையின் பின் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ற-ஜ-107)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை ஒருபோதும் எமது எல்லைக்குள் அனுமதியோம்

## பொருளாதார மாநாட்டில் கூறினார் பிரதமர்

-டாவோசிலிருந்து உதயன் பிரதிநிதி-

டாவோஸ், ஜன.22

இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு தமிழக மீனவர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் இழுவை மடி மீன்பிடியில் ஈடுபடுவதால் அனுமதி வழங்க முடியாது.

இவ்வாறு டவோஸ் நகரில் தெரிவித்தார் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், தமிழகத்தில் இழுவை மடி மீன்பிடியில் தமிழ்நாட்டின் பலம்மிக்க அரசியல்வாதிகள் தொடர்புபட்டிருக்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் முதலீட்டு அமையம் நேற்று முன்தினம் மாலை ஏற்பாடு செய்திருந்த முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.




இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்த மீன்பிடியில் ஈடுபடுவது பெரும் பிரச்சினை என்று தெரிவித்த அவர், இலங்கைக் கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு இந்திய மீனவர்கள் கேட்கிறார்கள்.

எனினும் இழுவை மடி மீன்பிடியில் அவர்கள் ஈடுபடுவதால், அவர்களது கோரிக்கையை ஏற்க முடியவில்லை. அதனை அவர் கள் கைவிட்டால் அவர்களது ஏனைய கோரிக்கைகள் குறித்து சாதகமாகப் பரிசீலிக்க முடியும்.

ஆனால், இழுவை மடி மீன்பிடியில் தமிழகத்தின் பலமிக்க அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதால் அதனை நிறுத்த முடியவில்லை என்றார் - பிரதமர். (உ)



சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்றுள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் துருக்கி பிரதமர் அஹமட் தாவுடொக்லுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் கலந்துகொண்டனர். (து)

# எஞ்சிய காணிகளும் விரைவில் விடுவிப்பு

## பிரதமர் ரணில் உறுதி

-டாவோசிலிருந்து உதயன் பிரதிநிதி-

டாவோஸ்.ஜன .22

அண்மையில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இராணுவத்தின் வசமிருந்த காணிகள் சில உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டன. அதேபோன்று எதிர்வரும் ஓரிரு மாதங்களில் எஞ்சிய காணிகளை விடுவிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளைஅரசுமேற்கொண்டு வருகின்றது. இருந்தும்அதற்குத் தேவைப்படும் கால அளவு அல்லது வரையறை என்பதை இப்போது சொல்லமுடியாது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே தெரிவித்துள்ளார்.

> நாட்டில் புதிய மாற்றம் ஒன்றை எற்படுத்தும் நோக்கில் புதிய அரசமைப்பு தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் பேசி வருகிறோம்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்றுவரும் உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பிரதமர் ரணில் அங்கு இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் தமிழர் தரப்போடு பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தியாவும் தீர்வு தொடர்பில் தமிழர் தரப்புடன் பேசி வருகின்றது. அதேபோன்று ஏனைய தன்னார்வ நிறுவனங்களும் வெளிவிவகார அமைச்சின் கீழ் இது தொடர்பில் சேர்ந்து பணியாற்றுகின்றன. குறிப்பாக இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிப்பது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன.

நாட்டில் புதிய மாற்றம் ஒன்றை எற்படுத்தும் நோக்கில் புதிய அரசமைப்பு தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் பேசிவருகிறோம். புதிய தேர்தல் முறைகள் தொடர்பிலும் இதனோடு தொடர்புடையஏனையபெரும்பான்மைக் கட்சிகளுடனும் பேசி வருகின்றோம் - என்றார். (து-ரி2)

## புகை பிடிப்பதால் இலங்கையில் வருடாந்தம் 20,000 பேர் சாவு

கொழும்பு,ஜன.22

புகை பிடிப்பதால் இலங்கையில் 20 ஆயிரம் பேர் வருடாந்தம் இறந்து போவதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டத்துக்கு முரணான விதத்தில் இலங்கைக்குத் தருவிக்கப்படும் புகைபொருள்களுக்குத் தடை விதிப்பதற்கும், அவற்றின் இறக்குமதிக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தாம் ஆயத்தமாக இருப்பதாகவும், அது தொடர்பாக அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புகை பொருள்கள் மற்றும் மது பானங்களின் ப்ாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு நான்கு முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. அவற்றுள் ஒரு முறையானது வரிகளை அதிகரித்து விடுவதே எனவும் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

# சீன அரசின் நிதிப் பங்களிப்புடன் துறைமுக நகர் திட்டம் தொடரும்

## டாவோசில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

-டாவோசிலிருந்து உதயன் பிரதிநிதி-

டாவோஸ். ஜன.22

சீன அரசின் நிதி அனுசரணையோடு இலங்கை அரசு தொடர்ந்தும் கொழும்புத்துறைமுக நகர் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்றுவரும் உலக பொருளாதார மாநாட்டில் இலங்கையைப் பிரதிநித்துவம் செய்து முதல்முறையாகக்கலந்துகொண்ட புதிய நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் அங்கு இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடைமுறைப் பொருளாதார வலையமைப்பிலே சீனா மிகப் பெரிய பொருளாதாரச் செறிவுடைய நாடாக விளங்குகிறது . அவர்கள் அந்த எல்லையை அடைந்து விட்டனர். அந்த வகையிலே இலங்கையில் சீன அரசு கொழும்பு நகர அபிவிருத்தி உட்பட தற்போது பல செயற்றிட்டங்களைத் தனது நிதிப்பங்களிப்போடு செயற்படுத்தி வருகின்றது.

இந்த துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது எதிர்காலத்தில் மிகப் பரந்த முதலீடுகளுக்கும் சுற்றுலாத்துறைக்கும் வசதி செய்து கொடுப்பதுடன் முக்கியபிராந்தியமாக அல்லது அதற்கு தகுந்த இடமாக விளங்கும்.

இதற்கு மேலதிகமாகச் சீன அரசின் நிதிப் பங்களிப்புடனான அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தியும் தொடரும். அதேவேளை, தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பல்வேறு திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அவற்றிலிருந்து பொருத்தமான உடன்படிக்கைகள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவை நிதியத்தின் ஒப்புதலோடு கைச்சாத்திடப்பட்டு செயற்படுத்தப்படும் - என்றார்.(த-ரி2)

# தரமற்ற உர மூடைகள் தருவிப்பு

கொழும்பு,ஜன.22

தரமற்ற 50 கிலோ கிராம் கொண்ட 7 லட்சத்து 50 ஆயிரம் யூரிய உர மூடைகள் அரசின் உர நிறுவன மொன்றினால் இந்த நாட்டுக்குள் தருவிக்கப்பட்டிருப்பதாக அகில இலங்கை துறைமுகப் பொது ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டுக்குத் தருவிக்கப்பட்டிருக்கும் தரமற்ற, கல்லாகிப் போயுள்ள இந்த உரமானது, கடந்த மூன்று மாத காலமாகவே கொழும்புத் துறைமுகத்தின் பண்டாரநாயக்க இறங்குதுறையின் முதலாம் மற்றும் இரண்டாம் மேடைகளில் இறக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் மூலமாகத் தருவிக்கப்பட்டுள்ள இந்த உரமானது இரகசியமாகவே இறக்கப்படுவதும், அவ்விதம் இறக்கப்படும் உர மூடைகள் இரகசியமாகவே லொறிகள் மூலமாக சப்புகஸ்கந்தையில் உள்ள உரக்களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதால், இந்த உர இறக்குமதியில் மோசடி இடம்பெற்றிருக்கக் கூடுமா என்ற சந்தேமொன்று நிலவுவதாகவும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

(த-ஜ-22)



சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்றுள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உலகப் பொருளாதார மாநாட்டின் ஆரம்பகர்த்தாவும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான பேராசிரியர் க்ளவுஸ் ஸ்வெப்புடன் நேற்றுமுன்தினம் முக்கிய சந்திப்பில் ஈடுபட்டார். இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் கலந்துகொண்டனர். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவருக்குச் சிறுநீரகம் மாற்றும் சிகிச்சைகளுக்குத் தடை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 22
இலங்கையில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் வெளிநாட்டவர்களுக்கான சிறுநீரகத் தொகுதி மாற்று அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள தனியார் வைத்தியசாலைகள் சிலவற்றில், இந்தியர்களுக்கு சட்டவிரோதமான முறையில் சிறுநீரகத் தொகுதி மாற்று அறுவை சிகிச்சை நடத்தப்பட்டதாக, இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்ததோடு இந்தியப் பொலிஸாரும் அது தொடர்பான முறைப்பாடு கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் அத்தகைய குற்றச் செயல்கள் தடுப்பதனை நோக்காகக் கொண்டு தற்போது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிகிச்சை பெறவந்த இந்திய நாட்டவர்கள் சிலரது சிறுநீரகத்தொகுதி களவாடப்பட்டிருந்ததாகவும் இந்தியச் செய்திகள் தெரிவித்திருந்தன. இந்த குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட இலங்கையின் 6 இலங்கை மருத்துவர்களுக்கு எதிராக ஹைதராபாத்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில், சிறுநீரக மோசடி தொடர்பாக இலங்கை மருத்துவர்கள், ஆறு பேருக்கு எதிராக இந்தியப் பொலிஸார் வழக்குத் தொடர தீர்மானித்துள்ளனர். இந்த மோசடி தொடர்பாக இந்திய காவல் துறையினரின் நீண்ட விசாரணைக்கு பிறகு குறித்த மருத்துவர்கள், தொடர்பாகத் தகவல் கிடைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

> இலங்கையில் உள்ள பிரதான தனியார் மருத்துவ மனைகள் நான்கில், இந்த நாட்டு மருத்துவர்கள் ஆறு பேர், குறித்த சிறு நீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளனர் என கைது செய்யப்பட்ட குறித்த தரகர், ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

இந்தியா, இலங்கை இடையே இடம் பெற்ற சிறுநீரக மோசடி தொடர்பாக முதல் முறையாக 2012 ஆம் ஆண்டு தகவல் வெளியானது. இந்திய நோயாளர்களுக்கு தேவையான சிறுநீரகங்களை தரகர்கள் மூலம் அதிகூடிய விலைக்கு, இந்திய நாட்டவரிடமே பெற்று, இலங்கையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடியில் பிரதான தரகராகக் கருதப்படும் சுரேஸ் பிரஜாபதி மற்றும் அவருடைய நண்பர்கள் இருவரையும் ஹைதராபாத் காவல் துறையினர் கைது செய்ததன் பின்னர் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு சிறுநீரகத்துக்காக குறித்த தரகர், நோயாளர்களிடம் இருந்து பெற்றுகொண்ட பணமானது, இந்திய ரூபாவில் 30 லட்சம் ஆகும். இலங்கையில் உள்ள பிரதான தனியார் மருத்துவ மனைகள் நான்கில், இந்த நாட்டு மருத்துவர்கள் ஆறு பேர், குறித்த சிறு நீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளனர் என கைது செய்யப்பட்ட குறித்த தரகர், ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பணம் மூலம் பெற்று கொண்ட சிறுநீரகங்களை வைத்து, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் 60 வரை, குறித்த மருத்துவர்கள், மேற்கொண்டுள்ளனர் என தகவல் வெளிவந்துள்ளது.

இந்திய பொலிஸார் குறித்த ஆறு மருத்துவர்களுக்கு எதிராக, சட்டவிரோதமாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொண்டுள்ளனர் எனக் குற்றம்சுமத்தி வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்தச் சிறுநீரக மோசடியில் இந்த நாட்டு மருத்துவர்கள், தொடர்பான தொழிற்சங்கத் தலைவர் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (த-4)

## இரட்டைக் குடியுரிமைக்கு 20 ஆயிரம் பேர் காத்திருப்பு

கொழும்பு,ஜன.22
ஆஸ்திரேலியா உள்ளிட்ட ஏராளமான மேற்குலக நாடுகளில் உள்ள 20 ஆயிரம் பேர் வரையிலான இலங்கையர்கள் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காகக் காத்திருப்பதாக குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூவர் கொண்ட குழுவொன்றினால் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள மூவாயிரம் பேர் வரையிலானோருக்கு இரட்டைக் குடியுரிமையை வழங்குவதற்காக அமைச்சரவையின் அனுமதி பெறப்படவுள்ளது.

மூன்றாவது தடவையாக இந்த இரட்டைக்குடியுரிமை வழங்கும் செயற்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதியன்று மேற்கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாக வட மேல் அபிவிருத்திகள், உள்நாட்டலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சர் எஸ.பீ.நாவின்ன தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக தகுதிகளைப் பெறும் இலங்கையர்கள் அது தொடர்பாக மூன்று லட்சம் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தற்போது கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களில் அதிகரித்த தொகையொன்று ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையரிடமிருந்தே கிடைத்திருப்பதாக குடிவரவு-குடியகல்வு உதவி ஆணையாளரான மாதவ லக்ஷான்டி சொய்சா தெரிவித்துள்ளார்.

மேலும் அதுதொடர்பாக நியமனம் செய்யப்பட்டுள்ள மூவர் கொண்ட குழுவிடமிருந்து ஏற்கனவே பத்தாயிரம் வரையிலான விண்ணப்பங்களுக்கு அடிப்படை அனுமதிகிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)



சுவிற்சர்லாந்து சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சுவீடன் பிரதமர் ஸ்ரீபன் லோப்பனைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இரு தரப்புப் பொருளாதாரம் குறித்து இதில் ஆராயப்பட்டது. (தி)

## மின் பாவனை குறைப்போருக்கு கட்டணத்தில் விசேட சலுகைகள்

கொழும்பு,ஜன.22
மின் பாவனை அதிகரித்துள்ள நேரங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, ஏனைய நேரங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்வோருக்குக் குறைந்தபட்சக் கட்டணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மாலை 6.30 இல் இருந்து இரவு 10 மணி வரை மின்சாரத்தைப் பயன்படுத்தாது ஏனைய நேரங்களில் பயன்படுத்திக் கொள்வோருக்காகக் குறைந்தபட்ச கட்டண அறவீட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும். அதேபோன்று நெருக்கடியான வேலை நேரங்கள் அல்லாத நேரங்களில் மின் பாவனையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கும் திட்டமொன்றும் எதிர்காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-22)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி அரசும் மகிந்த ஆட்சியின் கால் தடத்திலா?

எங்கள் நாட்டில், இப்போது அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை!

மேற்கண்டவாறு ஓங்கி ஒலித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சுவிற்சர்லாந்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய, உலகப் பொருளாதார மாநாட் டில் கலந்து கொண்டுள்ள பிரதமர், அதன் பின்னர் பக்க நிகழ்வாக நடத்திய ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டிருந்தார். அப்போதே தமது அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

சிறையில் இருப்பவர்கள், நீதிமன்றத்தால் ஏற்கனவே தண்டிக்கப்பட்டவர்களே. அவர்களை விடுவிக்கவே இயலாது; முடியாது என்றும் பிரதமர் அறுத்து உறுத்துக் கூறினார்.

எஞ்சிய ஏனையவர்கள் தொடர்பில், சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் ஆராயப்பட்டு வருவதாகவும் பிரதமர் தகவல் வெளியிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகள் எவரும் சிறையில் இல்லை என்று, நீதி அமைச்சர் ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்த நிலைப்பாட்டை, உலக அரங்கில், பிரதமர் அதனை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்!

உலகப்பெரும் மாநாடு ஒன்றில், எமது நாட்டின் பிரதமர், அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்று அறுத்து உறுத்து ஓங்கி ஒலித்திருப்பது --

தமிழ் மக்கள் சார்ந்த விவகாரங்களில் முந்தைய மகிந்த அரசு மட்டுமன்றி, தமிழ்மக்களின் வாக்குகளால் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள நல்லாட்சி ஜனாதிபதியின் தலைமையில் உள்ள அரசும், வேளைக்கு வேளை சாய்ந்தாடும் தந்திர அரசியலையே கையில் எடுத்துள்ளது என்பதை, மிக மிகத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது...!

இதேவேளை --

இலங்கையின் பொறுப்பு வாய்ந்த நாடாளுமன்றின் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் பொருளாதார வளம் மிக்க நாடுகளின் உலகத் தலைமைத்துவ ஒன்றியமான, ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினரிடம் -

தமிழ் அரசியல் கைதிகளைத் தாமதிக்காது, வடுவிக்க உதவ வேண்டும் என்று கேட்டுள்ளார்.

மேலும், தமிழ் அரசியல் கைதிகள் அவ்வப்போது உணவுத் தவிர்ப்பில் இருந்த வேளைகளில், அரசு சார்ந்தோர் தகிடு தத்தம் காட்டி -

சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஆசை வார்த்தை கூறி, நழுவிக் கொண்ட தாற்பரியம் நீதியைக் காலால் மிதிக்கும் போக்கே!

நல்லாட்சி அரசின் அதிகாரப் பதவிப் பேர்வழிகள், முந்தைய மகிந்த அரசின் பாதையில் கால் பதிக்கத்தொடங்கி விட்டனரா என்ற பென் னம் பெரும் வினா, தமிழ் மக் களை வாட்டு கிறது. இது தெரியுமா ஆட்சிக்கட்டிலில் சுகம் அனுபவிக்கும் பேர் வழிகளுக்கு...?

# சவால்களை எதிர்கொள்ள அரசு தயாரா?



**வந்தியத்தேவர்**

புதிய கட்சி உருவாவதைத் தவிர்க்க முடியாது எனவும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன் மகிந்த தரப்பில் புதிய கட்சி உதயமாகும் என்றும் அடிக்கடி வெளியாகும் செய்திகளால் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவே குழம்பிக் கொண்டிருக்கிறார் போலும். அவரைச் சுற்றி இருப்பவர்கள் அவரைச் சற்று ஆறுதலாக இருக்க விடுகிறார்களில்லை போல் தெரிகின்றது. தன்னைக் கட்சியில் இருந்து வெளியேற்றத்தன்னுடன் நெருங்கியவர்களே துடிக்கிறார்கள் என்ற ஆதங்கம் அவருக்கு. கடந்த 2005 முதல் 2015 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான என நூறு பக்கக் கடிதத்தை இலஞ்ச விசாரணை ஆணைக்குழு அனுப்பியுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன வேறு 42 ஆயிரத்து 650 கோடி பணத்தை மகிந்த குடும்பத்தின் நான்குபேர்கள் இணைந்து சுருட்டிக்கொண்டதாக குற்றம் சாட்டியுள்ளார். இவை போதாதென்று பீக்கொக் மாளிகை (மயில் மாளிகை) நீச்சல் தடாகத்துள் பெருமளவு தங்கத்தையும் பணத்தையும் பதுக்கி மறைத்து வைத்துள்ளதாகவும் அது குறித்து விசாரணை செய்வதன் மூலம் தங்களைக் காப்பாற்றுமாறும் அதன் உரிமையாளர் ஏ.எஸ்.லியனகே பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார். மகிந்த தனது நிலை இறங்கிப் போயுள்ளதையிட்டெல்லாம் வருத்தப்பட்டாலும்கூட தமிழ் மக்களின் விடயத்தில் சற்றும் தளரப் போவதில்லை என்பதுபோல் காணப்படுகிறார். சுதந்திரமும் இறைமையும் உள்ளவர்களாக தமிழர்கள் இந்த நாட்டில் வாழக் கூடாது என்பதில் விடாப்பிடியாகவே இருக்கின்றார். தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழைதேவை என்பது போல ஊழல் மோசடி போர்க் குற் றம் என்றுஅவரைச்சுட்டிநீண்டுகொண்டிருக்கும் விரல்களை மறந்து தென்பகுதி மக்களுக்குத் தமிழர்களை விரோதிகளாகக் காட்டித் [illegible] தற்போதைய அரசு எதிர்காலத்தில் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் கசப்புணர்வு ஏற்படாத வகையில் ஒரு சிறப்பான தீர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதுதான் நீண்டகாலப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளியிடும், நாட்டை நேசிக்கும் எந்த ஒரு மனிதனதும் எதிர்பார்ப்பும் அதுவே. அரசு அப்படி ஒரு சிறந்த தீர்வை முன்வைக்கப் போவதில்லை. அரசுக்கு அப்படியொரு நல்லெண்ணம் ஏற்பட்டாலும் இன ஒற்றுமையை விரும்பாத எதிரணியினர் இங்குள்ள இரு இனமக்களையும் ஒற்றுமையாக இருக்க எப்படி அனுமதிப்பார்கள்? ஒரு நீதியான தீர்வைக்கூட எட்ட இவர்கள் இடமளிக்கப்போவதில்லை என்பதைத் தமது ஒவ்வொரு செயல்களாலும் வெளிக்காட்டி வருகிறார்கள். புதிய அரசமைப்பினூடாக நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவு தருவதாகக் கூறும் மகிந்த ராஜபக்ச புதிய அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தத்துக்கு மேலதிகமாக அதிகாரப் பரவலாக்கலை வழங்கக் கூடாது என்கிறார். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடாது என்கிறார். ஏற்கனவே தனது ஆட்சியில் வடக்கு, கிழக்கு இணைப்பை ரத்துச் செய்தவர் மகிந்த. தமிழ் மக்களுக்கு எதிரான நாட்டுக்கு விரோதமான புத்த பிரானுக்கு எதிராக அதர்ம உபதேசங்கள் செய்யும் மேடையாக நாரகன் பிட்டியில் உள்ள அபய்ராம விகாரையை மாற்றியமைத்துள்ளார். அதிகாரப் பரவலாக்கல் தமது திருத்தச் சட்டத்துக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும். இந்திய மாநிலத்து அதிகாரப் பகிர்வுக்கு இணையாக இருக்கக் கூடாதென்பதும் அவரது கருத்து. இந்திய மாநிலத்துக்கான அதிகாரப் பகிர்வு என்பது பிரதமருக்குக் கடிதம் எழுதுவது மட்டுமே. இங்கே அதுவும் கூடத்தேவையில்லை என்கிறார்போலும். சுதந்திரம் பெற்ற பின்னர் நாடு படிப்படியாக தமிழ்மக்களைசிறுபான்மை இனங்களைப் புறக்கணிக்கும் நிலையைத் தோற்றுவித்து வந்துள்ளது. ஒற்றுமையுடன் வாழ விரும்பாது தமிழ் மக்கள் நீட்டிய நேசக் கரங்களை வெட்டி எறிவதிலேயே குறியாக இருந்தது. அகிம்சைப் போராட்டங்களை அராஜகத்தின் மூலம் அடக்கி வந்தது. இதனால் தமிழ் மக்களின் விடுதலைக் கோரிக்கை தவிர்க்க முடியாததானது. இந்த உண்மைகளைத் தெரிந்திருந்தும் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கும் சிங்களத் தலைவர்களில் இறுதியானவராக மகிந்தவே இருக்கவேண்டும். இலங்கையைப்பாதுகாக்கக்கூடியதாக புதிய அரசியல் யாப்பு இருக்க வேண்டும் என்பது தற்போதைய அரசுத் தலைவர்களின் வார்த்தைகளாக உள்ளன. குழந்தை ஊனமுற்றதாக இல்லாமல் அம்சமாகப் பிறக்க வேண்டும் எனில் அதனைச்சுமந்திருக்கும்தாயானவள் தன்னை எப்படியெல்லாம் வளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை நன்கு தெரிந்திருத்தல் அவசியம். பல்வேறு தரப்புக்களில் இருந்து பலதரப்பட்ட கருத்துக்கள் அரசியல் யாப்புக்காக வரக்கூடும். நாட்டைச் சீரமைக்க உகந்த கருத்துக்களும், கூடவே சீரழிக்கக் கூடியதான கருத்துக்களும் கிடைக்கலாம். நாட்டுக்குப் பாதகமற்ற அச்சுறுத்தலற்ற பிரகாசமான குழந்தையை அதாவது தீர்வைப் பெற்றெடுக்க அரசுத்தாயானவள் சவால்களை எதிர்கொள்ளத் தயாரா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டார்களா?

## சலசலப்பை ஏற்படுத்தும் பிரதமரின் கருத்து

எம்.ஐ.முபாறக்



இந்த நாட்டில் 30 வருடங்களாக நீடித்து நின்ற உள்நாட்டுப் போர் நாட்டின் ஏனைய பகுதிகளில்ஏற்படுத்திய அழிவுகளை விடவும் வடக்கு-கிழக்குக்குள் ஏற்படுத்திய அழிவுகள்தான் அதிகம்.

உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் என மதிப்பிட முடியாத அளவு சேதங்களை அந்தப் போர் வடக்கு, கிழக்குத் தமிழர் களுக்கு ஏற்படுத்தி விட்டது. அவற்றை ஈடுசெய்வதற்கு எத்தனை வருடங்கள் எடுக்கும் என்று தெரியாத நிலையில்தான் தமிழர்கள் இன்று வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தும், முடியுமானவரை துரிதமாக இழப்புகளை ஈடுசெய்வதற்கும் - இழந்து போன அவர்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கும் தமிழர்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்காகத்தான் அவர்கள் அரசியல் தீர்வொன்றைக் கோரி நிற்கின்றனர்.

தமிழர்கள் சந்தித்த அவ்வாறான இழப்புகளுள் காணாமற்போனோர் விவகாரமும் அடங்குகிறது. உறுதி செய்யப்பட்ட இழப்புகளைத் தவிர உறுதிசெய்யப்படாத - எங்கோ ஓர் இடத்தில் மறைந்த நிலையில் இருக்கலாம்என ஊகிக்கப்படுகின்ற இழப்புக்களை மீளப்பெறுவதற்கு தமிழர்கள் இப்போது போராடிக்கொண்டு இருக்கின்றனர்.

அவ்வாறான உறுதிசெய்யப்படாத இழப்புக்களுள் முக்கியமானதுதான் காணாமற்போனோர் விவகாரம். போர் தொடங்கப்பட்டதுமுதல் 2009 இல் அதுமுடியும்வரையும், முடிந்த பின்பும் அதிகமான தமிழர்கள் காணாமற்போயினர்; இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்; விசாரணைகளுக்காகப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறான சம்பவங்களுள் சிக்கிய அனைவரும் காணாமற்போனோர் என்ற தலைப்பின் கீழ் வருகின்றனர்.

இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது இல்லையா என்று அறிவதற்காகவும் அவ்வாறு உயிருடன் இருந்தால் அவர்களை மீட்பதற்காகவும் தமிழர் தரப்பில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தேடுதல் நடவடிக்கை போர்க் காலத்தில் இருந்தே தொடங்கப்பட்டபோதிலும், அப்போதைய சூழ்நிலை தமிழர்களுக்குச் சாதகமாக இருக்கவில்லை. முடிந்து அந்த சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டதால் தேடுதல் பணியை அவர்கள் தீவிரப்படுத்தினர். சர்வதேசமும் இதில் கவனம் செலுத்தும் வகையில் அது அமைந்தது. சர்வதேசத்தின் தலையீட்டின் ஊடாக விரைவான ஒரு தீர்வை அது தொடர்பில் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அந்தப் போராட்டம் பலமடைந்தது.

இதன் காரணமாகத்தான் மக்ஸ்வல் பரணகம தலைமையில் இது தொடர்பாக விசாரணை செய்வதற்காக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜானதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைத்தார்.

அந்த ஆணைக்குழு பல சுற்று விசாரணைகளை நடத்தி அது தொடர்பில் மக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது.

அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளிலும் குழு ஈடுபட்டுள்ளது. அதற்கான அனுமதியை இந்த ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இவ்வாறு காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் ஒரு முடிவைக் காண்பதற்காக நாலாபுறத்திலும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய ஒரு கருத்து தமிழர் தரப்பில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழில் இடம்பெற்ற தேசிய பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க காணாமற்போனோரில் அதிகாமனவர்கள் உயிருடன் இல்லை என்று கூறினார். இதுதான் இப்போது சலசலப்பை ஏற்படுத்தி யுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் பொதுவாக பல்வேறுவகையான கருத்துக்களும் ஊகங்களும் பலராலும் முன்வைக்கப்படுகின்றன. சிலர் கொல்லப்பட்டிருக்கலாம்; சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம்; சிலர் படையினருடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கலாம்; சிலர் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என அந்த ஊகங்களும் கருத்துக்களும் அமைந்துள்ளன. இவ்வாறு பல்வேறு வகையான ஊகங்கள் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஊகங்களுள் உண்மைகளும் இருக்கலாம். அந்தவகையில், காணாமல் ஆக்கப்பட்டோரில் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றமை தொடர்பிலும் உண்மைகள் இல்லாமல் இல்லை. ஆனால், அது உரிய விசாரணைகள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அதற்கான நிவாரணங்களும் உரியவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் எல்லோரும் கூறுவதுபோல் ஒருநாட்டின் ஆட்சியாளர் கூறமுடியாது. எந்த விவகாரமாக இருந்தாலும், அது விசாரணைகள் மூலமே தீர்க்கப்பட வேண்டும். அதுதான் ஒருபிரச்சினைக்கான உத்தியோகபூர்வத் தீர்வாக அமையும்.

காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகள் ஒரு புறம் தொடர்கின்ற போது, இன்னொரு பக்கம் அவர்கள் உயிருடன் இல்லை என்றொரு முடிவைப் பிரதமர் கூறுவாராக இருந்தால் அந்த விசாரணைகள் எதற்கு என்ற கேள்வி எழும். பிரதமர் கூறுவது உண்மையாக இருந்தாலும், நீதியான விசாரணைகள் மூலம் அது வெளிவராவிட்டால் மக்கள் அதை ஏற்கமாட்டார்கள். பிரதமரை மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலைதான் ஏற்படும். விசாரணையைத் திசை திருப்புவதற்கான ஒரு சதியோ என மக்கள் சந்தேகிக்கத் தொடங்குவர்.

## இந்த வீதியும் கவனிக்கப்படுமா?

வலிகாமத்தில் சண்டிலிப்பாய் ஐந்து கண் மதவடி, மணல் வீதி மழை காலங்களிலும், கோடை காலங்களிலும் குண்டும் குழியுமாக மோசமான நிலையில் காட்சியளிக்கின்றது.

நாளாந்தம் இந்த வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள் , விவசாயிகள் மிகவும் சிரமத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே பிரதேசசபையோ, வீதி அதிகார சபையோ இந்த வீதியைப் கவனிப்பார்களா?

*மா.தவலிங்கம்*

## தானியங்கிச் சமிக்ஞை பொருத்துவார்களா?

தற்போது வடமாகாணத்திலும் வாகன நெரிசல்களால் வாகன விபத்துக்கள் நடைபெறுவது வழமையாகிவிட்டது. தென் பகுதியை ஒத்த வீதியான காங்கேசன்துறை வீதியில் காணப்படும் சுன்னாகம் சந்தி, மருதனார் மடம் சந்தி, தட்டாதெருச்சந்தி என்பன வாகன நெரிசல்கள் கூடிய இடமாகக் காணப்படுகின்றன. இந்தச் சந்திகளில் தானியங்கிச் சமிக்ஞைகள் பொருத்தப்பட வேண்டும். இதற்கான நிதியை வடமாகாண அரசோ, மத்திய அரசோ ஒதுக்கி இந்த தானியங்கிச் சமிக்ஞையை பொருத்தி வாகன நெரிசல்கள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

*மா.தவலிங்கம்.*

## புனரமைப்பையே என்றும் காணாத இரணை இலுப்பைக்குளம் வீதியின் அவலநிலைமை

மேற்குறிப்பிட்ட வீதியானது வவுனியாவிலிருந்து மன்னார் வீதியின் பூவரசன் குளம் வைத்தியசாலையிலிருந்து அண்மித்தாற் போல் வடக்கு நோக்கிச் செல்லும்வீதியாகும். புலவனார் ஊர், மடுக்குளம், வேலன்குளம், சின்னத்தம்பனை, செங்கற்படை, கருங்காலிக்குளம், தெகிளங்குளம், குஞ்சுக் குளம், கோவில் புளியங்குளம், பூசாரி குளம், காக்கையன் குளம் இரணை இலுப்பைக் குளம் விளாத்திக் குளம், வலைஞன் கட்டுவரை இது நீண்டு செல்கின்றது.

இந்த வீதியானது சுமார் 30 வருடங்கள் வரை புனரமைப்பு எதனையும் காணாத நிலையில் காட்சி தருகின்றது. 1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிக்கிளம்பிய கற்கள், மண் எல்லாம் மழையிலும் வெள்ளத்திலும் நன்றாக அள்ளுண்டு போய் விட்டன. கற்கால மக்களின் காலத்து வீதி போல் கடந்த மாதங்களில் பெய்த மழையினால் சேதமடைந்து வீதியில் செல்லும் மக்களைப் பதம் பார்க்கும் அளவுக்கு படு மோசமான நிலையில் காட்சியளிக்கிறது. அரசியல்வாதிகளானாலும் சரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளானாலும் சரி இதைக் கவனிப்பதில்லை. இந்த வீதியைப் பிரதானமாகக் கொண்டவை மிகவும் பின்தங்கிய கிராமங்கள் ஆகும். வவுனியா பிரதேச சபைக்குள் அமைந்துள்ள இவ்வாறான இடங்கள் இருப்பது யாருக்கும் தெரியாது என்று கூற முடியாது அனைத்து அதிகாரிகளுக்கும் தெரிந்திருந்த போதிலும் பொறுப்பு வாய்ந்த அவர்கள் சரியான ஒரு திட்டமோ அபிவிருத்தியோ மேற்கொள்வதற்கு முன்வரவில்லை என்றே கூற முடியும்.

விவசாயமும், உப உணவுப் பயிர்ச் செய்கையும், கால்நடை வளர்ப்பும் இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில்களாகும். ஒரு கிராமத்து மக்களின் வாழ்வை அந்தக் கிராமத்திற்குச் செல்லும் வீதியை வைத்துத் தான் கணிப்பிட முடியும் எனப் பெரியோர்கள் கூறுவார்கள்.

சம்பந்தப்பட்டவர்களிடம் இது தொடர்பாகக் கேட்டால் அவர்கள் வீதியைப் புனரமைப்போம் என்று தான் கூறுவார்கள். அதிகாரிகள் மட்டத்திலே கேட்டால் அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் போடப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் இப்படி எத்தனை வருடங்கள் கடந்து விட்டன வீதியும் புனரமைக்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்துக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி அமைச்சரோ, வீதிப் போக்குவரத்து அமைச்சரோ இந்த வீதிப் புனரமைப்புக்கு முயற்சிப்பார்களா? நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் எமது வவுனியாநாடாளுமன்ற உறுப்பினர்களே நீங்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

*வன்னி மைந்தன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கா வைரஸின் பாதிப்பில் பிரேசில்

பிரசீலியா, ஜன.22
பிரேசிலில் சிக்கா வைரஸினால் பாதிக்கப்பட்ட சிசுக்களின் எண்ணிக்கை தொடர்பான புதிய தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. சிக்கா வைரஸால் பாதிக்கப்பட்ட தாய்க்குக் குறைபாடான தலையுடன் குழந்தை கள் பிறந்துள்ளன.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இன்றுவரை 3 ஆயிரத்து 893 பாதிக்கப்பட்ட குழந்தைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. டெங்கு மற்றும் சிக் கன்குனியாவைப் பரப்பும் கெசுக்களால் இந்த பக்ரீறியாவும் பரப்பப்படுகிறது.

சிக்கா வைரஸினால் இதுவரை 5 குழந்தைகள் உயிரிழந்துள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 44 சம்பவங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிக்கா வைரஸின் பரவலைத் தடுக்க தடுப்பூசிகள் வழங்கப்படவேண்டும். இதனை விரைவு படுத்த நிதியுதவிகள் தேவைப்படுகின்றன. இந்த வைரஸ்



பரப்புவதற்கான நுளம்புகள் நிலையான, சுத்தமான நீரில் இனம் பெருகுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டன.

லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் சிக்கா வைரஸ் தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொலம்பியாவில் இதுவரை 13 ஆயிரத்து 500 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்த நோய்த்தாக்கத்தில் பிரேசிலுக்கு அடுத்ததாக லத்தீன் அமெரிக்கா காணப்படுவதாக அந்த நாட்டு சுகாதார அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் நோய்த்தடுப்புப்பணியகம் கர்ப்பிணிப் பெண்களை பிரேசில், லத்தீன் அமெரிக்க, கரீபியன் நாடுகளுக்கு பயணிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளது. (து-ரி4)




ஒடிசா மாநில கடற்கரையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடல் ஆமைகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன.(து)

# கின்டர் ஜோய் உண்ட சிறுமி சாவு

பாரிஸ், ஜன.22
இத்தாலிய இனிப்புத் தயாரிப்பான கின்டர்ஜோய் உண்டதால், 3 வயதான பிரெஞ்சுச் சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சிறுமியின் தாயார், இனிப்புப் பொதிக்குள் இருந்த சிறிய விளையாட்டு உபகரணம் அந்தச் சிறுமியின் தொண்டையில் சிக்கியதால் அவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸுக்குப் புகார் கொடுத்துள்ளார்.

சிறுமியின் தாத்தா அவரைக் காப்பாற்ற முயற்சி செய்தபோதும், சிறுமி கோமா நிலையை அடைந்து கடந்த சனிக்கிழமை ரொலோஸ் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மூச்சுத் திணறல் காரணமாக உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கிண்டர் தயாரிப்புகளில் 3 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு அல்ல என எச்சரிக்கைத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. 30 பில்லியன் எண்ணிக்கையிலான கின்டர் ஜோய் தயாரிப்புகள், 8 ஆயிரம் வித்தியாசமான விளையாட்டு உபகரணங்களுடன் விற்பனை செய்யப்படுகின்றன.




கின்டர் தயாரிப்புகள் அனைத்தும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டவை. மிகக் கடுமையான சர்வதேச விதிகளுக்கு அமைய உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன என கின்டர் ஜோயை தயாரிக்கும் பெரிரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. 1974 ஆம் ஆண்டு விளையாட்டுப் பொருளுடன் கூடிய இனிப்புதயார்செய்யப்பட்டது. எமது தயாரிப்பால் ஒரு குழந்தை இறந்ததை எம்மால் நம்பமுடியவில்லை என கின்டர் ஜோய் உற்பத்தி நிறுவனம் அறிவித்துள்ளது. 2010 ஆம் ஆண்டுசயன்ஸ் டெய்லி ஆய்வின்படி 5 நாள்களுக்கு ஒரு குழந்தை உணவு சிக்கி இறப்பதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (து-ரி4)

# பாக்.பல்கல

# ஆயுததாரி

## 17 மாணவர்கள் உ

லாகூர், ஜன.22
வட மேற்கு பாக்கிஸ்தானில் சார்சடா பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் தாக்கியவர்கள் நால்வர் உட்பட, 21 பேர் உயிரிழந்துள்ளனர்.



நேற்று முன்தினம் பசாகான் என்னும் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில், பாதுகாப்புப் படையினர் ஆயுததாரிகளைத் தாக்கினர். உயிரிழந்தவர்களில் 17 பேர் மாணவர்கள் எனப் பல்கலைகழக அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டது. உறுதியாக இருந்து பயங்கரவாதத்தை துடைத்தெறிய வேண்டும் எனத் தாக்குதல் குறித்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

3 மண
இதன்
ஒவ்
னர். இ
சந்தே

# 30 வருடங்கள் உயிருடன் உறைந்திருந்த உயிரினத்தை மீட்டனர் விஞ்ஞானிகள்

டோக்கியோ, ஜன.22
பல வருடங்கள் உறைந்திருந்த உயிரினத்தை மீண்டும் உயிருடன் விஞ்ஞானிகள் மீட்டுள்ளனர்.

ஜப்பானின் தேசிய நிறுவனத்தில் துருவ ஆராய்ச்சியின் போது அந்தாட்டிக்காவில் சேகரிக்கப்பட்ட உறை நிலையில் உள்ள நகருயிர் 30 வருடங்களின் பின் மீண்டும் உயிர் பெற்றள்ளது.



ஒரு மில்லிமீற்றருக்கும் குறைவான நீளமுள்ள மிகச் சிறிய உயிரினம், நீரை வசிப்பிடமாகக் கொண்டதாகும். நீர்ப் பன்றிகள் என பெயரிடப் பட்டுள்ள இவை, சில காலங்களுக்கு வளர் சிதை மாற்றங்களைக் கட்டுப் படுத்தக் கூடியனவாகும். 1983 ஆம் ஆண்டு அந்தாட் டிக்காவில் ஆராய்ச்சிக்காகச் சேகரிக்கப்பட்ட பாசியில் இந்த ஆராய்ச்சி நடத் தப்பட்டுள்ளது. பாசியிலிருந்து பிரித்தெடுக் கப்பட்ட இந்த நீர் உயி ரினம், மறை 20 பாகை செல்சியஸில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த ஆராய்ச்சி கிரை யோபயோலஜி சஞ்சி கையில் வெளியிடப்பட்டிருந்தது. அந்த உயிரினத்தின் முட்டையும், உயிரியும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இரு வாரங்களின் பின்பு நகரவும் உணவு உண்ணவும் ஆரம்பித்தது. அத்துடன் அந்த நீர் உயிரி 19 முட்டைகளை இட்டது. அவற்றில் 14 கருக்கட்டப்பட்டன. புதிதாகப் பிறந்த உயிரிகளில் குறைபாடுகள் எதுவும் காணப்படவில்லை.

இதற்கு முன்னர் இதே உயிரினம் 9 வருடங்களின் பின் மீள் உயிர்ப்பு பெற்றது.30 வருடங்களின் பின் உயிரினம் புதுப்பிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். மேலும் இவ்வாறான விலங்குகளின் நடத்தைகள் மூலமும், உயிர் வாழும் திறன் மூலமும் நீண்டகால இருப்புத் தொடர்பான பொறிமுறை ஆராயப்படுவதாக மேலும் அந்த சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டது. (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமாக முடிவ

லண்டன், ஜன. 22
ஒரு மனிதனின் தலையை அகற்றிவிட்டுவேறுமனிதனின்தலையைபொருத்துவதற்கான ஆராய்ச்சிதற்போதுநடந்து வருகிறது. இதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஏற்கனவே விஞ்ஞானிகள் அறிவித்து இருந்தனர்.

இந்த நிலையில் எலி, குரங்கில் இவ்வாறான சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது.

இந்தச் சத்திர சிகிச்சைக்கு, இரு தரப்பினரது உடல்களும் குளிரச் செய்யப்பட்டு கழுத்து மற்றும் முள்ளந் தண்டுப் பகுதிகளின் இளையங்கள் சிதைவு ஏற்படாமல் மிகவும் கூரிய ஆயுதத்தால் வெட்டித் தயார் செய்து கொள்ளப்பட்டன. சத்திர

சிகிச்சை இடம்பெற்
பொருந்தும் வரை 4
நிலையில் இருக்
மருத்துவர்கள் தெ
தற்போது குரங்கு
அகற்றிவிட்டு
தலையைப் பொரு
சத்திரசிகிச்சை செ
தகவலை இப்போ
வெளியிட்டுள்ளன
செய்யப்பட்ட குரங்
டும் காட்சி வீடியோ
வெளியிட்டனர். இ
சீனாவில் உள்ள
பல்கலைக்கழகத்
பிரபல நரம்பியல்



# 1400 ஆண்டுகள் பழைமை கொண்ட மடாலயத்தைத் தகர்த்துள்ள ஐ.எஸ்.

பக்தாத், ஜன.22
ஈராக்கின் மொசுல் பகுதியில் அமைந்துள்ள பழைமையான கிறிஸ்தவ மடாலயத்தின் ஒரு பகுதி ஐ.எஸ். அமைப்பினரால் அழிக்கப்பட்டுள்ளது. பண்டைய பண்பாட்டுச் சின்னங்களை அழித்துவரும் ஐ.எஸ். அமைப்பின் மற்றுமொரு சதிச்செயலாகவே இது கருதப்படுகிறது.
ஆயிரத்து 400 வருடங்கள் பழைமைவாய்ந்த இந்தக் கட்டடம், புனித எலியா மடாலயம் என அழைக்கப்பட்டது. இது இயற்கையின் தாக்கம் மற்றும் மனித செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு நின்று பிடித்த ஒன்றாகும்.
இதன்நுழைவாயிலில்கிரேக்கஎழுத்துக்களால்சீ–ரோஎனகுறிப்பிடப்பட்டுள்ளது, இது இயேசுவின் பெயரைக்குறிப்பதாகும். தற்போது இந்தப் புராதன மடாலயத்தில் அமெரிக்கத் துருப்புகள் வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இதற்கிடையில் செய்மதி மூலம் எடுக்கப்பட்ட படங்களின் மூலம் குறித்த ஆலயம் அழிக்கப்பட்டுள்ளதாக ஆலய அதிகாரிகளும், பாதுகாப்பாளர்களும் உறுதிசெய்துள்ளதாக சர்வதேச செய்திச் சேவை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த–ரி4)



# லைக்கழகத்தில் ரிகள் தாக்குதல்

## ட்பட 21 பேர் சாவு



ணிநேரம் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. ன் பின்னர் இராணுதினர் பல்கலைக் கழகத்தின் வொரு பகுதியிலும் தேடுதல் வேட்டை நடத்தி இந்தத் தாக்குதலை தலிபான்கள் நடத்தியதாக தேகிக்கப்படுகிறது. தலிபான்களின் ஊடகப் பேச்சாளர் இதனை மறுத்துள்ளார்.
பல்கலைக்கழகத்தின் விருந்தினர் இல்லத்தினூடாகக் காலை ஒன்பது மணியளவில் தாக்குதலாளிகள் உள்நுழைந்துள்ளனர். விடுதிப் பகுதியில் இரு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

> இராணுவத்தினர் பல்கலைக் கழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேடுதல் வேட்டை நடத்தினர். இந்தத் தாக்குதலை தலிபான்கள் நடத்தியதாக சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் இதன் பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் சுற்றிவளைப்பினை மேற்கொண்டு கட்டடத்தின் உள் இருந்தவர்களை பாதுகாப்பாக அப் புறப்படுத் தினர் எனத் தெரிவித்தார்.
சில தினங்களுக்கு முன்பு போராளிகளின் தாக்குதல் இடம்பெறலாம் என்ற திட்டத்தை அறிந்ததால் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–ரி4)

# டந்தது தலை மாற்று அறுவைச் சிகிச்சை



ற்ற பின்பு சரியாகப் 4 மாதங்கள் கோமா க்க நேரிடும் என தரிவித்தனர்.
ஒன்றின் தலையை வேறு குரங்கின் ருத்தி வெற்றிகரமாக ய்துள்ளனர். இந்தத் ாது விஞ்ஞானிகள் னர். சத்திரசிகிச்சை வகு உயிருடன் நடமா ாவையும் அவர்கள் இந்தச் சத்திரசிகிச்சை காா்பின் மருத்துவ த்தில் நடந்ததாக ல் சிகிச்சை நிபுணர் கனோவேரோ தெரிவித்தார்.
சத்திரசிகிச்சை முடிந்து இந்த குரங்கு நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தது. ஆனாலும் வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக 20 மணிநேரம் கழித்து அந்தக் குரங்கைக் கொன்று விட்டோம் என்று கனோவேரோ கூறினார். மேலும் அவர் கூறும் போது, குரங்கும் மனிதனும் ஒரே மாதிரி உடல் அமைப்பைக் கொண்டவர்கள். எனவே குரங்குக்குச் செய்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக அமைந்ததால் மனிதனுக்கும் தலை மாற்று [illegible] 2017 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த சத்திரசிகிச்சையைச் செய்யத் தயாராகி விடுவோம் என்றார். (த–ரி4)

# புதுடில்லியில் சூழல் மாசை கட்டுப்படுத்த புதிய திட்டம்

## 20 கோடி இந்திய ரூபா செலவில்




புதுடில்லி, ஜன.22
இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் வாகனங்களின் பாவனையைக் கட்டுப்படுத்திச் சூழல் மாசைக் குறைக்கும் நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.
இதற்காக வருடத்துக்கு 20 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 14 கோடி ரூபா பொது மக்களுக்கான பஸ் போக்குவரத்தை ஏற்பாடு செய்யவும், 3.5 கோடி ஒற்றை - இரட்டை போக்குவரத்தைப் பேணும் மக்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.
5 ஆயிரம் தொண்டர்கள் பயணிகளை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் இணைந்துள்ளனர். அவர்களுக்கு ஒரு நாளைக்கு 500 ரூபா வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர 3 கோடி ரூபாயில் புதிய திட்டம் தொடர்பான விளம்பரப்படுத்தலும், 1 கோடி ரூபாவில் விதிமுறைகளைப் பேணுவதற்கான நன்றி தெரிவிப்புப் பதாகைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.
புதுடில்லி போக்குவரத்து அமைப்பு ஆயிரத்து 200 பஸ்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளது. ஒரு கிலோ மீற்றருக்கு 42 ரூபா செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 225 கிலோ மீற்றர் பயணிக்கும் என்ற திட்டமிடலுடன், ஆயிரத்து 200 பஸ்கள் 13 நாள்களுக்குச் செலுத்தத்திட்டமிடப்பட்டிருப்பதாக டில்லி அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்தத்திட்டத்தின் மூலம் போக்குவரத்து அமைப்புக்கு ஒரு நாளைக்கு 23 லட்சம் இந்திய ரூபா வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதா எம் குலமாதா...

கே.எஸ்.சிவஞானராஜா

மண் வீடுகள் எங்கும் கோலோச்சிய காலமது. மந்தைகள் பாதையெங்கும் நிரம்பி வழிந்த கோலமது. பண்ணோடிசைந்த பாவையர் பாடி மகிழ்ந்த வேளையது. பசு மாடுகளெல்லாம் பாலைப் பொழிந்த கறிலையழகது. ஒவ்வொரு கிராமங்களும் பாலைப் பூரண உணவாக அனுபவித்த ஆயகலை மிகுந்த காலமது. கோயில்களிலும் மூர்த்திகரம் செறிவதற்காக குடம் குடமாக அபிசேகம் செய்து பாலை வரமாகக் கொண்ட நாள்களது. பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பஞ்ச கௌவியங்கள் மருந்தாக அருள்பலித்த விந்தையது. பசுவின் சாணியால் உண்டாக்கப்பட்ட பஸ்பமே, திருநீறாக நோய் தீர்த்த மகிமையது. இதனைவிட பசுவைத் தொட்டாலே அதன் மடி சுரக்கும்- தாயைப் போன்ற, இரக்க சுபாவமுடையது. எல்லாவற்றுக்கும் மேலாக பசுவின் உடம்பெல்லாம் முப்பத்து முக்கோடி தேவர்கள் வதிகின்ற உண்மையை உலகின் கண் வதியும் எழுநூறு கோடி மக்களுக்குப் பால் எப்படியோ உணவாகின்ற தன்மையினால் உணரப்பாலதன்றோ! உணராவிட்டாலும் கூட காலம் நிச்சயம் உணர்த்தியே தீரும். பத்தாம் திருமுறையில் திருமூலர் இதனைத் தெளிவாக்குகின்றார்.

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே

பசுவுக்கொரு வாயுறை மட்டும் கொடுத்தாலே அஃது ஒரு பெரிய தர்மமாகும். என்பது நூலோர் வகுத்த முடிவாகும். இதன் தாற்பரியத்தை உணர்ந்ததனாலேயே அன்றைய காலத்தில் வீட்டுக்கொரு பசுவைக் கட்டாயமாக வளர்த்தார்கள். ஒவ்வொரு வீடும் அறச்சாலையாக மிளிர்ந் தது, பால் குடிக்கும் பூனை கூடப் பசுவாக அடக்கமாக வளர்ந்தது. நாம் எதை எப்படிக் குடிக்கிறோமோ அவ்வாறு அது அதுவாக மாறுகிறோம். பசுப்பால் குடிப்பவர்கள் பதுமையாக, அடக்கமாக, பக்தியாக வாழ்வது கண்கூடு. ஆட்டுப்பால் குடிப்பவர்கள் திடகாத்திரமாகத் தோன்றுவார்கள். ஏனைய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நாட்டம் இருந்தே தீரும். எல்லாவற்றுக்கும் மேலாக பசுப்பால் வளரும் பிள்ளைகளுக்குத் தினமும் கொடுத்து வந்தால் நல்ல பண்புகள் பற்றிக் கொள்ளும். சொந்த வீடு வைத்திருப்பவர்கள் நம்பிக்கையோடு ஒரு பசுக் கன்றை வளர்க்க ஆசைப்படுங்கள் அது உங்களை வாழ வைக்கும். நல்ல சிந்தனை வளரும். சிவன், உமை தேவர்கள் நல்லாத்துமாக்கள் உங்கள் வீடு தேடி வந்து குறையொன்று மில்லாது உங்களைப் பாதுகாப்பர்.



“ பசுவின் உடம்பெல்லாம் முப்பத்து முக்கோடி தேவர்கள் வதிகின்றனர்.

**சஞ்சீவி**

அறுபத்தாறு தடவை பசுவின் சாணியிலிருந்து தயாரிக்கப்படும் திரு நீற்றைபெரும் சஞ்சீவியாகப் போற்றி சம்பந்தப் பெருமான் திருவாலவாய்த் திரு நீற்றுப் பதிகத்தை அருளியதிலிருந்து பசுவின் மகத்துவம் உணர்த்தப்படுகிறது. பெருந்தவத் தேவர்களுக்கெல்லாம் ஆசை கொடுப்பது நீறு. ஆசை உள்ளபடி யினால் பலர் திருநீறு பூசுவதையெல்லாம் அடியோடு விட்டு விட்டார்கள். சுத்தமான திறு நீறு இல்லை என்பதற்காகச் சைவத்தின் சின்னங்களை மறப்பது நியாயம் தானா? கம்பவாரிதி திருநீறு பூசுவது போல இலங்கையில் யாருமே பூசியதாக யாமறி யோம். மற்றும் சிவ தீட்சை பெற்றவர்களிடத்தேயும் திருநீறானது திரிபுண்டரிகமாய் ஜொலிப்பதைக் கண்டு பசுவை வணங்க முடிகின்றது. மதிக்கவும் முடிகிறது.

ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல் என்று அப்பர் சுவாமிகள் பசுவை மேன்மைப்படுத்துவது இங்கு நோக்கத்தக்கதே. சைவம் எங்கெங்கு மிளிர்ந்தாலும் அங்கு சாணியும் இருக்கும், பிள்ளையாரும் இருப்பார். பாலுமிருக்கும், நெய்யுமிருக்கும். இதனை அடிப்படையாக வைத்தது பார்க்குமிடத்து பசுவை நாம் தெய்வமாகப் போற்ற வேண்டிய தேவை நாளுக்கு நாள் பெருகியே வருகின்றது. கோசலத்தையும் கோமயத்தையும் சரிவரப் பராமரித்து வருவோமாக இருந்தால் சமைப்பதற்கான எரி வாயுவை நாம் வீட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளும் இலாபகரமான விஞ்ஞான முறையை அனுபவிக்க முடியும். சுன்னாகப் பகுதியில் அமைந்துள்ள பார்வை குறைந்தவர்களது வாழவக இல்லத்திலே சாணியிலிருந்து பெறப் படும் எரிவாயு நிலையத்தையும் அடுப்புக் களையும் எம்மால் வியக்க முடியும்.

பெரிய விடயம் என்னவென்றால் 36,000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த பழங்கால மனிதர்களின் குகை ஓவியங்களில் மிருகங்கள் பல இடம்பெற்றிருப்பதும் அதிலும் மாடு இடம்பெற்றிருப்பது இங்கு கூர்ந்து அவதானிக்கத் தக்கது.

(ஆதாரம்:உதயன் 13.01.2016 பக்கம் 18)

புட்டிப்பால்குடிப்பவர்களும்பட்டிப்பொங்கலை பாட்டியுடனோ அப்பா அம்மாவுடனோ சேர்ந்து கோமாதாவுக்கு தேடிச் சென்று பொங்கலோஅல்லது ஏதாவது பொருத்தமான அறுகம்புல்லையோ கொடுத்து கோமாதாவை வணங்கலாம்.

**திருக்கேதீஸ்வரம்**

பாலாவியின் கரையிலமைந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தில் தினந்தோறும் கோமாதா பூஜை நடைபெறும். பசுவைத் தொட்டுக் கும்பிடும் போது அதுவும் பிரசாதங்களை ஏற்று எல்லோரையும் ஆசீர்வதிக்கும், நக்கிக் கொள்ளும். காரைநகர் வியாவில் ஐயனார் கோயிலிலும்பசுக்களும் திருநீறும் பொலிவதைப் பார்த்து எம்மால் உணரவும் வாழவும் முடிகிறது.




## சிங்கம்

(உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் சிங்க ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். சிங்கராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.)

**ஜூலை**

இம்மாத முற்பாதியில் லாப ஸ்தானமான 11-ல் சூரியன், சுக்கிரன், புதன் சஞ்சாரம் செய்வதால் எதையும் சமாளித்து ஏற்றம்பெறுவீர்கள். தொழில், உத்தியோகம் செய்பவர்களுக்கு இருந்துவந்த பிரச்சினைகள் விலகி புதிய வாய்ப்புகள் தேடிவரும். பணவரவுகளும் பஞ்சமின்றி இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றினாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட முடியும். முன்கோபத்தைக் குறைப்பது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. அரசு வழியில் அனுகூலங்கள் உண்டாகும். குடும்பத்திலும் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும். தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்வது உத்தமம்.

**ஓகஸ்ட்**

சுக ஸ்தானமான 4-ல் சனி, செவ்வாய் சஞ்சாரம் செய்வதும், 12-ல் சூரியன் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பு என்றாலும் 2-ஆம் தேதி முதல் குரு 2-ல் சஞ்சரிப்பதால் பணவரவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் தடைப்பட்ட திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளை தற்போது மேற்கொள்ளலாம். தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கக்கூடும். முடிந்த வரை முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு நிதானத்தைக் கடைப்பிடிப்பதும், பிறர் விடயங்களில் தலையீடு செய்யாதிருப்பதும் நல்லது. உடல் ஆரோக்கியம் ஓரளவுக்குச் சிறப்பாக இருக்கும். கொடுக்கல்- வாங்கல் லாபம் தரும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு சிறுசிறு போட்டிகள் ஏற்படும். முருக வழிபாடு செய்வது உத்தமம்.

**செப்ரெம்பர்**

ஜென்ம ராசியில் சூரியன் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பு என்றாலும், குரு 2-ல் சஞ்சரிப்பதால் சுபகாரியங்கள் கைகூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி, பொருளாதாரரீதியாக உயர்வுகள் உண்டாகும். கணவன்- மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். உற்றார்- உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றிமறையும். கொடுக்கல்- வாங்கல் சரளமாக நடைபெறும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் திறம்பட செயல்படமுடியும். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் குறைந்து லாபம் பெருகும். முருகப்பெருமானை வழிபடுவது உத்தமம்.

**ஒக்ரோபர்**

ஜென்ம ராசியில் ராகு, 7-ல் கேது சஞ்சரித்தாலும் மாத பிற்பாதியில் 3-ல் சூரியன் சஞ்சரிப்பதால் நினைத்தது நிறைவேறும். கணவன்- மனைவியிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. பிறர் விடயங்களில் தலையீடு செய்வதைத் தவிர்ப்பது நல்லது. குருவும் சாதகமாக சஞ்சரிப்பதால் பண வரவுகள் சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சற்றே கவனம் செலுத்த வேண்டியிருக்கும். உத்தியோகஸ்தர்கள் நிம்மதியுடன் பணிபுரிய முடியும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிட்டும். துர்கையம்மனை வழிபடுவது நல்லது.

**நவம்பர்**

ஜென்ம ராசிக்கு 3-ல் சூரியன், 6-ல் செவ்வாய் சஞ்சாரம் செய்வது அற்புதமான அமைப்பாகும். இதனால் உங்களது பலமும் வளமும் கூடும். பணவரவுகள் மிகச்சிறப்பாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை உண்டாகும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புடைய வாய்ப்புகளும் தேடிவரும். என்றாலும் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி செய்ய நினைக்கும் காரியங்களில் சற்று கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியம் சிறப்பாகவே இருக்கும். தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துவிடுவது நல்லது. சனிக்கு பரிகாரம் செய்யவும்.


**டிசெம்பர்**

சுக ஸ்தானமான 4-ல் சூரியன் சஞ்சரித்தாலும், 2-ல் குரு சஞ்சரிப்பதால் அலைச்சல், டென்ஷன் குறையும். எடுக்கும் காரியங்களில் வெற்றிகிட்டும். தாராள தனவரவுகளைஉண்டாக்கும். சுபகாரியங்கள்நடைபெற்று மகிழ்ச்சியளிக்கும். உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடப்பது நல்லது. கொடுக்கல்- வாங்கல் சரளமான நிலையில் நடைபெறும். உத்தியோகஸ்தர்களுக்கு தடைப்பட்ட உயர்வுகள் கிடைக்கப்பெற்று பெயர், புகழ் உயரும். தொழில், வியாபாரத்தில் நல்ல லாபமும் அபிவிருத்தியும் பெருகும். கடன்கள் படிப்படியாகக் குறையும். முருகப் பெருமானை வழிபாடு செய்வது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜராஜன்



# மழை நீரைச் சேமித்து வைப்பதில் மெத்தனமாக இருப்பது நியாயமா?

கடந்த மாதம் தொடர்ந்து கொட்டிய மழை மக்களை வெறுப்படையும் நிலைக்குத் தள்ளி விட்டது. வயல்வெளிகளில் மட்டுமல்லாது வீட்டுவளவுகளிலும் வெள்ளம் தேங்கி நின்றது. சில பகுதிகளிலுள்ள வீடுகளினுள் வெள்ளம் புகுந்ததால் அங்கு வாழ்ந்த மக்கள் வேறு இடங்களில் தஞ்சமடைய வேண்டிய நிலை உருவானது. தெருக்களிலும், ஒழுங்கைகளிலும் வெள்ளம் தேங்கி நின்றதால் மக்களின் போக்குவரத்திலும் இடர்கள் ஏற்பட்டன. கூலி வேலை செய்து அன்றாடம் பிழைப்பவர்களின் நிலை பரிதாபகரமான கட்டத்தை எட்டி நின்றது. மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியவில்லை. அலுவலகங்களில் பணிபுரிவோரும் அவதிக்குள்ளாகினர். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைந்த நிலையில் காணப்பட்டது என்றே கூறமுடியும்.

தொடர்மழை மரக்கறிப் பயிர்களையும் விட்டு வைக்கவில்லை. இதனால் மரக்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து ஆகாயத்தைத் தொட்டு விட்டது. சந்தை வியாபாரிகள் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவார்களா? நன்றாகவே பயன்படுத்திக்கொண்டனர். பாவனையாளர்கள்தான் தடுமாறிப்போய் விட்டனர்.

தாழ்வான வயல்களில் பெருவெள்ளம் தேங்கியதால் பயிரழிவுகளுக்குக் குறைவில்லை. விவசாயிகள் மண்வெட்டியும், கையுமாக வயல் வெளிகளில் அல்லாடிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

வானம் அழுதால் பூமி சிரிக்கும் என்று கூறுவார்கள். ஆனால் இங்கோ வானம் அழுததால் பூமியும் அழவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. தற்போது மழை படிப்படியாக ஓய்ந்து விட்டது. சூரியனின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகின்றது. மேட்டுப் பிரதேச வயல்களில் உள்ள நெற் பயிர்கள் நீரின்றி மெல்ல மெல்ல மடிவதைக் காண முடிகின்றது. நீர் இறைப்பதற்குரிய வசதி படைத்தவர்கள் தம்மை ஏமாற்றிய மழையைச் சபித்த வண்ணம் பயிர்களுக்கு நீரைப் பாய்ச் சுவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

உலக வாழ்க்கையின் இருவேறு பக்கங்களை இங்கு நாம் பார்க்கின்றோம். மழை பெய்தாலும் துன்பம்பெய்யாது விட்டாலும் நட்டம், இயற்கையின் லீலைகளை மனிதர்களாகிய நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தென்பகுதிக்குப் பயணத்தை மேற்கொள்பவர்கள் மதவாச்சியைக் கடந்து அநுராதபுரத்தின் எல்லையைத் தொடும்போது வீதியோரத்தில் அமைந்துள்ள நெல் வயல்களைக் கண்டு களிக்க முடிகின்றது. நீர் நிரம்பியுள்ள வயல்களில் நெற்பயிர்கள் காற்றின் தாளத்துக்கு ஏற்ப ஆடிக்கொண்டிருப்பது ரம்மியமான காட்சிதான். அங்கு இருப்பது வானம் பார்த்த பூமியல்ல. மகாவலி அன்னை அந்த மண்ணை வளம் கொழிக்கச் செய்கின்றாள். ஆனால் அவளது கருணை மழை அநுராத புரத்துக்கு அப்பால் உள்ள வடபகுதியை நோக்கி இன்னமும் பொழியவில்லை. இனவாதிகள் மகாவலிக்கும் தடைபோட்டுவிட்டார்கள். மகாவலி கங்கையின் நீர் வடபகுதிக்குக் கிடைக்குமானால் எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடும்.

குடாநாட்டின் நிலத்தடி நீர் மாசுக்களால் நிறைந்து அருந்துவதற்கு ஏற்றதாக இல்லை என்பது நிபுணர்களின் கூற்று. ஏற்கனவே மலத்தொற்று, நைதரேற் என்பன நிலத்தடி நீரை மாசுபடுத்திய நிலையில் எண்ணெய்க் கழிவுகளும் அச்சத்தைத் தரும் வகையில் நீரை மாசுபடுத்தி விட்டன. இதனால் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் அதிக சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இஸ்ரேல் என்ற தேசம் சிறியதாக இருந்தாலும், வல்லமையுடன் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் யூத இன மக்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மூளைசாலிகளாகவும், முயற்சி உடையவர்களாகவும் விளங்கியதால் தாம் வாழ்ந்த நாடுகளில் சிறப்பான இடத்தை அவர்கள் பெற்றிருந்தனர். ஆனால் ஹிட்லர் போன்ற இனவாதிகள் யூதர்களை வெறுத்தனர். யூத மக்களை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிய ஹிட்லர் விசவாயுக் கூண்டுக்குள் அடைத்து சுமார் 60 லட்சம் யூதர்களைக் கொன்றான். இதன் காரணமாக யூத மக்கள் தமது தாயகமெனக் கருதப்பட்ட மத்திய கிழக்கிலுள்ள ஜெருசலேத்தை உள்ளடக்கிய பகுதிக்குச் சென்று குடியமர்ந்தனர். அங்கு வறண்ட கற்பாறைகள் நிறைந்த பூமி காணப்பட்டாலும் அந்த மக்கள் இவை எவற்றையும் பொருட்படுத்தாது தமது தாய்நாட்டை வளப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டனர். இஸ்ரேல் என்னும் பெயர் சூட்டப்பட்டு அவர்களால் உருவாக்கப்பட்ட நாடு இன்று சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த ஒரு நாடாகத் திகழ்கின்றது. நவீன தொழில்நுட்பம் நிறைந்த ஒரு நாடாக இஸ்ரேல் உருவாகியுள்ளதுடன் நவீன ஆயுதங்களைத் தயாரித்து அவற்றை ஏற்றுமதி செய்வதிலும் முன்னணி வகிக்கின்றது. ஆயுத உற்பத்தியில் மட்டுமல்லாது சுவை மிகுந்த திராட்சைப் பழங்களை உற்பத்தி செய்வதிலும் இஸ்ரேல் சாதனை படைக்கின்றது. கற்பாறைகள் நிறைந்த, நீர்வளம் குறைந்த அந்த நாடு அடைந்து வரும் முன்னேற்றம் வியப்புக்குரியது. மழை வீழ்ச்சி மிகக்குறைந்த அளவில் கிடைக்கும் அந்த நாடு தனது நீர்த் தேவையைச் சமாளிக்கின்ற விதம் வியப்புக்குரியது. உரிய இடங்களில் தேவையான அளவு சிறியதும், பெரியதுமான அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டு மழை நீர் சேமித்து வைக்கப்படுகின்றது. மேலும் நிலத்தடியில் மழை நீரைத் தேக்கி வைக்கின்ற தொழில் நுட்பம் அங்கு பெரும் வெற்றி பெற்றுள்ளது. இதனால் மழை நீரின் ஒரு சொட்டுக்கூட அங்கு வீணாக்கப்படுவதில்லை. இதுவே இஸ்ரேல் நாட்டில் நீர்ப் பற்றாக்குறை ஏற்படாமைக்கான பிரதான காரணமாகும்.

> மழைநீர் எங்குமே தேக்கி வைக்கப்படாமல் வீணாகக் கடலுடன் சங்கமமாவதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. மழை நீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்த வேண்டுமென நாம் ஒருபோதுமே எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை. வடக்கு மாகாண அரசும் இதில் அக்கறை காட்டுவதில்லை. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், சுபீட்சத்துக்கும் நீர் வளமே பிரதான காரணியாகும். நீர் இல்லாமல் எதுவுமே இடம் பெறப்போவதில்லை.

ஆனால் மலைகளோ, ஆறுகளோ, இல்லாத குடாநாட்டில் மழை நீரைச் சேமிக்கின்ற நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. கடந்த மாதம்பெருமழை பெய்து வெள்ளம் ஏற்பட்டது. இது தொடர்பாகவே நாம் பேசி வருகின்றோம். ஆனால் மழைநீர் எங்குமே தேக்கி வைக்கப்படாமல் வீணாகக் கடலுடன் சங்கமமாவதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. மழை நீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்த வேண்டுமென நாம் ஒருபோதுமே எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை. வடக்கு மாகாண அரசும் இதில் அக்கறை காட்டுவதில்லை. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், சுபீட்சத்துக்கும் நீர் வளமே பிரதான காரணியாகும். நீர் இல்லாமல் எதுவுமே இடம்பெறப்போவதில்லை. மானாவாரியாக நெற்செய்கையில் ஈடுபட்டு வானம்பொய்க்கும்போது நட்டத்தை எதிர்கொள்வது வடபகுதி விவசாயிகளுக்கு வழக்கமாகவே போய்விட்டது. ஆனால் இதற்கு மாற்றுவழி என்ன என்பதை எவருமே நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை.

வடபகுதியின் ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறிய அணைக்கட்டுக்களை அமைத்து மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலமாக எமது நீர்த் தேவையை நாம் ஓரளவு பூர்த்தி செய்ய முடியும். அத்துடன் வீடுகளிலும் மழை நீரைச் சேமித்து வைக்கக் கூடியவாறு ஏற்பாடுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். யூத இன மக்களுக்கு இந்தச் செயற்றிட்டங்கள் சாத்தியமாகும் என்றால் எமக்கு ஏன் முடியாது?

வடபகுதி விவசாயிகள் உழைப்புக்கும், முயற்சிக்கும் பேர் போனவர்கள். நீர் வளங்கள் இல்லாத நிலையிலும் விவசாயத்தில் மேன்மையானநிலையில் உள்ளவர்கள். நிலத்தடி நீரை நம்பியே சிறுபயிர்களை இவர்கள் பயிரிட்டு வருகின்றனர். மழையை நம்பியே நெற்செய்கை இடம்பெற்று வருகின்றது. மழை பொய்த்தால் நெற் செய்கையும் பொய்த்து விடும்.

இன்று குடாநாட்டின் ஒருபகுதி மக்கள் குடிதண்ணீருக்குப் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எதிர்காலத்தில் பிற தேவைகளுக்குத் தேவையான நீரையும் பெறமுடியாத நிலை உருவாகப் போகின்றது. ஆனால் இங்கு வாழ்கின்ற மக்கள் இது தொடர்பாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. வழக்கம் போன்று ஒன்றுமே அறியாதவர்கள் போன்று மௌனம் சாதித்துக்கொண்டு இருக்கிறார்கள். மௌனமாக இருந்து விட்டால் எல்லாமே தானாக நடந்து விடுமென இவர்கள் நினைக்கிறார்கள் போலத் தெரிகின்றது.

இவர்கள் தமது தூக்கத்திலிருந்து உடனடியாக விழித்துக் கொள்ள வேண்டும். உலக யதார்த்தத்தைப் புரிந்து நடந்து கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் உருவாகப்போகின்ற பெரும் நீர்த்தட்டுப்பாடு குடாநாட்டை வனாந்தரமாக்கிவிடும் என்ற உண்மையை அவர்கள் இப்போதாவது உணர்ந்து அதைத் தவிர்க்கும் வரையிலான திட்டங்களைத் தீட்டிக் கொள்ள வேண்டும். படித்தவர்களும், புத்திஜீவிகளும் நிறைந்தது யாழ்ப்பாணக் குடாநாடு எனப் பெருமைப்பட்டுக் கொள்ளும் நாம் அவர்களைப் பயன்படுத்தாமல் இருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்தமுடியாது. தேவையெனில் நிபுணர் குழுவொன்று இஸ்ரேல் சென்று அந்த நாட்டு மக்களின் நீர் முகாமைத்துவம் தொடர்பாக நேரில் ஆராய்ந்து, அதனை இங்கு செயற்படுத்துவதற்கு உடனடியாக முன்வர வேண்டும்.

யாழ்ப்பாணம் எதிர்காலத்தில் பாலை வனமாக மாறிவிடுமென எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில், நாம் அதைத் தவிர்ப்பதற்கு எதுவுமே செய்யாமல் சோம்பிக் கொண்டிருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

நாம் இன்னமும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் எமது எதிர்காலச் சந்ததி எம்மைத் தூற்றப்போவதை எம்மால் தவிர்க்க முடியாமல் போய்விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தொண்டும் அன்னை திரேசாவும்



அன்பு, பண்பு, அடக்கம், தொண்டு. இவை அனைத்தையும் கொண்டவர் அன்னை திரேசா!

அன்னை திரேசா யுகோஸ்லேவியா நாட்டின் 'ஸ்கோப்ஜி' என்ற ஊரில் 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் 'அல்பேனிய' மொழி பேசுகிறவர்கள்.

தந்தை ஒரு பண்டகசாலையின் காப்பாளர். தாயார் ஒரு உழவுத் தொழிலாளி. தாய் தந்தையர் இருவரும் மூன்றாவதாகப் பிறந்த இந்தப் பெண் குழந்தைக்கு 'அக்னஸ் கான்ஷா பெஜாட்சு' எனப் பெயரிட்டனர்.

இளம் வயதில் 'அக்னஸ்' என்றே இந்தப் பெண் குழந்தையை எல்லோரும் அழைத்தனர்.

அக்னஸுக்கு பன்னிரண்டு வயது நடக்கும் போது, 'லொரட்டா" என்ற அமைப்பிலுள்ள கன்னித் துறவிகள், இந்தியாவைப் பற்றியும், இந்திய மக்கள் படும் துயர் பற்றியும் கதை கதையாகக் கூறினார்கள். இதைக்கேட்ட அக்னஸுக்கு இந்திய மக்களுக்குத் தானும் தொண்டாற்றச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

அந்த ஆர்வத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்தது, இந்தியாவிலிருந்து வந்த மற்ற தொண்டர்களின் கடிதங்கள். அந்த 'லொரட்டா' என்ற கன்னித் துறவிகள்ஸ்தாபனத்தில் வாரம் ஒருமுறை இந்தியாவிலிருந்து வரும் கடிதங்களைப் படித்துக் காட்டு வார்கள்.

அதற்காகவே அக்னஸ் அங்குசென்று காத்திருப்பது உண்டு. அக்னஸின் பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு அவரது பதினெட்டாவது வயதில் லொரட்டாக் குழுவில் கன்னித் துறவி ஆனார்.

இரண்டு ஆண்டுகள் கடுமையான பயிற்சியும் ஆங்கில மொழியில் தேர்ச்சியும் பெற்றார். அந்தக்குழுவின் மூலம் 1930 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார்.

கல்கத்தாநகரிலுள்ளதூயமேரிஉயர்நிலைப்பள்ளியில் ஆசிரியையாகச் சேர்க்கப்பட்டார்.

கன்னியர் மடத்தில் சேர்ந்ததும் அவரது அகனஸ் என்ற பெயர் ' திரேசா" என மாற்றப்பட்டது. குறுகிய காலத்துக்குள் பள்ளியின் தலைமை ஆசிரியராகி விட்ட 'திரேசா' பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் மக்களுக்குத் தொண்டாற்ற முயன்றார்.

கன்னியர் மட விதிப்படி கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அன்னை திரேசாவின் பணி தடுக்கப்பட்டது. மூன்றாண்டுகள் தீவிரமாக முயன்று போப் பாண்டவரின் அனுமதிபெற்று 1948 ஆம் ஆண்டு கல்கத்தாவிலுள்ள 'மோத்திஜில்" என்ற பகுதியில் மக்கள் தொண்டு என்ற தன் பணியைத் தொடர்ந்தார் அன்னை திரேசா.

ஏறக்குறைய நாற்பதாண்டு காலமாகத் தொடர்ந்து மக்கள் தொண்டே தன் வாழ்க்கை என அமைத்துக்கொண்ட அன்னை திரேசா தள்ளாடும் வயதிலும் சோர்வின்றி ஏழை மக்களுக்குத் தொண்டாற்ற ஊர் ஊராகச் சென்றார் .

உலகத்திலுள்ள எல்லாப் பரிசுகளும், விருதுகளும் அன்னை திரேசாவுக்குத் தரப்பட்டுவிட்டன. அன்னை திரேசாவைப் பாராட்டாத தலைவரோ வரவேற்காத நாடோ உலகில் எங்குமே இல்லை என்பது மிகையல்ல.

## விடுகதைகள்

1. கீறினால் சோறுதரும், நீர் ஊற்றினால் சேறு வரும் அது என்ன?
   - நிலம்
2. விரிந்த வயல் வெளியில் விதைத்த நெல் மணிகள் அது என்ன?
   - நட்சத்திரம்
3. மூலையில் முடங்கிக் கிடப்பான், மூலைமுடுக்கெல்லாம் சுத்தம் செய்வான் அவன் யார்?
   - துடைப்பம்
4. இனிப்புப் பொட்டலத்துக்கு இரண்டாயிரம் பேர் காவல் அது என்ன?
   - தேன்கூடு
5. கையில்லாமல் நீந்தி, கடல் கடப்பான் அவன் யார்?
   - கப்பல்
6. எண்ணத்தை விதைத்து, வண்ணமாய் அறுவடை செய்வது அது என்ன?
   - ஓவியம்
7. அவனுக்கு காவலுக்கு ஒரு வீடு, வாழ்வதற்கு ஒரு வீடு அவன் யார்?
   - ஆமை
8. ஆரவாரம் இல்லாமல் அணிவகுப்பு, ஓயாது அவர்கள் உழைப்பு. யார் அவர்கள்?
   - எறும்புக் கூட்டம்
9. கோழிபோல் உருவம், குதிரைபோல் ஓட்டம் அது என்ன?
   - நெருப்புக் கோழி
10. உயரப் பறக்கும், ஆனால் ஊரைச் சுற்றிக் கொண்டு பறக்காது அது என்ன?
    - கொடி
11. கண்ணே இல்லாதவன், கண் இழந்தோருக்கு வழிகாட்டுவான் அவன் யார்?
    - கைத்தடி
12. உதை வாங்கி, உதை வாங்கி ஊருக்குச் சேதி சொல்வான் அவன் யார்?
    - தண்டோரா
13. கருப்பன் தண்ணீரில் குளித்து வெள்ளையாவான், வெள்ளையன் பிறகு விருந்தாவான் அவன் யார்?
    - உளுத்தம் பருப்பு
14. உருவம் இல்லாத ஒருவன், உலகெங்கும் உலாவித் திரிவான் அவன் யார்?
    - காற்று

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



## வரலாற்றில் இன்றைய தினம்

1510 – ஜேர்மனியின் கொல்மர் பகுதியில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
1517 – கெய்ரோவை துருக்கி வெற்றி கொண்டது.
1584 – சுவிற்சர்லாந்தின் ஒரு பகுதி கிறகோரியன் கலண்டரை பின்பற்றத் தொடங்கியது.
1831 – கலைப்பட்டத் தேர்வுக்குத் தோற்றினார் சார்ள்ஸ் டார்வின்
1837 – சிரிய நிலநடுக்கத்தில் ஆயிரக் கணக்கானோர் சாவு.
1850 – கலிபோர்னியாவிலேயே முதலாவதான அற்லா கலிபோர்னியா நாளிதழ் வெளியானது.
1873 – பிரித்தானிய எஸ்.எஸ்.நோர்த் பிளீற் கடலில் மூழ்கி 300 பேர் சாவு.
1901 – விக்ரோறியா மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்ட 63 ஆண்டுகால முத்திரைத் தொடர் விற்பனையை நிறுத்தி. 7ஆம் எட்வட் அரசரின் முத்திரைகளை விற்பனைக்குவிடத் தொடங்கியது பிரித்தானியா.
1905 – ரஷ்யா சென்.பீற்றர் ஸ்பேக்கில் பாதர் ஹபன் தலைமையிலான பெருமளவான தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தில் சார் மன்னனின் துருப்புக்கள் துப்பாக்கி வேட்டு. இது கறுப்பு ஞாயிறு என்று அழைக்கப்படுகின்றது.
1941 – ரோமேனியாவில் ஏராளமான யூதர்கள் படுகொலை.
1957 – சினாய் குடாநாட்டிலிருந்து இஸ்ரேல் படைகள் விலகல்.
1970 – போயிங் 747 முதலாவது வர்த்தகப் பறப்பு நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் இடம்பெற்றது.
1982 – வடஅமெரிக்காவின் 75 வீத பகுதி பனியினால் மூடப்பட்டது.
1991 – குவைத்தின் எண்ணெய் வளம் ஈராக் படைகளால் அழிக்கப்பட்டது.
1994 – புதுவருடத்துடன் பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழித்து விடுவேன். ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவிப்பு.
2001 – தடுப்பூசிக்கு ஆதரவாக பிரித்தானிய அரசு பரப்புரை.
2006 – தாய்லாமா வருவதை அனுமதிக்க முடியாது என ஜாதிகஹெல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி ஆகியன தெரிவிப்பு.
2006 – ரஷ்யாவில் கிருஷ்ணர் கோயில் கட்ட இந்துக்களுக்கு அனுமதி மறுப்பு.
2007 – கிழக்கிலிருந்து புலிகளை வெளியேற்றியமை போர் நிறுத்த மீறலேயென கண்காணிப்புக்குழு தெரிவிப்பு
2007 – இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமெரிக்காவின் விசேட பிரதி நிதியை நியமிக்க அமெரிக்க ஜனாதிபதியிடம் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கோரிக்கை.
2013 – இனப்பிரச்சினைக்கான தீர்வு துரிதமாக வழங்கப்பட வேண்டுமென பீரிஸிடம் இந்தியா வலியுறுத்து.
2013 – சந்தேக நபர்கள் பொலிஸ் காவலில் இனிமேல் 48 மணி நேரம் என சட்ட வரைவு நிறைவேற்றம். குற்றவியல் விசேட சட்ட வரைவு 77 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம் ஆதரவு 110 எதிர் 33.

## காக்கை

கறுப்பு வண்ணக் காக்கை!
கரைந்து அழைக்கும் உறவை!
விருப்பு கொண்டு காக்கை
இசைந்து உண்ணும் உணவை!

ஒற்றுமை உணர்வை நாளும்
காக்கை நமக்குச் சொல்லும்!
வேற்றுமை என்பதை நாமும்
வாழ்க்கையில் தள்ள வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அணி எதிர்நோக்கும் சவால்

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் நடத்தப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா தெரிவித்துள்ளார். எல்லை நிர்ணயம் தொடர்பில் 1,831 திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதால் ஏப்ரல் மாதத்துக்குள் இவற்றைப் பூர்த்திசெய்துவிட்டு ஜூன் மாதத்தில் அல்லது ஜூன் மாதத்துக்கு முன் தேர்தல்களை நடத்திமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைத்துள்ளபோதிலும் எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் இந்த இரு கட்சிகளும் தனித்தனியே போட்டியிடவுள்ளன. தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் கட்சியின் தலைவர் மைத்திரிக்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் களத்தில் இறங்கியுள்ளார். பொங்கல் விழாக்களில் அவர் கலந்துகொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மேல் மாகாணத்தில் சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க சந்திரிகா தலைமையில் ஐவர் கொண்ட குழு ஒன்றை ஜனாதிபதி மைத்திரி நியமித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்கள் குறித்து,மைத்திரியின் தலைமையை ஏற்றுள்ள சுதந்திரக் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் மிகவும் தெளிவாக உள்ளனர். தற்பொழுது குழம்பிப்போய் இருப்பவர்கள் மகிந்த ஆதரவு சு.க. எம்.பிக்கள்தான். சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு மகிந்தவை ஆதரிப்போர் மற்றும் தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுரு, ஜாதிக ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என்று மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமார் 50 பேரின் ஆதரவை வைத்துக்கொண்டு இயங்குகிறார் மகிந்த. ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மண் கௌவி எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் கோட்டை விட்டவர்களுக்கு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் மற்றொரு சோதனை ஆகும். இதிலும் தோற்றால் இனி, மீட்சியே இல்லை.

இவர்கள் நிச்சயமாக மைத்திரி தலைமையை ஏற்றுக் கொண்டவர்களுடன் இணைந்து போட்டியிடப்போவதில்லை. அதேசமயம் சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி இருப்பதால் உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது மகிந்தவின் ஆதரவாளர்களுக்கு நியமனம் கிடைப்பதும் சந்தேகம். இவர்கள் நாடாளுமன்றத்தில் எதிரணியில் இருந்து அரசை விமர்சித்துக்கொண்டிருப்பதால் மைத்திரி நிச்சயமாக நியமனம் வழங்கமாட்டார்.

அப்படி என்றால் உள்ளூராட்சித் தேர்தலின்போது மகிந்த ஆதரவு சுதந்திரக் கட்சியினர் என்ன செய்யப்போகிறார்கள்? தாமரைச் சின்னத்தில் புதிய சுதந்திரக் கட்சி என்ற பெயரில் போட்டியிடலாம் என்கின்றனர் சிலர். தினேஷ், விமல், கம்மன்பில ஆகியோரைச் சேர்த்துக்கொண்டு கூட்டணி அமைப்பது இவர்களது திட்டம்.

புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கோரவில்லை. ஆனால் மக்கள் தீர்மானித்து விட்டார்கள்- என்கிறார் மகிந்த. ஆகவே, தனிக்கட்சியை விட வேறு வழியில்லை மகிந்தவுக்கு.




மகிந்த ஆதரவாளர்கள் மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சியில் இணைந்து போட்டியிட விரும்பினாலும் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா போன்றவர்களின் எதிர்ப்பு இருப்பதால் அதற்கான வாய்ப்பும் இல்லை. ஆகவே தனிக்கட்சியைவிட வேறு வழியில்லை. தனித்துப் போட்டியிடுவதன் மூலம் சுதந்திரக் கட்சி மேலும் பிளவு படப்போகிறது. மகிந்த அணியினர் இத்தேர்தல்களிலும் தோல்வியைச் சந்திப்பார்களானால், கடந்தகால ஆட்சியில் இழைத்த தவறுகள் அநீதிகளுக்குக் கிடைத்த பெரிய தண்டனையாக அது இருக்கும். ஜனாதிபதித் தேர்தலின் பின்பும் பொதுத் தேர்தலின் பின்பும் மகிந்த அணி எதிர்நோக்கும் பெரிய சவால் உள்ளூராட்சித் தேர்தல்கள்.



# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

யோ.அபிசன்

(நேற்றைய தொடர்ச்சி)

உள்ளமும் மூளையும் உறவாளியாகி ஒருமித்துச் சிந்திக்க ஆரம்பிக்கும். அப்போது சிந்தனை ஒரு தந்திரத்தைச் செய்கிறது. அந்தப் பணம் எம் முன்னால் இருப்பதைப் போல் காட்டுகிறது. பணத்தை நாம் அடைந்து விட்டதைப் போல் நம்பச் செய்து விடும். காரணம், நம்பிக்கை எம்மிடம் இருப்பதால் அதனை உறுதிப்படுத்தும். பணத்தைப் பெற்றுவிட்டால் ஓய்வு வந்துவிடும். நாம் இன்னும் பணத்தை அடையவில்லை. பயிற்சியும் சுயசிந்தனையும் சேர்ந்து திட்டத்தைத் தீட்டும்.

ஆசையைப் பணமாக மாற்றுகின்ற திட்டத்தின் முக்கிய வேலையே சுயசிந்தனையைத் தூண்டிவிடும் தன்மையுடையது. கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த பாடமும் வாழ்நாள் முழுவதும் பயன்படா. பணக்காரனாக விரும்பும் எமக்குச் சொந்த புத்தியும் உழைப்பும் வேண்டும்.

பணம் என்பது ஒரு உலோகப் பொருள். அதனால் அசையவோ பேசவோ முடியாது. அதன் மேல் ஆசைப்படும்எமக்கு, அழைப்பை ஏற்று பணத்தைத்தர முடியும். நாம் தேர்ந்தெடுக்கும் துறை பிழைப்புக்கு வழிகாட்டியாகவும் பணத்தைப் பெறவும் அதனால் இலட்சுமியைக் காணவும் கூடியதாக இருக்க வேண்டும். இலட்சுமி என்பது பணம் தானே! பணம் பெறுவதற்கு மட்டுமல்லாமல் எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியைக் காண்பதற்குக் கூடத் திட்டம் தேவை. இன்ன வியாதிக்கு இந்த மருந்தைக் குறிப்பிட்ட அளவில் கொடுத்தால் வியாதி குணமடையும் என்று நிர்ணயிக்கும் மருத்துவரைப் போல, நாம் தீட்டும் திட்டங்கள் பழுதில்லாமல் இருக்க வேண்டும். சுவரை வைத்துச் சித்திரம் வரைய வேண்டும் என்பது போல் திட்டத்தை வைத்துக் கொண்டுதான் முயற்சியில் இறங்க வேண்டும்.

> கரையில் ஓய்வு கொள்ளாதே! கடலுள் மூழ்கு! அலைகளுடன் போராடு! ஊர்க்குருவி போல் நீ கூடு கட்டாதே! இராஜாளியைப் போல் மலைக்குப் போ! சிங்கம் ஊர்த் திண்ணையிலா உலாவுகிறது? இல்லை! கொடுங்காட்டில் அல்லவா உலாவி வருகிறது.

ஆரம்பத்திலிருந்து கஷ்டங்களைக் கண்டு ஒதுங்கிப் போய் ஓரத்தில் நின்று கொண்டிருந்தால் உலகம் போற்றும் செய்திகளாக நியூயார்க் யஹரால்ட் மாறி இருக்க முடியாது. எம்முடைய சிந்தனையிலே தோன்றும் பொருளை உற்பத்தி செய்வதற்கும், எம் திட்டங்களை உருவாக்குவதற்கும் எம்மைப் போலவே பணக்காரனாக விரும்பும் உண்மையான நண்பர்கள் தேவை. அத்தகைய அறிவுக் கூர்மையான அறிவுள்ள நண்பர்களுடன் சேர்ந்து திட்டங்களைத் தீட்ட வேண்டும். கூர்மை மதிகொண்ட நண்பர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு முன், அவர்களுடன் எம்மை இணைத்துக் கொள்ளும் போது, அவர்கள் எமக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு, என்ன சன்மானம் வழங்க முடியும் என்பதைத் தீர்மானித்துக்கொள்ள முடியும்.

உள்ளத்தில் உறுதியும் உன்னத உழைப்பும் இருந்தால் கனவில் கருகிய வாழ்வு நனவாக உருவாகும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. நாம் துணிவுடன் செயற்பட்டால் வாழ்க்கையை வாழ முடியும். இதனைக் குறித்து ஆண்டர்சன் என்ற அறிஞர் அழகாக எடுத்துக் கூறினார்: வாழ்க்கைப் போராட்டத்துக்கு உன்னைப் பழக்கிக்கொள். கரையில் ஓய்வு கொள்ளாதே! கடலுள் மூழ்கு! அலைகளுடன் போராடு! ஊர்க்குருவி போல் நீ கூடு கட்டாதே! இராஜாளியைப் போல் மலைக்குப் போ! சிங்கம் ஊர்த் திண்ணையிலா உலாவுகிறது? இல்லை! கொடுங்காட்டில் அல்லவா உலாவி வருகிறது. பாதை இல்லையே என்றெண்ணாதே! தொடர்ந்து நட! உனது நடையே புதியதோர் பாதையைப் போட்டுக் காட்டும். இருளில் வழி தேடு என்னும் ஒளிக்கோடு தான் துணிவு! குண்டூசி குத்துவது பேப்பர்களை இணைப்பதற்குத்தான். எம்முடைய துணிவே உற்சாகத்தைத் தரும். ஆணி அடித்த போது சுவரில் ஓட்டை ஏற்பட்டாலும் அழகான படம் மாட்டப் பெற்றதும் அந்தச் சுவரின் அழகைக் கூட்டிக் காட்டுவது இல்லையா! இதே போல் தான் எமக்குள் பிறக்கும் உற்சாகம் உடல் உழைப்புக்கு உறுதுணையாக இருக்கும்.

ஒரு துறையில் எம்மால் வெற்றி பெற முடியவில்லையென்றால் எம்மிடமுள்ள குறை என்ன என்பதைமுதலில்தெரிந்து கொள்ள வேண்டும். எம்மிடம் குறை எதுவும் இல்லையென்றால்எம்முடையதுறையைத்தான் மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, குறையை நினைத்து வருந்துவதில் பயன் ஏதும் இருக்கமுடியாது. எந்தத் துறையிலும், சிந்தனையிலே தெளிவும், துணிவும், தொழில் தெரிந்த அனுபவசாலிகளின் ஒத்துழைப்பும் எல்லாவற்றையும் விட இலாபம் ஏற்படும் வரை பொறுத்திருக்கும் தன்மையும் இருந்தால் பணக்காரராகி விட முடியும். இளம் வயதிலேயே வேலைக்குப் போயிருந்தால் இந்நேரம் பதவி உயர்வும், பார் எங்கும் புகழும், பை நிறையப் பணமும் பெற்றிருக்கலாம் என்று எண்ணக்கூடாது. எவ்வளவு வயதானாலும், பரவாயில்லை. மனம் மட்டும் இளமையோடு இருந்தால் போதும். ஒரு தொழிலைச் செய்து அதன் பயனை அடைய முடியும். காலம் கடந்து விட்டதே என எண்ணிக் கலங்கிக் கொண்டிருக்கும் காலத்தை ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிப்பது நல்லது தானே? ஆண்டுகள் பல கடந்து சாவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தவர் எல்லாம் இறுதி நாளில் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து பணம் பெற்றிருக்கிறார்கள். கூன் விழுந்து கோல் ஊன்றி நடக்கும் காலத்திலும் சும்மா இருக்காமல் உழைத்து உன்னதமான நிலையை அடைந்திருக்கிறார்கள். வலிமையான நெஞ்சம் இல்லாதவன் வயதாகி விட்டதே என்று வருந்திக் கொண்டிருக்கும் வேளையில், வலிய நெஞ்சம் உள்ளோன் ஏதேனும் ஒரு துறையிலே ஈடுபட்டுப் பொருள் ஈட்டி மகிழ்ச்சியுடன் வாழ்கின்றான் என்கிறார் ரிச்சர்ட் ஸ்டில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலியின் திடீர் முடிவு



"அங்காடி தெரு" அஞ்சலி தமிழில் கிளாமர் ஹீரோயினாக பரபரப்பாக பேசப்படாவிட்டாலும் பாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகை என்ற வகையில் சொல்லக்கூடிய எண்ணிக்கையில் படங்களில் நடித்து வந்தார். திடீரென்று ஏற்பட்ட குடும்பப் பிரச்சினை காரணமாக தெலுங்கு பக்கம் கவனத்தை திருப்பினார். அங்கு எதிர்பார்த்தளவுக்கு வேடங்கள் கிடைக்கவில்லை. இதையடுத்து கிளாமர் வேடங்களில் நடிக்கத் துணிந்தார். சம்பளமும் இரு மடங்கு உயர்ந்தது. இளம் ஹீரோயின்களின் தூக்கலான கவர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. மீண்டும் தமிழ் படங்கள் பக்கம் கவனத்தைத் திருப்பினார்.

மாப்பிள சிங்கம், இறைவி, தரமணி, பேரன்பு, காண்பது பொய் என 5 படங்கள் கைவசம் உள்ளன. தவிர தெலுங்கிலும் 3 படங்களுக்கு மேல் நடித்து வருகிறார். ஹீரோயின்கள் தங்கள் சம்பளத்தை கோடிக்கணக்கில் உயர்த்திக் கொண்டிருக்கும் நிலையில் அஞ்சலி தனது சம்பளத்தைக் குறைத்துக் கொள்வதாக அறிவித்திருக்கிறார். அவரது திடீர் சம்பளக் குறைப்பு அறிவிப்பால் தங்கள் வாய்ப்புப் பாதிக்குமோ என சக ஹீரோயின்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 4 | 2 | | 1 | | |
| | | 2 | | | 3 | 8 | 6 | |
| 7 | 9 | | | | | | | |
| | | | | | | 3 | | |
| 4 | | | 1 | | 2 | | | 7 |
| | | 9 | | | | | | |
| | | | | | | | 6 | 1 |
| | 8 | 7 | 2 | | | 6 | | |
| | | 1 | 8 | 4 | 6 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 6 | 3 | 2 | 1 | 9 | 5 | 8 |
| 5 | 1 | 8 | 6 | 7 | 9 | 4 | 2 | 3 |
| 2 | 6 | 3 | 8 | 5 | 4 | 6 | 1 | 7 |
| 1 | 6 | 2 | 4 | 8 | 5 | 3 | 7 | 9 |
| 4 | 3 | 9 | 1 | 6 | 7 | 2 | 8 | 5 |
| 8 | 7 | 5 | 2 | 9 | 3 | 1 | 4 | 6 |
| 6 | 2 | 7 | 9 | 4 | 8 | 5 | 3 | 1 |
| 9 | 5 | 1 | 7 | 3 | 2 | 8 | 6 | 4 |
| 3 | 8 | 4 | 5 | 1 | 6 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

|| மிட்டு || @dineshvasudav · Jan 1

உன்னை தூக்கி எறிந்தவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று நினைப்பதை விட, அவர்களை விட்டு விலக நினைப்பதே ஒரு ஆணுக்குரிய பெருந்தன்மை ஆகும்.

Dravid the darling! @moon_inthewell

இது நம் நாட்டு சங்கீதம் நம் நாட்டு நடனம் என்று அதைக் கூட பள்ளிக்கூடங்கள் கட்டாயப்படுத்தி கற்பிக்க வேண்டும் போலிருக்கிறதே!

ரொம்ப நாளைக்கு அப்புறம் frienda பார்க்கும் போது எப்படி மச்சி இருக்கன்னு கேட்டா அவன் நண்பன்







பேஸ் புக்கில் பிடித்தவை...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பொறுமையுடன் செயற்படுவது அவசியம். திட்டமிட்ட பணிகளில் திடீர் மாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சியால், அபரிமித இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை உண்டாகும். வெளியூர்ப் பயணத் திட்டத்தில் மாறுதல் உருவாகும்.

**மிதுனம்:** நல்லோரின் ஆலோசனை கிடைக்கப்பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**கடகம்:** சாதுரியமாகப் பேசி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் சந்திப்பால் மகிழ்ச்சி கொள்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் திருப்தியளிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**கன்னி:** குடும்பத்தினர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய ஒப்பந்தம் மூலம் ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்கு ஆடம்பர எண்ணம் மேலோங்கும்.

**துலாம்:** சொல்லிலும், செயலிலும் நேர்மை உண்டாகும். எதிரியும், அடிபணியும் நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். மாணவர்கள் திட்டமிட்டுப் படிப்பர்.

**விருச்சிகம்:** சமயோசித பேச்சால் சாதிப்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் பேச வேண்டாம். தொழிலில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். திடீர் செலவால் சேமிப்புக் கரையும். உடல்நலனுக்காக சிகிச்சை தேவைப்படலாம்.

**மகரம்:** பெரியவர்களின் வார்த்தையை மதித்து நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் இலாபம் கூடும். பிள்ளைகளின் வளர்ச்சியில், அக்கறை காட்டுவீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

**கும்பம்:** பின் விளைவை உணர்ந்து பேசுவது நல்லது. தொழிலில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். உறவினர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

# தானங்கள் கொடுப்பதால் கிடைக்கும் நன்மைகள்



1. அரிசியைத் தானம் கொடுக்க பாவங்கள் தொலையும்.
2. வெள்ளியைத் தானம் கொடுக்க மனக் கவலைகள் மறையும்.
3. தங்கத்தைத் தானம் கொடுக்க தோசம் விலகும்.
4. பழங்களைத் தானம் கொடுக்க புத்தி, சித்தி கிட்டும்.
5. தயிரைத் தானம் கொடுக்க இந்திரிய விருத்தியாகும்.
6. நெய்யைத் தானம் கொடுக்க நோயைப் போக்கும்.
7. பாலைத் தானம் கொடுக்க துக்க நிலை மாறும்.
8. தேனைத் தானம் கொடுக்க பிள்ளைப்பேறு கிட்டும்.
9. நெல்லிக்கனியைத் தானம் கொடுக்க ஞானம் உண்டாகும்.
10. தேங்காயைத் தானம் கொடுக்க நினைத்த காரியம் வெற்றி அடையும்.
11. தீபங்களைத் தானம் கொடுக்க கண்பார்வை தெளிவாகும்.
12. கோவைத் (மாடு) தானம் கொடுக்க ரிஷி, வேத, பிதிர்க்கடன் விலகும்.
13. பூமியைத் தானம் கொடுக்க பிரம்மலோக தரிசனமும் ஈஸ்வரலோக தரிசனமும் கிட்டும்.
14. ஆடையைத் தானம் கொடுக்க ஆயுள் விருத்தியாகும்.
15. அன்னத்தைத் தானம் கொடுக்க தரித்திரமும் கடனும் தீரும்.

படித்ததில் பிடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 80 | 60–80 | 40 | 40 | 40 |
| கத்தரி | 200 | 150 | 150 | 160 | 120 | 160 | 120 | 80 |
| கரட் | 250 | 200 | 150–300 | 180 | 300 | 400 | 160 | 360 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 35 |
| பயிற்றை | 150 | 150 | 160 | 150 | 160 | 140 | 120 | 140 |
| பாகல் | 180 | 160 | 140 | 120 | 160 | 200 | 130 | 150 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 60–80 | 120 | 60 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80–90 | 80 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 120 | 120–160 | 120 | 100 | 100 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 | 50–60 | 80 | 40 | 40 |
| தக்காளி | 80 | 70 | 80 | 80 | 60–70 | 100 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 40 | 50 | 40 |
| கீரை | 30 | 30 | 40 | 10 | 20–30 | 50 | 35 | 35 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 40 | 20–30 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 350 | 350 | 280 | 300–320 | 600 | 300 | 450 |
| புடோல் | 100 | 80 | 80 | 80 | 80–100 | 120 | 50 | 80 |
| கோவா | 120 | 130 | 100 | 120 | 100–120 | 140 | 100 | 100 |
| வெண்டி | 180 | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 250 | 200 | 150 | 140 | 200 |
| லீக்ஸ் | 120 | 130 | 100 | 120 | 120 | 200 | 80 | 130 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40–45 | 40 | 35–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 70 | 70–80 | 60 | 50 | 180 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 140 | 100–120 | 40 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 300 | 270 | 250 | 280 | 280–300 | 200 | 200 | 300 |
| இராசவள்ளி | 120 | 220 | 150 | 120 | 140–160 | 160 | 100 | 100 |

# சமையலறைக் குறிப்புகள்

- தேயிலைத்தூள் வைத்திருக்கும் போத்தலில் உபயோகித்த ஏலக்காய் தோல்களைப் போட்டு வைத்திருந்தால் தேயிலை ஏலக்காய் மணத்தோடு சுவையாக இருக்கும்.
- மழை, குளிர் காலங்களில் வடகம் இளகிப்போய் நன்றாகப் பொரியாது. வெறும் சட்டியை அடுப்பில் வைத்துச் சூடேற்றி, அதில் வடகத்தைப் போட்டு, சற்றுப் புரட்டி எடுத்து விட்டு, எண்ணெயில் பொரித்தால் நன்றாகப் பொரியும்.
- வெங்காய ஊத்தப்பம் செய்யும் போது தோசை இருபுறமும் வெந்து இருந்தால் தான் சுவையாக இருக்கும். தோசையின் நடுப்பகுதியில் சிறு ஓட்டை போட்டு எண்ணெய் ஊற்றினால் விரைவில் வெந்தும், சுவையாகவும் இருக்கும்.
- தோசைக்கு ஊறவைக்கும்போது ஒரு கிலோவுக்கு 50 கிராம் வேர்க்கடலை, 50 கிராம் பட்டாணி சேர்த்து ஊற வைத்து அரைத்து மாவுடன் கலந்து தோசை வார்த்தால் நிறமான, சுவை அதிகமான, சத்து நிறைந்த தோசை யாக இருக்கும்.
- சமைத்த சாதம் மிஞ்சிப் போய் விட்டால், அதைப் போல் இரண்டு பங்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் பழைய சாதத்தைக் கொட்டி, ஒரு கொதி வந்ததும் இறக்கி வடித்து விடவும். பின்னர் மறுபடியும் 5 நிமிடம் வடித்த சாதத்தை அடுப்பில் வைத்து இறக்கினால் நீர்ப்பசை அகன்று புதிதாகச் சமைத்ததைப் போல் இருக்கும்.
- வீட்டில் ஜாம் தயாரிக்க விரும்பினால் சரியாகப் பழுக்காத பழங்களையே பயன்படுத்த வேண்டும். அப்போது தான் ஜாம் நீண்ட நாளகளுக்குக் கெடாமல் இருக்கும்.
- குக்கரில் பருப்பை சமைக்கும் போது, ஒரு கரண்டி மஞ்சள் தூளையும், ஒரு கரண்டி நெய்யையும் அதற்குள் சேர்த்து விடுங்கள். அதிலிருந்து வரும் மணத்துக்கே அனைவரும் ஒரு பிடி பிடித்து விடுவார்கள்.
- நன்றாகக் காய்ந்து போன பாண், பனிஸ் போன்றவைகளை எடுத்துத் தண்ணீர் கலந்து பிசைந்து விடுங்கள். நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, வெங்காயம், பூண்டு போன்றவற்றுடன் கொஞ்சம் உப்பை சேர்த்து மாவாக ஆக்கி விடுங்கள். கொஞ்சம் எண்ணெயை சுட வைத்து இந்தக் கலவையை வடை சுடுவது போல் போட்டு பொன்னிறமாகும் வரை பொரித்து விடுங்கள். பஜ்ஜிகளுக்கு போட்டியாக சூப்பர் சுவையாக இருக்கும்.
- வாழைத் தண்டுகள், கீரைத் தண்டுகள் மற்றும் கொத்துமல்லி ஆகியவற்றை அலுமினியம் காகிதத்தில் சுற்றி வைக்கலாம்.

(தொடரும்)

## சமைப்போம் வாங்க

# மரவள்ளிக்கிழங்கு கொழுக்கட்டை




**தேவையானவை:**

மரவள்ளிக்கிழங்கு - 2
சீனி அரைக்கப்
ஏலக்காய் தூள் - 1 கரண்டி
துருவிய தேங்காய் - கால் கப்
அரிசி மா - 1 கப்
உப்பு - தேவைக்கு

**செய்முறை:**

கிழங்கை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். அத்துடன் சீனி, ஏலக்காய் தூள், துருவிய தேங்காய் சேர்த்துக்கொள்ளவும். மேல் மாவுக்கு... அரிசி மாவில் சிறிது உப்பு, தண்ணீர் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். அதை சிறு உருண்டைகளாக்கி நடுவில் பூரணத்தை வைத்து மூடி இட்லி குக்கரில் வேக வைத்து எடுத்தால் கொழுக்கட்டை தயார்.



இது புதுசு

## புதிய சார்ஜர்

ஒரே சார்ஜரில் இருபோன்களைச் சார்ஜ் செய்ய முடியும். அப்பிள், சாம்சங் போன்களுக்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 800 முதல் 1,000 ரூபா வரை விற்பனை செய்யப் படுகிறது.

## நாளை

தை-09
சனிக்கிழமை 23.01.2016
திதி: சதுர்த்தசி மு.ப.08.17
நட்சத்திரம்: புனர்பூசம் மு.இ.09.02
ராகுகாலம்: 09.36-11.06 வரை
சுபநேரம்: 03.36-05.06 வரை



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800-1000 | 700 | 600 | 700 | 650 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 300 | 250 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | 200 | – |
| பாரை | 450 | 600 | 400 | 600 | 600 | 500 | 420 |
| சுறா | 300 | 600 | 600 | 700 | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 500 | 600 | 400 |
| முரல் | 250 | 400 | 300 | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 400 | 400 | 350 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 400 | 250 | 300 | 300 | – | 350 |
| திரளி | 200 | 350 | 200 | 200 | 250 | 300 | 250 |
| நகரை | 150 | 250 | 200 | 200 | 300 | – | 350 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 200 | 250 | 100 | 300 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 120 |
| மதனம் | 250 | 200 | 180 | 400 | 250 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 500 | 100 | 120 | 100 | – |
| பாலை | 100 | 150 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | 400 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதியுச்ச

தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு மாகாண சபைகளின் உறுப்பினர்களுடனான முக்கிய கலந்துரையாடல் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்றுநடைபெற்றது. இதில் தலைமையுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினுள் சில முரண்பாடுகள் காணப்படுகின்றமையை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஜனநாயகக் கட்டமைப்பொன்றில் அவ்வாறான முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. ஆனால், அதனை பெரிதுபடுத்தவேண்டிய அவசியமில்லை.

எமது மக்கள் நீண்டகாலமாகப் பிரச்சினைகளுக்குமுகம்கொடுத்து வருகின்றார்கள். பாதிக்கப்பட்ட அவர்களுக்குப் பரிகாரம் வழங்கப்படவேண்டும். அதேநேரம் எமது மக்கள் கௌரவமாகவும் - பாதுகாப்பாகவும் வாழுவதற்கான சூழல் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறானதொரு சூழல் உருவாக்கப்படுவதாயின் இங்கு புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இனப்பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்பதை நாம் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடனான ஒவ்வொரு சந்திப்புகளின்போதும் வலியுறுத்தி வருகின்றோம். அதில் தொடர்ச்சியாக உறுதியுடனும் இருக்கின்றோம்.

நான் ஒற்றையாட்சிக் கோட்பாட்டைஏற்றுக்கொண்டுள்ளதாக கூறுகின்றார்கள் - கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். அவை நிராகரிக்கப்பட வேண்டியவை. நான்ஒற்றையாட்சிக்கோட்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

வடக்கு - கிழக்கு, தமிழ் - முஸ்லிம் மக்களின் பூர்வீக தாயகமாகும். தற்போது உயர் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பினால் வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மீண்டும் இணைக்கப்பட வேண்டும். மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் அதியுச்ச சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

மக்கள் எமக்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்ளாத எதனையும் நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவர்களின் அனுமதியுடனேயே நாம் எவ்விதமான விடயங்களையும் ஏற்றுக்கொள்வோம். தற்போதைய சூழலில் எமது பிரச்சினை சர்வதேச ரீதியில் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ள புதிய சூழலில் நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படுவது அவசியமானதாகும். அவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டியதும் முக்கியமானதாகும். அவ்வாறில்லாதுவிடின் அந்த ஆட்சியை நீண்டகாலத்திற்கு கொண்டு செல்லமுடியாது.

இவ்வாறான சூழலில் புதிய அரசு சில முற்போக்கான செயற்பாடுகளைமுன்னெடுத்துவருகின்றது. தென்னிலங்கையில் புதிய அரசியல் சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் ஒருபோதும் நழுவவிடக்கூடாது.

நாம் முஸ்லிம் மக்களை அரவணைக்க வேண்டும். அவர்கள் எமது சகோதரர்கள். அவர்களுடன் இணைந்தே தீர்வு தொடர்பான இறுதி முடிவை எட்ட வேண்டும். அதேநேரம் சிங்கள மக்களையும் பகைக்கக் கூடாது. அவர்கள் அச்சமடையும் வகையிலான காரசாரமான கருத்துக்களை நாம் முன்வைக்கக்கூடாது. அனைவரும் இந்தத் தருணத்தில் ஒற்றுமையாக இருக்கவேண்டும். எமது மக்களின் துன்ப, துயரங்கள் நீங்கிய புதிய எதிர்காலத்திற்காக நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் - என்றார்.

(த-5)

## காணாமற்போனோர்

எழுப்புவேன்.

இவ்வாறு கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் காணாமற்போனோரின் உறவினர்களிடம் உறுதியளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற - மாகாணசபை உறுப்பினர்களுக்கான கூட்டம் கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது, காணாமற்போனோரின் உறவுகள் 50 பேர்வரையில் கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்கு வந்தனர். அங்கு கடமையில் நின்றிருந்த பொலிஸார் அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை.

கூட்டமைப்பினர் அவர்களை உள்ளே அனுமதிக்குமாறு கோரியதற்கு அமைய, மாலையளவில் அவர்கள் கூட்டம் இடம்பெறும் மண்டபத்தின் வெளியே அமர்த்தப் பட்டனர். கூட்டத்தின் முடிவில், இரா.சம்பந்தன் காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்தித்தார்.

இதன்போது காணாமற் போனோரின் உறவுகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் நிகழ்வில், காணாமற்போனோரில் பெருமளவிலானோர் உயிரிழந்து விட்டவர்களாகவே கருதப்பட வேண்டி உள்ளது என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு தெரிவித்தமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புவோம். காணாமற்போனவர்கள் உயிரிழந்துவிட்டார்கள் என்று சாதாரணமாகச் சொல்லிவிட முடியாது. இதனைப் பற்றிக் கேள்வி எழுப்பி ஆக்கபூர்வமான நடவடிக்கையை நாடாளுமன்றத்தின் ஊடாகச் செய்வோம் என்று, காணாமற் போனோரின் உறவினர்களிடம் அவர் உறுதியளித்தார்.

(த-5)

## சம்பந்தன்

மாகாண சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசை முழுமையாக நம்ப முடியவில்லை. இப்போதும் மாகாண அரசின் அதிகாரங்களில் கொழும்பு அரசு தலையீடு செய்கின்றது. கடந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கையையே இப்போதைய அரசும் முன்னெடுக்கின்றது. எங்களுக்குத் தெரியாமல் எங்களது அலுவலர்களைக் கொண்டு தங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளைமேற்கொள்ளமுயற்சிக்கின்றனர். மாகாணத்தின் அதிகாரங்களில் தலையீடு செய்யும் நடவடிக்கையாகவே இதனைப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

எங்களுடைய சிறந்த தலைவர் இரா.சம்பந்தன் ஊடாக, அதிகாரப் பகிர்வுக்கான - தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படவேண்டும் - என்றார்.

(த-5)

## குழப்பமின்றி

கூட்டுறவு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கடந்த நாடாளுமன்றத்தேர்தலின்போது நடுநிலைமை வகித்தமை அதன் பின்னர் தமிழ் மக்கள் பேரவையில் இணைத் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் கடுமையான விமர்சனங்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற - மாகாண சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்றைய கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் பி.ப 3 மணியளவிலேயே கலந்து கொண்டார். காலை 10.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பித்திருந்தாலும், முதலமைச்சர் மாலையில் கலந்துகொண்டு கூட்டம் முடிவடைவதற்குச் சற்று நேரத்துக்கு முன்னர் வெளியேறியிருந்தார்.

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களை நேற்றைய கூட்டத்தில் வெளியிட்டனர். ஒரு சில உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்களுக்குச்சக உறுப்பினர்கள் சில மாற்றுக் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், முதலமைச்சர் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) உறுப்பினர்களுடனான சந்திப்பில் 2013 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சுயநிர்ணயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2015 தேர்தல் அறிக்கையில் அந்த விடயம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். இது பொய்யான விடயம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முதலமைச்சர் அப்படிச் சொல்லவில்லை. 2015 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் என்ன இருந்தது என்று தெரியாது என்று தான் குறிப்பிட்டிருந்தார் என்று தெரிவித்தார்.

பெரும்பாலான உறுப்பினர்கள் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடவில்லை. அத்துடன் கூட்டம் எதுவித முரண்பாடுகளும் இன்றிச் சுமுகமாக இடம்பெற்று முடிந்தது.

(த-5)

## இலங்கையின்

தற்கு அரசு ஒழுங்கு முறையான பொருளாதாரத் திட்டமொன்றைச் செயற்படுத்தி வருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்தில் இடம்பெற்று வரும் உலகப்பெருளாதார மாநாட்டுக்குச் சமாந்தரமாக இடம்பெற்ற இலங்கை முதலீடுகள் மாநாட்டில் உரையாற்றியபோதே பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

சுவிஸ்-ஆசிய வர்த்தக சபை மற்றும் இலங்கை வர்த்தக சபை ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்த இலங்கை முதலீடுகள் மாநாடு சர்வதேச மற்றும் இலங்கையைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பங்களிப்புடன் டாவோஸ் நகரின் மொரோசனி போஸ்ட் ஹோட்டலில் இடம்பெற்றது.

அங்கு பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

2030 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வரைபடத்தை உருவாக்கும் பொறுப்பு உண்மையிலேயே முதலீட்டாளர்களிடமே ஒப்படைக்கப்படும். அந்தப் பிரகாசமான வரைபடத்தை உருவாக்குவது தொடர்பாகத் தேவையான அனைத்துவசதிகளும் அரசினால் பெற்றுத்தரப்படும்.

இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு மறுசீரமைப்பு வியூகங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம். முதலீட்டுச் சபை மற்றும் பொருளாதார அபிவிருத்திச் சபைக்குப் பதிலாக அபிவிருத்திகள் முகவர் நிறுவனமொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

ஒரே கூரையின் கீழ் அனைத்துச் சேவைகளையும் நிறைவு செய்து கொள்ளத்தக்கவகையில் நிறுவப்படும் இந்த அபிவிருத்தி முகவரகம் ஊடாக முதலீட்டாளர்களுக்குத் தளர்வான மற்றும் இலகுவான நிபந்தனைகள் மற்றும் சட்டவிதிகளின் கீழ் வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்படும்.

தொழில்களில் நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்ளல், நவீன தொழில்நுட்ப அறிவில் இலங்கையர்களைப் பூரணமாக்குதல், வேலைவாய்ப்புக்களை உற்பத்தி செய்தல் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக நாம் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். அந்தச் சர்வதேச முதலீட்டாளர்களுடன் இணைந்து கொள்ளுமாறு சீன முதலீட்டாளர்களிடமும் கோருகிறோம்-என்றார்.

(த)

## கொழும்பு

துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தியக் கடற்படையின் நாசகாரிப் போர்க் கப்பலின் பாதுகாப்புடன், இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த போது, கடற்படையினரால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பாரம்பரிய முறைப்படி இந்திய விமானந்தாங்கி கப்பலுக்கு கடற்படையின் வாத்திய அணியினர் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

இந்த விமானந்தாங்கிப் போர்க் கப்பல் நாளை வரை கொழும்பில் தரித்து நிற்கவுள்ளது.

இதன்போது, கடற்படையினருடன் இணைந்து இந்தியக் கடற்படையினர் கூட்டுப் பயிற்சியிலும் ஈடுபடவுள்ளனர். அத்துடன் கலை நிகழ்வுகள், மருத்துவ முகாம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியக் கடற்படையின் மேற்குப் பிராந்திய கப்பற்படைப் பிரிவின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் ரவ்நீத் சிங், ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவின் கட்டளை அதிகாரி கப்டன் கிருஸ்ணா சுவாமிநாதன், மற்றும் ஐ.என்.எஸ். மைசூர் போர்க் கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் எம்.போல் சாமுவேல் ஆகியோர் கடற்படைத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

(த-5)

## அம்பாந்தோட்டை

தற்போதைய இலங்கை அரசு சீர்செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சி சேவையான என்.டி.ரி.விக்கு டாவோசில் நடக்கும் உலகப் பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் வைத்து வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது, சில வருடங்களாக, குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இலங்கை, சீனாவுக்கே அதிக முன்னுரிமை அளித்தது. குறிப்பாக இந்தியாவுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. எனவே, அந்த நிலை தற்போது மாற்றமடைந்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

இலங்கை அனைத்து நாடுகளுடனான உறவில் அக்கறையுடன் உள்ளது. சீனாவுடன் நல்ல உறவை தொடர்கின்றோம். அத்துடன் இலங்கையின் மிகப்பெரிய முதலீட்டாளராகச் சீனா காணப்படுகின்றது.

எனினும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடனான உறவை இழப்பதற்கும் நாம் தயாரில்லை. குறிப்பாக, மேற்கு நாடுகளுடனான நெருக்கமான உறவை வைத்துள்ளோம். இதில் பாகிஸ்தானுடனும் நல்ல உறவு உள்ளது.

ஆனால் இந்தியாவுடனான உறவு பாதிப்படைந்திருந்தது. அப்போது, எமது அரசு ஆட்சியிலிருக்கவில்லை. இரண்டு தரப்புகளுடனான உறவும் தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இரு நாடுகளினதும் முன்னைய அரசுகளின் உறவு குறித்து தற்போது நாம் கவனத்தில் எடுப்பது பயனற்ற விடயம்.

இந்த நிலைமை அரசியல் தலைவர்கள் ஊடாகவே ஏற்பட்டது. எனினும் இரு நாடுகளுடனான உறவில் பாதிப்பில்லை. எனினும் இந்தியா மற்றும் இலங்கை அரசியல் தலைவர்கள் இடையில் நல்ல உறவு காணப்படுகின்றது. இதனால் இருநாடுகளுடனான உறவு நெருக்கமடைந்துள்ளது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடற்படைத்தளம் அமைப்பதற்கு சீனா முயற்சிப்பதாக, கூறப்படுவது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

முன்னைய ராஜபக்ச அரசின் ஆட்சியின் போது, சீனாவின் உதவியுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைக்கப்பட்டது. இது தொடர்பில் இந்தியாவுக்கும் தெரியும்.

ஆனால், அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கடற்படைத் தளம் இல்லை. அங்கு சீனக் கடற்படைக் கப்பல்கள் தளம் அமைக்கவோ தரித்து நிற்கவோ அனுமதிக்கப்படாது.

எனினும் மிகப்பெரிய வணிகத் துறைமுகமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைக்கவுள்ளோம். எனவே அங்கு இந்தியா உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.-என்றார். (த-வ-ரி5)

## காணிகள்

பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் நேற்று மாலை திடீரென இந்த நிகழ்வை ஒத்திவைப்பதாக மாவட்டச்செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## வடக்கில்

அகதிகளுக்கான ஐ.நா தூதரகப் பிரதிநிதிகளான லயோறி வைஸ் பேர்க், மிறாக் றகீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாணத்தின் மீள்குடியேற்றம் தொடர்பிலான கொள்கை வகுப்பு மற்றும் காணிகள் விடுவிப்பு, இந்தியாவிலிருந்து மீளத் திரும்பும் அகதிகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண மீள் குடியேற்ற அமைச்சர் ப.சத்தியலிங்கத்தையும் சந்தித்து கலந்துரையாடினர்.

(த-101-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு மின் உபயோகித்த ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.22
யாழ்ப்பாணம், உதயபுரம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் உபயோகித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளும், யாழ்ப்பாணப் பொலிஸாரும் இணைந்துநடத்தியதேடுதல்நடவடிக்கை யாழ்.பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது பிரதான மின்வடத்தில் இருந்து மேலதிகமாகவயரை இணைத்து மின்சாரம் பெற்ற குறித்த நபரை பொலிஸார் கைது செய்தனர். கைதான வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ந-ஐ-107)

# கட்டட திறப்பு விழா

மாங்குளம்,ஜன.22
அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலையின் புதிய மேல்மாடிகட்டடத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமைகாலை 8.30 மணிக்கு பாடசாலையின் முதல்வர் வீ.இந்திரலிங்கம் தலைமையில்நடைபெறும். இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கௌரவ விருந்தினராகவடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-422)

# நிர்வாக சேவை பதவிக்கு போட்டிப்பரீட்சை

இலங்கை நிர்வாக சேவை III பதவிக்கு ஆள்களை சேர்த்துக் கொள்வ தற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. இந்தப் பரீட்சைக்கு 22 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.


விண்ணப்பங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்எனபொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

போட்டிப் பரீட்சை மற்றும்நேர்முகப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாகசேவைஆணையில் 104 பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. (ந-ஐ-11)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி வ. சுதர்ஜினியின் அன்பு மகன்
செல்வன் வ.ஹரிஸ்மிதுசன்
அவர்களின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
நலன்புரிசங்கம்,பிரதேச செயலகம், உடுவில்.
(சி.28748)(13.15)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
அருட்சகோதரி ஞானதர்சினி
அவர்களின்
தங்கையின் கணவர்
எறிக் டறன்
20.01.2016 புதன்கிழமை
லண்டனில் காலமானார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் உற்றார்,
உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர்கள், பெற்றோர்கள்,
மாணவர்கள், பா.அ.ச.உறுப்பினர்கள்,
நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயம்.
(67897)(11,15,18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 . 03 . 1967
இறப்பு 02 . 02 . 2015



அமரர் கந்தசாமி தயாசீலன்
ஆண்டவனடி சேர்ந்து ஆண்டொன்று போனாலும்
நீர் எமக்கு வேண்டுமென்று தினம் எம் மனம் துடிக்கும்
பூப் போன்று மலரும் புன் சிரிப்பு பூரிக்க வைக்கு மின்சொல்
கலை நுட்பம் வாய்ந்த செயல்கள் இவையின்றி கனவாகிப் போனாலும் உம்
நினைவுகள் என்றென்றும் எம் வாழ்வை வழி நடத்தும்.
ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் பூபதி (பூமணி)
பசுபதி
தோற்றம் 17.07.1941
மறைவு 23.12.2015
ஆண்டாண்டு காலமாக அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ இம் மாணிலத்தே
வேண்டா இனி இவ்வுலக வாழ்க்கை என நீவிர்
வானுலகம் சென்றாலும் - எம்
கண்ணில் நீர் வற்றாது என்றென்றும்
பெற்ற மகனோ பேச்சின்றி பேதலிக்க
உற்ற கணவர் உறவின்றி தேடி நிற்க
மற்ற உறவுகளும் மகிழ்வின்றி மனம் வாடி நிற்க
கூற்றுவன் கவர்ந்து சென்ற நின் உயிரை-
மீண்டும் தாராவோ என
டச்சு வீதி. உடுவில்.
சுன்னாகம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அமரர் துரைச்சாமி
இராஜரஞ்சன்



அன்னை மடியில்
11.02.1963
ஆண்டவன் அடியில்
23.12.2015
உதய முகம் காண என்மனம்
கட்டறுத்து துள்ளுதையா!
உங்கள் குரல் கேட்க என்செவி
உள்ளுரக் குமுறுதையா!
உங்கள் உறவுகளை விட்டுப் பிரிய
உங்களால் எப்படி முடிந்ததையா!
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எங்கள் மனதில் நிலைக்குமையா!
கடந்த 23.12.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் 31 ஆம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் (25.01.2016) திங்கட்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
அச்சுவேலி,
வடக்கு. அச்சுவேலி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

செல்லப்பா மகாதேவன் (காந்தி)
(முன்னாள் தபால் ஊழியர்)

மலர்வு 14 . 09 . 1938



உதிர்வு 19 . 01 . 2016

யாழ். நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா மகாதேவன் 19.01.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,வசந்திராதேவியின் அன்புக் கணவரும், சுமதி (கனடா), கோமதி (லண்டன்), துஷ்யந்தி (சுவிஸ்), விஜியந்தி (கனடா), திஷாந்தன் (கனடா), லவக்குமரன் (கண்ணன் - மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம் (கனடா), காலஞ்சென்ற கேதீஸ்வரன் (டென்மார்க்), ஜெனந்தன் (சுவிஸ்), தனுஜா (கனடா), மலர் (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமாவும், சதுர்த்திகா, சனோஜன், சந்தோஷ்(லண்டன்), டிலான், அருஷ்னா (சுவிஸ்), சௌமியா, கர்ணிகா, உஜந்தன், கனோஜன், தியா, அனீரா, அனேகா (கனடா)ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(67892)(11,15,18)
தகவல்:
குடும்பத்தினர்.
077 982 9591 (மனைவி)

சுமதி - 001 647 921 9542, 075 048 3844, திஷாந்தன் - 001 905 554 3096, 001 416 897 5127,
ஜெனந்தன் - 004 176 460 8485, துஷ்யந்தி - 004 176 405 3818,
விஜியந்தி - 001 647 627 5603, கண்ணன் - 006 010 510 2809


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 03 . 04 . 1921
மறைவு 23 . 12 . 2015

அமரர்
**திருமதி இராசேந்திரம் நேசம்மா**

கடந்த 23.12.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.01.2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இராஜவீதி, கோப்பாய் தெற்கு. குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்




கடந்த 21.12.2015 திங்கட்கிழமை சிவ பதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர்
**திருமதி நடேசலிங்கம் இராஜேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் இன்று (22.01.2016) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்செய்திகேட்டு தொலைபேசி மூலமும், நேரிலும் கலந்துகொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசடி ஒழுங்கை, சங்கானை.
T.P No: 077 9688 044
குடும்பத்தினர்

## நன்றி செலுத்தும் வழிபாடு



**அமரர் S.P. ஜீவானந்தம்**

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் சென் ஜோன்ஸ் கல்லூரி)

கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி எமது அன்புத் தந்தை அமரர் S.P. ஜீவானந்தம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமக்கு அனுதாபங்களை செலுத்திய உள்ளங்களுக்கும் அவரது இறுதி வழிபாட்டில் கலந்து இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும், குறிப்பாக நீதிபதிகள், சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், கல்லூரி பழைய மாணவர்களுக்கும் ஏனைய கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், பேராயர்கள், மதகுருமார்களுக்கும், வருகை தந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் நன்றியை தெரிவிப்பதோடு அன்னாருக்கு நன்றி செலுத்தும் வழிபாடு நாளை (23.01.2016) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் பரியாக் கோபு ஆலயத்தில் (யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அருகில்) நடைபெற உள்ளது. இந்த நன்றி செலுத்தும் வழிபாட்டில் கலந்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

37, கலைமகள் வீதி, அரியாலை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 11 . 1938
மறைவு 21 . 01 . 2016




## கணேசர் கந்தசாமி

பருத்தித்துறை, திக்கம் மானாண்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்குளி, காக்காதீவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரும் இளைப்பாறிய சுங்கப் பணிப்பாளருமான திரு. கணேசர் கந்தசாமி அவர்கள் 21.01.2016 வியாழக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசர், அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான செல்லையா, குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், புஷ்பரதத்தின் (கிளி) கணவரும் கணேஷ் (லண்டன்), ஸ்ரீதரன் (மகாராஜா), மனோகரன் (கனடா), மற்றும் வாசுகி (சுதா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராணி, வினோதினி, நிலானி , சனகன், ஆகியோரின் மாமனாரும், ரிஷி (UK), டிலக்சன், அனிசா, விஜய், ஹிருத்திக் மற்றும் சேயோனின் அன்புத் தாத்தாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22.01.2016 வெள்ளிக்கிழமை பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையும், 23.01.2016 சனிக்கழமை காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை ஜயரத்ன மலர்சாலை பொரளையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00மணிக்கு நடைபெற்று 12.00 மணியளவில் பொறளை கணத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் : மகன் : ஸ்ரீதரன் கந்தசாமி
தொடர்பு : 0714239828

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 05 . 1944



இறப்பு 21 . 01 . 2016

## மாணிக்கன் கிருஸ்ணன்
(கார் கிட்டினர்)

கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கன் கிருஸ்ணன்(கார் கிட்டினர்) நேற்று (21.01.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா மாரிமுத்து மற்றும் விசாலாட்சுமியின் அன்பு மருமகனும் இரத்தின குமாரியின் அன்புக்கணவரும் வசந்தரூபி (ரூபி), சாந்தரூபன், சதானந்தன், காலஞ்சென்ற சந்திரமோகன், கௌசிகா (பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணகரன், வவா, புவனேஸ்வரி, லவன் ஆகியோரின் அன்பு மாமனும் இனுசியா, திருவேந்தன், டிஷாந், தஸ்மிதா, தஸ்விதா, தஸ்வினி, வினோஜன், வினுயா, சஜித் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா, நாகம்மா, வடிவேலு மற்றும் தெய்வானை, சிவமணி, செல்லம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் சண்முகலிங்கம், கனகலிங்கம், மகாலிங்கம், யோகலிங்கம், சிவபாக்கியம், பத்மாவதி, இராசலட்சுமி, பரமேஸ்வரி காலஞ்சென்ற சுப்புஇலட்சுமி மற்றும் இராசகுமாரி, மங்கையர்க்கரசி, இராயேஸ்வரி, வசந்தமாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மத்தி, குமரநகர். தகவல்: குடும்பத்தினர்.


# மாணவனை எச்சரித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜன. 22

நீதிமன்றத்துக்கு அலங்கோலமான சிகை அலங்காரத்துடன் வந்த பாடசாலைச் சிறுவனைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் தலையைச் சரியான முறையில் சீர்செய்து கொண்டு மறுநாள் நீதிமன்றத்துக்கு வருமாறு உத்தரவிட்டது.

கடந்த 13ஆம் திகதி புதன்கிழமை 30 ஆயிரம் ரூபா பெறுமதியான புறாக்களைக் களவாடிய சந்தேகத்தில் குருநகரைச் சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் பொலிஸாரால் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்.

அவர் நாகரிகம் என்ற பேரில் தலையை அலங்கோலமாக அலங்கரித்ததுடன் மண்ணிறமான நிறச் சாயத்தையும் தலைக்குத் தடவியிருந்தார். இதனை அவதானித்த நீதிமன்றம், மாணவனை விசாரித்தபோது அவர் பாசையூர்ப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து நீதிவான் அவரைக் கடுமையாக எச்சரித்ததுடன் பாடசாலை மாணவன் என்றால் சரியான முறையில் தலைமுடியை சீர்படுத்திக் கொண்டு வருமாறு பணித்து, மறுநாள் வழக்கை ஒத்திவைத்தார்.

மறுநாள் மாணவன் சரியான முறையில் தலையை சீர்ப்படுத்தி நீதிமன்றில் தோன்றியதால் அவரை எச்சரித்து நீதிவான் வழக்கை மார்ச் மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (கு-103)

## மெய்வன்மைப் போட்டி

ஏழாலை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் மா. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக உடற்கல்வி ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. நடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ. குலபால சிங்கமும், வலி.வடக்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் சோ. சுகிர்தனும், வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தி. பிரகாஷும் கலந்து கொள்ளவுள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானில் வந்த

பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலராகப் பணிபுரியும் இளம் பெண் ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டார்.

அவர் தனது அலுவலகத்துக்குச் சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். மோட்டார் சைக்கிள்களில் சென்ற சிலர், அவரை வழிமறித்துப் படிவம் ஒன்றுக்குக் கையெழுத்துப் பெறவேண்டும் என்று கேட்டுள்ளனர். அலுவலகத்துக்கு வந்து பெறுமாறு அந்தப் பெண் கூறியுள்ளார். அந்த நேரம் அவர்களை அண்மித்து வந்து நின்றது இலக்கத் தகடு மறைக்கப்பட்ட டொல்பின் ரக வாகனம். அதிலிருந்து ஒரு கும்பல் இறங்கிக் கிராம அலுவலரின் சகோதரனைக் கடுமையாகத் தாக்கியுள்ளது. அவ்வாறு தாக்கி விழுத்தி விட்டு, அவரது சகோதரியையும் தாக்கித் தமது வாகனத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு அந்தக் குழு மின்னல் வேகத்தில் அந்த இடத்திலிருந்து பறந்து விட்டது.

ஆனாலும் சம்பவம் நடப்பதைக் கண்ட அங்கிருந்த ஒருவர், குறித்த வாகனத்தைத் துரத்திச் சென்றுள்ளார். வாகனத்தில் சென்றவர்கள் தமது வாகனத்தின் இலக்கத்தைத் துணியால் கட்டி மறைத்துக் கொண்டு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் அவ்வாறு கட்டப்பட்டிருந்த துணி அவிழ்ந்துள்ளது. இதன்போது வாகன இலக்கத்தை, அதனைத் துரத்திச் சென்றவர் கண்டுவிட்டார். அந்த இலக்கத்தைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாக அறிவித்துள்ளார். கடத்தல் இடம்பெற்ற உடனேயே அது பற்றிப் பிரதேச செயலர் உள்ளிட்ட வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்த நிலையில், அந்தக் கும்பலின் வாகன இலக்கமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதால், வடக்கு மாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அந்த இலக்கம் அறிவிக்கப்பட்டுச் சம்பவமும் தெரியப்படுத்தப்பட்டது.

பிரதேச செயலக வாகனங்களை அனுப்பியும் தேடுதல் நடத்தப்பட்டது. கிராம அலுவலரைக் கடத்திக் கொண்டு வாகனம் வரணி– பருத்தித்துறை வீதியில் சென்றபோது பின்தொடர்ந்து சென்ற ஒருவர், முள்ளிப் பகுதியில் வைத்து வாகன இலக்கத்தைக் குறித்துக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் கிராம அலுவலரான குறித்த பெண்ணைக் கடத்திய வாகனம் மின்னல் வேகத்தில் முல்லைத்தீவுக்குச் சென்றுவிட்டது. கடத்தப்பட்ட விடயம் முல்லைத்தீவுப் பொலிஸாருக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த நிலையில் அந்த வாகனத்தை இனங்கண்டு கொண்ட முல்லைத் தீவுப் பொலிஸார் அதனை மறித்துச் சோதனையிட்ட போதே அவர்கள் பிடிபட்டனர்.

பொலிஸார் வாகனத்தை மறித்தவுடன் அதிலிருந்து குதித்த 3 பேர் ஓடித் தப்பிவிட்டனர். மிகுதி 3 பேர் வாகனத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டதோடு, கிராம அலுவலரான பெண் மயங்கிய நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டார். பின்னர் அவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அந்தக் குழு பயணித்த வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை முல்லைத் தீவுப் பொலிஸார் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். கடத்தியவர்களில் பிடிபட்டவர்கள் நெல்லியடியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமச்சந்திரன் சதீஸ்குமார்( தாவளை, இயற்றாலை), பொன்னம்பலம் சற்குணலிங்கம்(குடமியன், வரணி), இராதாகிருஸ்ணன் ஜனகன்(பாலாவி வடக்கு) ஆகியோரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

காதல் விவகாரம் காரணமாகக் குறித்த பெண்ணைக் கடத்தியுள்ளனர் என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். எனினும் விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4-9-109)

## காணாமற்

கலந்து கொண்டார். அவர் கூட்டம் முடிவடைவதற்குச் சற்று நேரத்துக்கு முன்பதாக அங்கிருந்து வெளியேறினார். முதலமைச்சர் வெளியேறும்போது, அவரது வாகனத்தை காணாமற்போனோரின் உறவுகள் சுற்றி வளைத்தனர். முதலமைச்சர் தமக்கு பதில் கூற வேண்டும் என்று காணாமற் போனோரின் உறவுகள் கோரிக்கை விடுத்தனர். முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவினர், அவர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு பணித்தனர். ஆனாலும் காணாமற்போனோரின் உறவுகள், முதலமைச்சரை வாகனத்திலிருந்து இறங்கி வந்து பதிலளிக்குமாறு மீண்டும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், மண்டபத்தின் மற்றைய வாயிலினூடாக வேகமாக முதலமைச்சரின் வாகனம் வெளியே கொண்டு செல்லப்பட்டது. இதனால் காணாமற்போனோரின் உறவுகள் ஏமாற்றமடைந்தனர். (த-5)






## கண்ணீர் அஞ்சலி

மாவட்ட செயலகத்தில் புலனாய்வுப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. சின்னத்தம்பி கேமலதாஸ் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **காசிப்பிள்ளை சின்னத்தம்பி**

நேற்று (21.01.2016) வியாழக்கிழமை இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழக உத்தியோகத்தர்களும்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி கிருஷ்ணாவைகுந்தவாசன்

தோற்றம் 1926 . 08 . 08



மறைவு 2016 . 01 . 20

காரைநகர், கொள்ளடைப்பு, கதிர்காமசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கிருஷ்ணாவைகுந்தவாசன் 20.01.2016 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரர்கள்.

திருமதி சரஸ்வதி பாலசிங்கம் - 021 222 4068
திரு சுப்பிரமணியம் அருள்பிரகாசம் - 077 617 6895

### திருமதி
### சிதம்பரம் (சரஸ்வதி) இரத்தினம்



ஊர்வணிகன்பற்று இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம்(சரஸ்வதி) இரத்தினம் 20.01.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயிலு - பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் நாகமுத்து, மீனாட்சி, காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் பரிமளம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, யோகநாதன்(கனடா), மாலினி, இராசமலர், ஜெகநாதன்(நாகம்மன் பல்பொருள் வாணிபம் - பளை), வசந்தமலர்(ஆசிரியர்- யாழ்/ செட்டித்தெரு மெ.மி.த.க.பா.) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணசிங்கம், சிவஞானசுந்தரம், உதயசந்திரிக்கா(கனடா), கணேசு, புஸ்பலதா, பிரபாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் மகளான கணேசு இராசமலரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இயக்கச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ஊர்வணிகன்பற்று,
இயக்கச்சி.

தகவல்: அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செகராஜசிங்கம் இராசநாயகம்



யாழ்ப்பாணம், அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட செகராஜசிங்கம் இராசநாயகம் 2016.01.19 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செகராஜசிங்கம் - மகேஸ் வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி (கந்தரட்ணம் மாஸ்டர்)- பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை- யாழ்.மத்திய கல்லூரி), விஜயலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை - திருக்குடும்ப கன்னியர்மடம்),பாக்கியலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை - யாழ்.கனகரத்தினம் ம.ம.வி), சுசீலா தேவி (இளைப்பாறிய ஆசிரியை - இந்து மகளிர் கல்லூரி), நளாயினி (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்), சபாரத்தினம் (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), கனகரத்தினம் (முன்னாள் நிதியாளர் - யாழ்.பல்கலைக்கழகம்), பேராசிரியர் சூசை ஆனந்தன் (யாழ். பல்கலைக் கழகம்), தர்மபாபு (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (ஜேர்மனி), செல்வேஸ்வரன் - பத்மினி (இந்தியா), இரத்தினேஸ்வரன் - கௌரிஅம்பிகை (கனடா), ஞானேஸ்வரன் - ராஜீ (U.K), யோகேஸ்வரன் - சுபாசினி (கனடா),கேதீஸ்வரன் - வானதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜனகன் (U.K);Dr.ஜெயந்தி (U.K),முரளிதரன்(U.K) Dr.அபிராமி (யாழ்.போதனா வைத்தியசாலை), அரவிந்தன் (Eng.- சிங்கப்பூர்), மைதிலி (ஆஸ்திரேலியா), விசாகன் (கொழும்பு), சாயிமீரா (இந்தியா), சிந்துஜா (கைத்தொழில் திணைக் களம்), செந்தூரன் (பிரான்ஸ்), திருமகள் (கொழும்பு) , அபிநயன் (ஜேர்மனி), ஜனநயன் (ஜேர்மனி), திவ்யா (ஜேர்மனி),அகல்யா(ஜேர்மனி), ரீருஸ் (ஜேர்மனி), Dr.கார்த்திகா(இந்தியா),கோபிநாத் (U.K), லஷ்மி(இந்தியா), அன்பழகன் (கனடா), பிரகலாதன்(U.K), அனிருத்தன் (U.K), இந்துஜா (கனடா),சிவஜா (கனடா), தாயீசன் (கனடா), உமாசங்கர்(கனடா), முகல்யன் (கனடா)ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வட்டு தெற்கு, (அடைக்கலந் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலுக்கு அருகில்),
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

**021 225 1688, 077 970 1466**

### சின்னப்பு அன்ரனி

(காசிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை முன்னாள் சீநோர் ஊழியர் - லிகிதர் குருநகர்)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை HAMM வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அன்ரனி (காசிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை முன்னாள் சீநோர் ஊழியர் - லிகிதர் குருநகர்) கடந்த சனிக்கிழமை (16.01.2016) இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (தீயோகுப்பிள்ளை)-பெர்னபேற (குருநகர்) தம்பதிகளின் அன்பு மருமகனும் பேசிகொண்சி அவர்களின் கணவரும் சந்தியாக்கோ, ற்ரனிற்ரா, ஜெனிற்ரா, ஜெஸ்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பீலிக்ஸ், யாக்கோ ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற பர்னாந்து மற்றும் மங்களேஸ்வரி, செபஸ்தியம்மா, லூர்த்தம்மா, மணியம், யூசுப்(புத்தளம்), றெஜினா, கசியானுஸ்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சூசானா (ஜேர்மன்) காலஞ்சென்ற மிக்கேல், காலஞ்சென்ற மத்தியாஸ் மற்றும் பொன்னு அருளப்பு, லில்லிமலர்(நெடுந்தீவு), ஜெறினா(புத்தளம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை (23.01. 2016) முற்பகல் 10.00 மணிக்கு Liefrauen Kirche, Lebfrauenweg 259063 Hamm Germany என்னுமிடத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். நாளை (23.01.2016) சனிக்கிழமை பாஷையூர் புனித அந் தோனியார் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/2, 1ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

தகவல்: சின்னப்பு றெஜினா
075 0468 046 (சகோதரி)

## மீனவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.22

வடக்கு-கிழக்கு உள்ளிட்ட மீனவர்கள் வாழும் மீனவக் கிராமங்களைக் கொண்டுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் 100 வீடுகளைக் கொண்டுள்ள 101 வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக மீன்பிடி மற்றும் நீர் வளஅபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய 100 வீடுகள் அமையும் 101 மீனவ வீட்டுத் திட்டங்கள் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-ஜ-22)

**வாடகைக்கு 071 462 0806**

நல்லூர்ப் பகுதியில் அனெக்ஸ் (தனிஅறை, இணைந்த குளியலறை, சமையலறை) வாடகைக்குண்டு. 2 பெண்கள் மட்டும் வசிக்கலாம்.

(த/28545)(11.15.18)

**தேவை 078 521 0573**

நல்லூர்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சனி, ஞாயிறு கிழமைகளில் மட்டும் வீட்டுப் பணி செய்யக்கூடிய பெண் தொழிலாளர் தேவை.

(த/28546)(11.15.18)

**Majestic Cineplex Jaffna**

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30

விசாரணை ☎ 021- 2227712

facebook. CeylonTheatres

www.ceylontheatres.lk

**அறைகள் வாடகைக்கு விடப்படும்** தொடர்பு: **077 360 2285**

மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் படிக்கும் மாணவர்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு.

**இலவச சேவை**

Medi Help நிறுவனம் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 35 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்ட விதவைப் பெண்கள், உதவியற்ற, அநாதரவான பெண்கள் ஆகியோர் பாதுகாப்பான சூழலில் தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ வசதிகளுடன் பொருத்தமான தொழில் வாய்ப்பும் வழங்கப்பட்டு இலவசமாகப் பராமரிக்கப்படவுள்ளனர்.

077 712 6859, 071 823 4691 (த/28746)(11.15.18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி மாதுரி அரசகேசரி**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 19.01.2016 அன்று நடைபெற்ற 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி (BBA (Hons) Upper) பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட

**செல்வி மாதுரி அரசகேசரி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா- அ.இராதாமணி
அண்ணாமார் - அண்ணிமார்
அக்கா- அத்தான்
தம்பிமார்,தங்கை
K.டினுஜன், S.சமீரா.

நொத்தாரிஸ் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(த/28909)(11.15.18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருமதி நா.இராசலிங்கம்**

(BA(Hons) PGDE-(Distin), M.Ed 2nd Upper)



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்


**திருமதி நாகரோகிணி இராசலிங்கம்**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் 19.01.2016 அன்று நடைபெற்ற 31ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்வியியல்மாணி (M.Ed 2nd Upper) பட்டம் பெற்றமையையிட்டு உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர்.ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்

யா/கச்சாய் அ.த.க.பாடசாலை,
கொடிகாமம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



19.01.2016 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் **கல்விமுதுமாணி** (M.Ed) பட்டம் பெற்ற

**திரு அழகேந்திரராஜா சுபாகரன்**


(B.A(Hons) PGD in Edu(Distin), MEd (Hons), SLEAS - III,
உதவிக்கல்விப் பணிப்பாளர், மருகல்வி வலயம்

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, பெரியம்மா, சகோதர, சகோதரிகள்.

செட்டியார் வளவு, சுன்னாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில்

**மெய்யியல் துறையில் கலாநிதிப்**

பட்டத்தைப் பெற்ற யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் தரம் - I

கலாநிதி திருமதி **விக்கினேஸ்வரி பவநேசன்**

(B.A(Hons) First Class, M.Phil in Hindu Civilization, Ph.D.in Hindu Civilization, Doctor of Philosophy) அவர்களையும்

இதே பட்டமளிப்பு விழாவில்

**சைவசித்தாந்த முதுகலைமாணி**

பட்டத்தைப் பெற்ற விக்கினேஸ்வரி பவநேசனின் அன்புத் தம்பி

**திரு சிவசம்பு சிறிதரன்**

(B.A(Hons) - இந்துநாகரிகம்,
M.A - சைவசித்தாந்தம் ) அவர்களையும்

தொடர் கல்வி என்பதனையும் வாழ்நாள் பூராகக் கல்வி என்பதனையும் சாத்தியமாக்கியமைக்கு பாராட்டுவதுடன் கலைமகள் ஆசியுடன் கல்வியே கருந்தனம் என மேலும் சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.

பரமேஸ்வரன் பாரதி குடும்பத்தினர்.
(வன்னியிலிருந்து)
விசுவமடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திர வீராங்கனை கிவித்தோவா இரண்டாம் சுற்றுடன் வெளியேறுகிறார்

## அதிர்ச்சிகளை அள்ளிக் குவிக்கும் ஆஸ்திரேலியாவின் ரெனிஸ் தொடர்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் நம்பிக்கையான வீராங்கனையாக வலம்வந்த செக்குடியரசின் கிவித்தோவா இரண்டாம் சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

நடப்பு வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடராக ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் மெல்போர்ணில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தரப்படுத்தலில் ஆறாம்இடத்திலுள்ளகிவித்தோவாவை எதிர்த்து மோதினார் தரவரிசையில் 39ஆவது இடத்தில் உள்ள ஆஸ்திரேலியாவின் கவ்ரிலோவா. முதல் செற்றை 4:6 என்ற கணக்கில் கவ்ரிலோவா கைப்பற்றினார். அடுத்த செற்றையும் கைப்பற்றி விட்டால் கிவித்தோவாவை வீழ்த்திவிடலாம் என்ற காரணத்தினால் கவ்ரிலோவாவின் ஆட்டத்தில் அனல் தெறித்தது. ஆரம்பத்தில் கிவித்தோவா சிறிது ஈடுகொடுத்தாலும் நீண்ட நேரமாக அவரால் சமாளிக்க முடியவில்லை. முடிவில் 4:6 என்று இரண்டாவது செற்றையும் இழக்க 2:0 என்ற நேர் செற் கணக்கில் கவ்ரிலோவாவிடம் வீழ்ந்தார்.

நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியத் தொடர் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சித் தோல்விகளை தொடர்ச்சியாக தந்துகொண்டிருக்கிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நடால் முதல் சுற்றுடனேயே வெளியேறியிருந்தார். அதேபோல் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பிக்கையான வீராங்கனைகளான கேலெப், வீனஸ் வில்லியம்ஸ் இருவரும் தமது முதல் சுற்றுக்களுடன் வெளியேறியிருந்தனர். இந்த வரிசையில் இணைந்துள்ளார் கிவித்தோவா. (ம)

# இல்ல மெய்வன்மை போட்டிகள்

**மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை**

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்குக் குறித்த பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலைஅதிபர்ச.கிருஸ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி விமலா இரும்பக உரிமையாளர் த.ஜெயந்தனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய தொழில்வழிகாட்டல் அலுவலர் க.க.ஈஸ்வரன், கிராம அலுவலர் க.வாமதேவன், பொறியிலாளரும் பாடசாலையின் பழைய மாணவனுமாகிய வீ.துசானந் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிகளுக்குமுதன்மை விருந்தினராக தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் அகிலப் பெருமவும்,சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் ஆசிரிய இடமாற்றல் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் பெர்னாண்டோவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)

# கால்பந்தாட்ட தொடர்



யாழ்ப்பாணம். ஜன. 22

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்குஇடையிலான 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளன. முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் குறித்த இரு தினங்களும் காலை தொடக்கம் மாலை வரை ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. (ம-23)

# ஸ்ரான்லியை வீழ்த்தியது ஸ்கந்தா இன்னிங்ஸ் வெற்றியாகவும் பதிவு

யாழ்ப்பாணம், ஜன. 22

மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையில் இலங்கைப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஸ்ரான்லிக் கல்லூரி அணியை இன்னிங்ஸாலும் 107 ஓட்டங்களாலும் வீழ்த்தியது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி.

ஸ்ரான்லிக்கல்லூரிமைதானத்தில் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 245 ஓட்டங்களைப்பெற்றது. அதிகபட்சமாக கதியோன் 97 ஓட்டங்களையும், சயந்தன் 33 ஓட்டங்களையும், சாருசன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில். ஸ்ரான்லிக்கல்லூரிசார்பில் சஞ்ஜிவன், அருள் காந்தி இருவரும் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுஜிகரன் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில்கஞ்சேயன், அஜிந்தன் இருவரும்தலா 5 இலக்குகளை வீழ்த்தினர். பொலோஓன் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்ட ஸ்ரான்லி, இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 205 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கியது. இரண்டாவது இன்னிங்ஸிலும் தடுமாற்றம் தொடர சகல இலக்குகளையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெயகரன் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து விச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பில் கதியோன் 4 இலக்குகளையும் விதுசன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

# கே.கே.எஸ். அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 22

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (புளூஸ்) அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதிக் கொண்டது. இதில் கே.கே.எஸ். அணி 65:58 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 22

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்கிஜிரா அணியை எதிர்த்து யங்ஸ்ரார் சி அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதவுள்ளது.

**ஐக்கிய வி.கழகத் தொடர்**

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து சிறுப்பிட்டி ஜனசக்தி அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் உதயதாரகை அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி. ஸி.ஸி. அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில்
19.01.2016 செவ்வாய்க்கிழமை
நடைபெற்ற 31ஆவது
பொதுப் பட்டமளிப்பு விழாவில்
BBA (MKG) சிறப்பு வணிகமானிப்
பட்டத்தை பெற்ற

எமது அன்புக்குரிய செல்வி

## ஜனனி இளமுருகன்

அவர்களை மேலும் பல பட்டங்கள்
பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பெரியப்பா, பெரியம்மா, மாமாமார்,
மாமிமார், சித்தப்பா, சித்திமார்,
அம்மா, மச்சான்மார், மச்சாள்மார்
மற்றும் சகோதரர்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
## நவமணி ராஜகுமார்

B.A(Hons) Tamil Sp.1st Class, P.G.D.E,
M.Phil in Tamil, M.Ed (1st Class)

யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் ஆசிரியர், யாழ் யோக அரங்கமாணவி, நல்லைக் கந்தன் தண்ணீர்ப்பந்தல் சேவகி ஆகிய திருமதி நவமணி ராஜகுமார் அவர்கள் 19.01.2016 செவ்வாய்க்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 31 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப் பட்டம் M.Ed (1st Class - Batchtop) பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

171/1, அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடம், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ் யோக அரங்க நிறுவனம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 20.01.2016
புதன்கிழமை நடைபெற்ற 31ஆவது பொதுப்
பட்டமளிப்பு விழாவில்

B.A கலைமாணி சிறப்பு [தொல்லியல்]
பட்டம் பெற்ற எமது நண்பன்

## செல்வரத்தினம் ஸ்ரீகாந்தன்

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் மேலும் பல
பட்டங்களைப் பெற்று சிறப்புற
மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

மடத்தடி, சாவகச்சேரி

வாழ்த்துவோர்
V.V.S நண்பர்கள்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
20.01.2016 புதன்கிழமை நடைபெற்ற
31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில்

BFA நுண்கலைமாணிப்
பட்டத்தைப் பெற்ற
நாதஸ்வர வித்துவான் கலாபூசணம் ஈழநல்லூர்
P.S பிச்சையப்பாவின்
பேரனும்
திரு. திருமதி ரஜிந்திரன் வாசஸ்பதி
தம்பதியரின் புதல்வனுமாகிய அன்புச்
செல்வம்

## ர.சாகித்தியன்

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
M.S தெட்சணாமூர்த்தி (தவில்)
சிவா(உடுப்பிட்டி)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLEAS
SLAS
பிரதி ஞாயிறு
9.30-4.00 மணிவரை
வடமாகாண அலுவலர்
சனி, ஞாயிறு
10.00-4.30 மணிவரை
சட்டமாணி அனுமதி
சனி, ஞாயிறு
1.00-5.00 மணிவரை
மத்திய வங்கி உதவியாளர்
சனி, ஞாயிறு
9.00-3.00 மணிவரை
வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்.
பிரதி சனி 2.00மணி
T.P: 0766 883394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிபகுதில்)

# நெருப்பெடுக்கிறார் ஜோகோவிக்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் தனது இரண்டாவது சுற்று ஆட்டத்தில் நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் ஜோகோவிக்.

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களின் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடர் மெல்போர்ண் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவின் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் பிரான்சின் குயின்டின்முதல் இரு செற்களையும் முறையே 6:1, 6:2 என்ற கணக்கில் ஜோகோவிக்கால் இலகுவாக கைப்பற்ற முடிந்தாலும் மூன்றாவது செற் சிறிதுஅவருக்குசவாலாக அமைந்தது. இறுதியில் 7:5 என்ற கணக்கில் கைப்பற்ற முடிவில் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குமுன்னேறினார் ஜோகோவிக்.

CHEMISTRY CENTRE-INUVIL
(Sectional Classes)
இரசாயனவியல்
2017 A/L Science
இரசாயனக் கணிப்புக்கள், வாயுக்கள்
ஆரம்பம் 24.01.2016 (5.00pm)
2018 A/L Science
General Chemistry
English medium
Starts on 24.01.16 (5.00pm)
By.Mr. K.T. Shivakumar B.Sc.PGDE
Tel: 0779297344

Vacancy
English Language Lecturers-
Male/Female (Full time)
Qualification - ELT / HNDE / Experienced Lecturer
Basic Salary - 25,000/=
CV should be emailed at admin@elasjaffna.com
before 25th January 2016
ELAS Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.
Contact No - 076 697 3040, 021 221 2410

வெற்றித்தேர்வு பரீட்சைகள் ஆரம்பமாகிவிட்டன
வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு
2016ஆம் ஆண்டிற்கான வெற்றித்தேர்வு
தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகிவிட்டன.
தரம் 5 - 30 பரீட்சைகள். தரம் 4 - 25 பரீட்சைகள்.
அடுத்த பரீட்சை 24.01.2016 ஞாயிறு
ஞாயிற்றுக்கிழமைகளில் பின்வரும் நேரப்படி பரீட்சைகள் நடைபெறும்
காலை 6.00, 8.00, 10.00 மணி மாலை 2.00 மணி, 4.00 மணி
விரும்பிய நேரத்திற்கு பரீட்சைகள் எழுதலாம்.
வினாத்தாள்கள் திருத்தப்பட்டு விடையுடன் புள்ளிகள் வழங்கப்படும்.
அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோர்க்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.
சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.
உடன் பதிவுசெய்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
இடம்: சயன்ஸ் அக்கடமி, நல்லூர்
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக 100m தூரத்தில்)
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807

விசேட போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
SLAS
(OPEN/LIMITED)
(Sat - 9.00-2.00)
SLEAS
(OPEN/LIMITED)
(Sat - 9.00-2.00)
Feb-07ஆம் நடைபெறவுள்ள சட்டமாணி (LLB) போட்டிப்பரீட்சை
(Sat - 10.00-5.00)
Jan-31ஆம் நடைபெறவுள்ள மத்தியவங்கி உதவியாளர் போட்டிப்பரீட்சை
(Sat - 10.00-5.00)
[illegible]
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. சுமந்திரசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 077 469 6695

Rotary
யாழ்ப்பாணம்
றோட்டறிக் கழகத்தின்
பொங்கல் விழா 16'
காலம்:
23.01.2016
சனிக்கிழமை
மு.ப. 9.30 மணிமுதல்
இடம்:
யாழ். மாநகர
திறந்தவெளி அரங்கம்
(யாழ். பொது நூலகம் அருகில்)

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின்
பொங்கல் விழா - 2016
பிரதம விருந்தினர் :
Rtn. ஜோர்ஜ் ஜேசுநாதன்
(மாவட்ட ஆளுநர் - றோட்டறி மாவட்டம் 3220)
சிறப்பு விருந்தினர் :
Shri. ஏ.நடராஜன்
(துணைத்தூதுவர் - இந்திய துணைத்தூதுவராலயம்,
யாழ்ப்பாணம் )
கௌரவ விருந்தினர் :
திரு. நா.வேதநாயகன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் )
அனுசரணை: CONSULATE GENERAL OF INDIA தமிழர் கலாசாரக் கழகம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.